3233 (6466

உ

கணபதிதுணை.

3233. (6466
IX C. 18.

திருச்சிற்றம்பலம்.

# சைவ தூஷண பரிகாரம்.

இஃது

தமிழ் வழங்கும் நிலங்களில் உள்ள

சைவசமயிகள் சகலருக்கும்

எளிதில் உபயோகமாகும் பொருட்டு

யாழ்ப்பாணம்

வேதாகமோக்த சித்தாந்த

சைவப்பிரகாச சமாசியரவர்களால்

கத்திய ரூபமாகச் செய்ததை,

யாழ்ப்பாணத்து நல்லூர்

சதாசிவப்பிள்ளையவர்கள்

அநுமதியின்பேரில்

சென்னை மாஜி இந்துஜனபூஷணி பத்திராதிபரும்,

திருநெலவேலி ஜில்லா

எட்டயாபுரம் சமஸ்தான வித்வானுமாகிய

திருமயிலை

வி. சுந்தரமுதலியாரவர்களால்

சென்னை

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[இரண்டாம் பதிப்பு]

1910.

விலை அணா - 4.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIB.

# சூசிபத்திரம்.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| சைவப்பிரகாச சமாஜீய விக்கியாபனம் ... | ... 1 |
| கடவுள் வணக்கம், உபோற்காதம் ... | ... 15 |
| முதலாவது - பதிப்பிரகரணம் ... ... | ... 17 |
| இரண்டாவது - புண்ணியஸ்தலப்பிரகரணம் | ... 20 |
| மூன்றாவது - ஆலயப்பிரகரணம் ... | ... 23 |
| நான்காவது - இலிங்கப்பிரகரணம் ... | ... 24 |
| ஐந்தாவது - அபிஷேகப்பிரகரணம் ... | ... 28 |
| ஆறாவது - நைவேத்தியப்பிரகரணம் ... | ... 29 |
| ஏழாவது - தூபதீபப்பிரகரணம் ... | ... 30 |
| எட்டாவது - தீபப்பிரகரணம் ... | ... 32 |
| ஒன்பதாவது - வாத்தியப்பிரகரணம் ... | ... 33 |
| பத்தாவது - புண்ணியகாலப்பிரகரணம் ... | ... 34 |
| பதினோராவது - சிவாசாரியப்பிரகரணம் ... | ... 35 |
| பன்னிரண்டாவது - சரீரசுத்திப்பிரகரணம்... | ... 37 |
| பதின்மூன்றாவது - ஆசௌசப்பிரகரணம் ... | ... 38 |
| பதினாலாவது - நிபந்தத்திரவியப்பிரகரணம்... | ... 40 |
| விவேசனம். ... ... | ... 42 |
| பதினைந்தாவது - சிவசின்னப்பிரகரணம் ... | ... 46 |
| பதினாறாவது - தியாஜ்ஞதிப்பிரகரணம் ... | ... 47 |
| பதினேழாவது - நமஸ்காராதிப்பிரகரணம் ... | ... 48 |
| பதினெட்டாவது - சிவபுராணப்பிரகரணம் ... | ... 49 |
| பத்தொன்பதாவது - புண்ணியதீர்த்தப்பிரகரணம் | ... 50 |
| இருபதாவது - சுவர்ணதானப்பிரகரணம் ... | ... 52 |
| இருபத்தோராவது - அன்னதானப்பிரகரணம் | ... 54 |
| இருபத்திரண்டாவது - தவப்பிரகரணம் ... | ... 56 |
| விவேசனம் ... ... ... ... | ... 61 |
| சூசனம் ... ... ... ... | ... 87 |

32336466

ஸ்ரீ

வேதாகமோக்த சித்தாந்த

சைவப்பிரகாசசமாசிய

# விக்கியாபனம்.

அகிலலோக பூஷணமாய், அவித்தியாசோஷணமாய், அநாசாரபேஷணமாய், அநந்த சுகபோஷணமாய், அசேஷாரிகுல பீஷணமாய், ஆதிசச்சுருதி கோஷணந்தாங்கி அதுலசம்ஸ்கிருத பாஷணமோங்கி விளங்காநின்ற புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே, வடக்கின் கண்ணே திருவேங்கடமும், தெற்கின் கண்ணே குமரியும் எல்லையாகவுடைய திராவிடம் என்னுந் தமிழ்நாட்டின் கண்ணும், அத்தமிழ் நாட்டாரே பெரும்பான்மையுங் குடியேறப்பெற்ற ஈழதேசத்தின் கண்ணும், வசிக்கும்

சைவசமயிகளே !

அநாதிமலமுத்தராய், சர்வவியாபகராய், நித்தியராய், நித்தியாநந்தராய், சுவதந்திரராய், சர்வஞ்ஞராய், சர்வாநுக்கிரககராய், சர்வகர்த்தாவாய், அசலராய், சின்மாத்திரமூர்த்தியாய், அதுலராய், அதிசூக்குமராய், அதிமகானாய், சாந்தராய், சர்வதோமுகராய், நிருபாதிகராய், சுவபரப்பிரகாசராய், அதிபரமாப்தராய் உள்ள பரசிவனே, எம்மாற் சேவிக்கப்படும் பரமபதி.

அப்பரசிவனானவர், அநாதி சித்த மூலமலபெத்த பசுக்களாகிய ஆன்மாக்கண்மேல் வைத்த பெருங்கருணையினாலே, பஞ்சசத்திரூபபஞ்சமந்திர தநுமானாகிய சதாசிவனாய், பிரதம மகாசிருஷ்டியாரம்பத்திலே, முதனூலாகிய சுருதியை அருளிச்செய்தார். சுருதியாவது பரமாப்தரால் உபதேசிக்கப்பட்ட பாரமார்த்திக வாக்கியமாய், ஆன்மாக்களுக்குப் புத்தி முத்தி சாதநோபாய ஞாநத்தைப் போதிக்குஞ் சாஸ்திரமாம். அந்தச்சுருதி, சாமானிய விசேஷ பேதத்தால், வேதம் ஆகமம் என இரண்டு விபாகமாய் இருக்கும்.

அவற்றுள், வேதமானது இருக்கு யசு சாமம் அதர்வம் என நான்காம். இவை அற்பசுருதி வாக்கியம், பிரபலசுருதி வாக்கியம் என இருபகுதிப்படும். அவற்றுள், அற்பசுருதி வாக்கியம் கர்மானுட்டானக் கிரமங்களைச் சொல்லும். பிரபலசுருதி வாக்கியம் அத்தியான்மஞானத்தைச் சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிஷத்தாய் இருக்கும். இவ் வேதங்களுக்கு வழிநூல் சைவம் முதலிய புராணங்களும், ஸ்மிருதிகளுமாம். சார்புநூல் கற்ப சூத்திரம் முதலிய அங்கங்களாம்.

ஆகமமானது காமிகம் யோகஜம் சிந்தியம் காரணம் அசிதம் தீப்தம் சூக்குமம் சகச்சிரம் அஞ்சுமான் சுப்பிரபேதம் விசயம் நிசுவாசம் சுவாயம்புவம் ஆக்கினேயம் வீரம் இரௌரவம் மகுடம் விமலம் சந்திரஞானம் முகவிம்பம் புரோற்கீதம் லளிதம் சித்தம் சந்தானம் சர்வோக்தம் பாரமேசுரம் கிரணம் வாதுளம் என இருபத்தெட்டாம். இவ்வாகமங்கள் மந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தமெனவும் பெயர்பெறும். இவை சதாசிவனால் அநந்தேசுரருக்கும், அநந்தேசுரரால் ஸ்ரீகண்டருக்கும், ஸ்ரீகண்டரால் தேவர்களுக்கும், தேவர்களால் முனிவருக்கும், முனிவர்களால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும் உபதேசிக்கப்படும். இங்ஙனம் முறைமைத்தாக்கப் படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும், முறையே பரசம்பந்தம் மகாசம்பந்தம் அந்தராள சம்பந்தம் திவ்விய சம்பந்தம் திவ்வியாதிவ்விய சம்பந்தம் அதிவ்விய சம்பந்தம் எனப்பெயர் பெறும். இவ்வாகமங்கள் தனித்தனியே, ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதம் சரியாபாதம் என நான்கு பாதங்களையுடையனவாயிருக்கும். அவற்றுள், ஞானபாதம் பதிபசுபாசமென்னும் திரிபதார்த்தங்களின் சொரூபத்தையும், யோகபாதம் பிராணாயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகத்தையும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமம் என்பனவற்றையும் சமய விசேஷ நிர்வாண ஆசாரியாபிஷேகங்களையும், சரியாபாதம் சமயாசாரங்களையும் உபதேசிக்கும். இவ்வாகமங்களுக்கு வழிநூல் நாரசிங்கம் முதல் விசுவான்மகம் ஈறாகிய உபாகமங்கள் இருநூற்றேழாம். சார்புநூல் இரத்தினத்திரயம் மோக்ஷகாரிகை பரமோக்ஷ நிராசகாரிகை முதலிய பிரகரணங்களாம். இச்சாத்திரங்களெல்லாம் மூலபாஷையாகிய சமஸ்கிருதத்தில் உளவாம்.

நமது தமிழ்நாட்டினருக்கு உபயோகமாகும் பொருட்டு; திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமயகுரவர்கள்

நால்வராலும் வேதங்களின் அர்த்தத்தைப்பெரும்பாலும் அநுசரித்து அருளிச்செய்யப்பட்ட தேவாரம் திருவாசகம் என்னுந் திராவிட வேதங்களும், மெய்கண்ட தேவர் முதலிய சிவானுபூதிமான்களால் ஆகமங்களின் அர்த்தத்தை யனுசரித்து அருளிச்செய்யப்பட்ட சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய திராவிட சித்தாந்தங்களும், உளவாம்.

இந்நூல்கள் எல்லாவற்றாலும் உணர்த்தப்படும் சைவமே சற்சமய லக்ஷணங்களெல்லாங் குறைவற அமைந்த சத்திய சமயமென்று சுருதி யுத்தி அனுபூதிகளாலே நிச்சயித்து, ஆதிகாலந் தொடங்கிப் பரதகண்டத்திலுள்ள நமது முன்னோர்களாகிய சகல மகான்களும் அதனையே அங்கீகரித்துக்கொண்டுவந்தனர். அவ்வாறே நாமனைவரும் அந்தச்சைவமே சற்சமயமென்று நிச்சயித்து, அங்கீகரிக்கின்றோம். அங்ஙனமாக.

இப்பொழுது, சிலகாலத்துக்குமுன்னே, இங்கிலாந்து அமரிக்கா என்னுந்தேசங்களிலுள்ள துர்ப்பலராகிய சிலமிஷேனரிகள் ஒருங்குதிரண்டு, அந்நாட்டிலுள்ள சனங்களிடத்திலேபோய், பரதகண்ட வாசிகளுக்குச் சமயக்கிரமம் ஒன்றும் விளங்காதென்றும், தாங்கள் அவர்களைத் திருத்தல்வேண்டுமென்றும், கபடமாகத் தெரிவித்து, இரக்கங்காட்டி, காலந்தோறும் பலபொருளனுப்ப உடன்படுத்தி, தாங்கள் பாதிரி நியோகத்தைப் பெற்றுக்கொண்டு, இந்தப் பரதகண்டத்திலே புகுந்து, எங்கள் சமயத்தின்மகிமையை அறியாமையாலும், தாம் பிடித்த துரபிமானத்தினாலும், எளிதிற் பெரும்பொருள் பெறும்வழி வேறின்மையாலும், இக்கலியுகத்திலே மோசேமுதலிய பலபெரும் பாதக சிரோமணிகளாலே கற்பிக்கப்பட்டதாய்ப் பரசிவ பந்த லக்ஷணங்களையும் முத்திஸ்வரூபத்தையும் முத்திசாதனோபாயத்தையும் பிறவற்றையும் சிறிதாயினும் உள்ளபடி விளக்காததாய் இருக்கும் நூதனமதமாகிய தங்கள் கிறிஸ்துசமயத்தை இங்கே பரப்பும்படி, முயன்று திரிந்தார்கள்.

அந்தப் புன்மதத்தை இங்குள்ளாரொருவரும் அங்கீகரியாமையை அறிந்து, ஒரு சூழ்ச்சி செய்துகொண்டு, இக்காலத்திலே சீவனத்துக்குப் பெரும்பாலும் வேண்டும் பாஷையாகிய இங்கிலிஷைப் படிப்பித்தும், ஒவ்வோர் நியோக வியாசத்தாற் பொருள் கொடுத்தும், சற்புத்தியுஞ் சமய பத்தியுமில்லாத சில ஏழைச்சனங்களைத் தங்கள் வசமாக்கினார்கள். அந்தச்சனங்கள், முன்னே தாங்கள் அனுஷ்டித்த சைவநிலையை

விட்டமையாலும், பின்னர்த் தாங்கள் சார்ந்த கிறிஸ்துமதத்தைப் பொருள் வாஞ்சைபற்றிப் புறங்கொண்டதன்றிச் சிறிதும் உட்கொள்ளாமையாலும், உபயசமயப் பிரஷ்டராய், எரிவாய் நரகத்திற்கு ஆளாயினார்கள்.

இன்னும், அப்பாதிரிகள் பணச் செருக்கினாலும், மதிமயக்கத்தினாலும், சற்றுங்கூசாமல், சிவன் கடவுளல்லரென்றும், அவர் பிசாசென்றும், வேதாகமங்கள் பொய்ந்நூலென்றும், சைவசமயம் துர்மார்க்கமென்றும், சைவர்கள் அஞ்ஞானிகளென்றும், அவர்கள் பிசாசின் அடிமைகளென்றும், பெருந்தூஷணங்களைப் பேசித் திரிந்து, குருட்டுவழி மும்மூர்த்திலக்ஷணம் துராசார விருத்தாந்தம் முதலிய பல தூஷண புத்தகங்களையும் அச்சிற் பதிப்பித்துப் பரப்பி, சைவநூல்களினுண்மையை உணராத சில பேதைகளை மயக்கிக் கெடுக்கின்றார்கள்.

சிவனொருவரே பரமபதியென்றும், சைவமே சற்சமயமென்றும், துணிந்த சைவர்களாகிய நாங்கள், மேற்கூறியவாறே இந்தப் பாதிரிப்புல்லர்கள் செய்யும் சிவதூஷணம் சிவசாஸ்திர தூஷணம் சிவகாரிய தூஷணம் முதலிய அதி பாதகங்களைக்கண்டும் அவர்களைக் கண்டியாது மௌனமாக விருத்தலும், அவர்களால் ஆரோபிக்கப்படுந் தூஷணங்களை, சைவநூலுணர்ச்சி சிறிதுமின்மையால், மெய்யென்று மயங்கி, அவர்களுடைய கிறிஸ்துமதப் படுகுழியிலே சிலர் வீழ்ந்து கெடுதலைக் கண்டும் அத்தூஷணங்களைப் பரிகரித்துச்சைவத்தின் மகிமையை யுபதேசித்துக் கிறிஸ்து சமயத்தை நிராகரியாது வாளாவிருத்தலும், அதிபாதகமேயாம்.

முதல்: சிவதூஷணம் முதலியனசெய்தலும், அவற்றைக் கேட்டுக்கொண்டு வாளாவிருத்தலும், அதியாதகம் என்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

சர்வோக்தம் என்னும் சிவாகமத்தின் உபபேதம்
ஐந்தனுள் ஒன்றாகிய சிவதருமோத்தரம்,
ஆறாவது பாவவியல்.

தாரகன் றன்னைச் சாதத் தடங்கடற் றளர்வார் தம்மைப்
பாரகன் றனையும் பாரும் படைத்தவன் றனையும் பாங்
காரகன் றன்னை வாங்குங் கடவுளைக் கயந்தநெஞ்சர் [காற்
நாரகர் மீளா நாளும் பிறிதிய னவிற்று வாமே.

(இ-ள்.) பிறவியாகிய பெரிய கடலின் கண் அமிழ்ந்தி வருந்துவோரை (அக்கடலினின்றும்) கடப்பிப்பவராயும் (உலகத்தைக்) காக்கும் விஷ்ணுவையும், பூமியையும் (பிற உலகங்களையும்) படைக்கும் பிரமாவையும், முறைவழுவாமல் சிருட்டிப்பவராயும், சங்கரிப்பவராயும் உள்ள பரமசிவனை இகழ்ந்த மனத்தினையுடையவர்கள் நரகத்தின் கண்ணே நெடுங்காலம் கிடப்பார்கள். (அவர்கள் அங்கே அநுபவிக்கும் யாதனையையும்,) அந்நரகத்தினின்று திரும்புங்காலத்தையும், மேல்வருஞ் சுவர்க்க நரகவியலின் கண்ணே சொல்வாம். எ - று

ஒப்பிலி யநாதி முத்த னோதிய வேத யாதிக் [ரும்
கொப்புயர் வுரைப்பார் நிந்தை யுரைப்பவ ருன்னுவா
வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்துவெந் துருகிவீயார்
எப்பொழு தேறுவாமென் றிளைத்திளைத் தேங்குவாரே.

(இ-ள்.) தமக்கு நிகரில்லாத அநாதி மலமுத்தராகிய சிவன் அருளிச்செய்த வேதாகமங்களுக்கு ஒப்பாகவேனும் உயர்வாகவேனும் பிறிதொருநூலைச் சொல்லுவோரும், (அவ்வேதாகமங்களை) நிந்தைசொல்வோரும்,(நிந்தையை மனதினாலே) நினைப்பவரும் வெம்மையையுடைய எரிவாய் நரகத்தின் கண் வீழ்ந்து, (உடம்பெல்லாம்) வெந்து, (ஊனெய்யெல்லாம்) உருகி, (இங்ஙனம் துயருறவும்,) (அந்த யாதனாசரீரத்தினின்றும்) நீங்காராகி, (இந்நரகத்தினின்றும்) எக்காலங் கரையேறுவோமென்று வாடிவாடி ஏக்கமடைவார்கள். எ-று.

ஒப்பிலா வநாதி முத்த னோதிய பனுவ லோர்ந்து
தப்பறச் சாற்று மாசான் றன்னையு மிகழ்ந்து சாற்றில்
வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்துவெந் துருகிவீயார்
எப்பொழு தேறுவாமென் றிளைத்திளைத் தேங்குவாரே.

(இ - ள்.) தமக்கு நிகரில்லாத அநாதிமலமுத்தராகிய சிவன் அருளிச்செய்த வேதாகமங்களை அறிந்து சந்தேகவிபரீதமறப் போதிக்கு மாசாரியரையும் இகழ்ந்து பேசுவார்களாகில், அவர்களும் வெம்மையையுடைய எரிவாய் நரகத்தின் கண் வீழ்ந்து, (உடம்பெல்லாம்) வெந்து, (ஊனெய்யெல்லாம்) உருகி, (இங்ஙனம் துயருறவும், அந்த யாதனாசரீரத்தினின்றும) நீங்காராகி, (இந்நரகத்தினின்றும்) எக்காலங் கரையேறுவோமென்று வாடி வாடி ஏக்க மடைவார்கள். எ-று.

அரன்றிர வியத்தை யபகா னரும்பொரு ளதனை
யார்க்கும், பரம்பரன் பகர்ந்த வாக்கைப் பழித்தபுத்
தகத்தைப் பற்றிச், சுரந்தவர் முன்னஞ் சொன்ன சரி
சர்க ளொருமூ வர்க்கும், வரும்பல முடையர் பாவ
மனைத்தையு மருவி னோரே.

(இ-ள்.) சிவத்திரவியத்தையும், அருமையாகிய குருத்திர வியத்தையும், யாவருக்கும் மேலாகிய சிவன் அருளிச்செய்த திருவாக்கை எழுதிய திருமுறையையும் விரும்பிக் களவுசெய் தவர்கள் முற்கூறிய (சிவநிந்தகர் வேதாகமநிந்தகர் குருநிந்தகர் என்றும்) மூவர்களுக்கும் வருந் தீவினைப்பயன்களை உடையவராவர். (அதுவுமன்றி,) எல்லாப் பாவத்தையுஞ் செய்த வருமாவர். எ-று.

அறைந்த விவர்க ளனைவர்களு மதிபா தகரே
யெனவறிக, சிறந்த வினையே தீவினையு ளதிபா தகந்தா
னெனத்தெளிக, நிறைந்த துயரே நெடுநாளே யிதனிற்
பலமு மெனநினைக, பிறிந்த வதிபா தகபேதந் தனையு
மினியாம் பேசுவமே.

(இ-ள்.) (இங்ஙனம்) கூறிப் போந்த சிவநிந்தகர் முதலிய இவர்களெல்லாரும் அதிபாதகர்களென்றறியக் கடவாய்; இவ் வதிபாதகமே சகல பாவங்களுள்ளும் அத்தியந்த கோரபாவ மென்று உணரக்கடவாய்; இவ்வதிபாதகத்தினால் வருந் துயர முற் பெருந்துயரென்றும் அதை அனுபவிக்குங்காலமும் நெடுங்காலம் என்றும் சிந்திக்கக்கடவாய்; இதன் கூறாகிய அதிபாதகபேதத்தையும் இனியாம் சொல்வாம். எ-று.

வேதம், மந்திரம்:—மொழிபெயர்ப்பு.

“சனங்களிடத்து (அந்தரியாமியாய் நிற்கும்) பரனாகிய
அந்த உருத்திரனைப் புத்தியினால் உள்ளே பற்றுபவர்கள்
சசியத்தை நாவினாலே கிரகிப்பவர்கள்.”

(இ-ள்.) பரன் - எல்லாரினும் உயர்ந்தவன். உருத்திரன் - (ஆணவமாகிய) நோயை ஓட்டுபவன். சசியம் - தானியம். அதற்கு இங்கே தானியவிகாரமாகிய அன்னம் எனப் பொருள் கொள்ளப்படும். குதர்க்க தோஷிகளாய் அவ்வுருத் திரனை உள்ளேபற்றாதவர்கள் மலத்தையே நாவினால் கிரகிப்

3233
(6466)

விக்கியாபனம்.

பர்கள் என்பது அப்பிரஸ்துதப் பிரசம்ஸா லங்காரத்தாற் பெறப்படும். இதற்கு உபவிருங்கணம் வருமாறு;—

பாராசரஸ்மிருதி:—மொழிபெயர்ப்பு.

நற்றவைப் புருத்திர நாய கன்றனைப்
பெற்றிடு புந்தியாற் பெரித கத்திடைப்
பற்றிடு வோர்கிதம் பரிந்து நாவிறைற்
குற்றமி லெழுத்தினைக் கொள்ளு வார்களால்

உற்றிடு முறைபுண ருருத்தி ரன்றனைப்
பெற்றிடு புந்தியாற் பெரித கத்திடைப்
பற்றிடாத் தீயர்கள் பரிந்து நாவினுற்
குற்றமா மலத்தினைக் கொள்வ ருண்மையே.

இங்கே முதற் செய்யுளால் மந்திரத்தின் வாச்சியார்த்தம் காட்டப்பட்டது. இரண்டாஞ் செய்யுளாலோ கம்மியார்த்தம். இது இங்கே மறுதலைப்படுதலால், சிந்திக்கப்படும் சிவனம் எனப் பொருள் படும்.

திருவாசகம், அச்சப்பத்து.

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினுமஞ்சேன், இருவரால் மாறு காணா வெம்பி ரான் றம்பி ரானாய், திருவுரு வன்றி மற்றோர் தேவ ரெத் தேவ ரென்ன, அருவரா தவரைக் கண்டா லம் மநா மஞ்சு மாறே.

கந்தபுராணம், உமைவருபடலம்.

முண்டக மிசையினன் முகுந்த னாதியே
பண்டுணர் வரியதோர் பரனை யாதியாக்
கொண்டில ரென்னிய கொடுமை யோர்க்கெலாந்
தண்டம்வந் திடுமென மறைகள் சாற்றுமால்.

கூர்மபுராணம், பிராயச்சித்த முரைத்தவத்தியாயம்.

திங்களங் கண்ணி வேய்ந்த செல்வனை யிகழ்ந்த பாவ
மிங்கிது தன்னிற் றீரா தெண்ணாறும் விரத மாற்றிம்

பொங்கழ னுப்பனி வைகி யருந்தவம் புரிந்திட்டாலும்
மங்கவ னருளி லன்றித் தீர்ந்திட லரியதாமால்.

சித்தாந்தசிகாமணி, பக்தஸ்தலம்.

கண்டன னாயின் முக்கட் கடவுளை நிந்திப்போனைத், தண்டனை புரிந்து கொல்க வரிதெனிற் * சமிக்க நின்றி, மண்டனில் வலிய னன்றேல் வான்செவித் துணைகள் பொத்திக், கொண்டவ னகன்று செல்க குலைகுலைந் தமல பத்தன்.

ஏயுமா சார நிந்தை யாண்டுள தவ்வி டத்திற், போயுற லொழிக வென்றும் புகல்சிவ நிந்தை செய்வோன், றீயக முறுது நிற்க சிவநிந்தை யவர்க்கு நாறுண், டாயினும் பரிகா ரஞ்செய் தகற்றிடற் கரிது மாதோ.

இன்னும், தக்கன் சிவதூஷணம் செய்தபொழுது, அச்சத்தினாலும் பொருளாசையாலும் அதனைக்கேட்டுக்கொண்டு மௌனமாக இருந்த தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர், வீரபத்திராலே தண்டிக்கப்பட்டு, பின்னர்ச் சூரன் முதலிய அசுரர்களாலே நூற்றெட்டுகம் வருத்தமடைந்தனர் என்னும் சரித்திரம் கந்த புராணத்திலே விஸ்தரிக்கப்பட்டமை தெளிக.

உ: பரசமயங்களை நிராகரியாமையும்; சைவத்தை ஸ்தாபியாமையும் பாதகம் என்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

சிவதருமோத்தரம், பத்தாவது சிவஞான
யோகவியல்.

நிறுத்திடவல் லானபல னுனெறியை யென்றும்
மறுத்திடவல் லானவல மார்க்கமய லுற்றே
நிறுத்திலன்ம றுத்திற னெனிற்கரிச னேசம்
அறுத்தவனை யாகைகரி சல்லவற மாமே.

(இ-ள்.) என்றும் அவலமார்க்கம் மறுத்திடவல்லான் - எக்காலத்தும் குற்றம்பொருந்திய புறச்சமயங்களை நிராகரித்

* சமித்தல்—தடுத்தல்.

தற்கு வல்லவனும், அமலன் நூல் நெறியை நிறுத்திடவல்லான் - அநாதிமல முத்தனாகிய சிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயத்தைத் தாபிக்க வல்லவனுமாயிருப்பவன், (அப்புறச்சமயிகள் சைவத்தைத் தூஷித்துத் தங்கள் மதத்தைச் சாதிக்கவந்த விடத்தும்) மயல் உற்று - (அவர்களுக்கு அஞ்சுதலினாலேனும், அவர்கள் மேற்கொண்ட நண்பினாலேனும், அவர்களைப் பிரீதிப்படுத்திப் பொருள்பெற விரும்புதலினாலேனும்) மயக்கம் பொருந்தி, மறுத்திலன் நிறுத்திலன் எனில் - அவர்களுடைய சமயத்தை நிராகரியாதவனும் தனது சைவத்தைத் தாபியாதவனுமாய் இருப்பானாகில், கரிசன் - அதிபாதகனாவன், நேசம் அறுத்து அவனை மாறுகை கரிசு அல்ல அறமாமே - (அந்த அதிபாதகனிடத்து வைத்த) நேசத்தை ஒழித்து, அவனைச் சீயென்று வெறுத்தல் குற்றமன்று; அதுவே பரமமாகிய தருமம், எ-று.

ஸ்ரீமத் அப்பதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேகவிருத்தியில் உத்தரிக்கப்பட்ட சுலோகத்தின் மொழிபெயர்ப்பு.

நிகரறுநற் சிவதருமஞ் சிவஞானத்தை
  நிறுத்திடுவோ னிலுமுயர்ந்தோ னில்லை
பகர்பரம சிவயோகி யவனே யாகும்
  பரிவினிறுத் திடுமாற்றல் படைத்து முய்த்தி
யகலுமய லானிறுத்தா தொழிந்தோன் யோகி
  யாயினுமீ சுரப்பிரிய னல்ல னன்றான்
புகருறுதீ நரகினிடை வீழ்ந்து புன்கண்
  பொருந்திடுவ னெனமறைகள் புகலு மன்றே.

இப்படியே சிவசாத்திரங்கள் செப்புகையால், சிவதூஷணம் முதலிய பாவங்களைச்செய்யும் அஞ்ஞானிகளாகிய பாதிரிகளைக் கண்டித்தலும், அவர்களுடைய புன்மதமாகிய கிறிஸ்து சமயத்தைப் பல பெரு நியாயங்களினாலே நிராகரித்தலும், சற்சமயமாகிய நமது சைவத்தை அதிப்பிரபலப் பிரமாணங்களினாலே வியவஸ்தாபித்தலும் மிக அவசியமாகச் செய்ய வேண்டிய உயர் வொப்பில்லாத சிவ புண்ணியங்களாம்.

இதற்கு, நீங்கள் இதுவரையினுங் கூறியது சத்தியம் ஆயினும், நம்மை ஆளும் இங்கிலிஷார் கிறிஸ்து சமயானுசாரிகள்

ஆகையால், நாம் தங்கள் சமயத்தைக் கண்டிக்கவும் நமது சமயத்தை ஸ்தாபிக்கவும் புகுங்கால், எம்மேற் குரோதங் கொள்வார்களன்றோ? அதற்கு நாம் யாது செய்வோம்? என்பீர்களாகில்; சுவதந்திரராகிய சிவன் நாம் செய்த வினைகள் எல்லாவற்றையும் ஒருங்குணர்ந்து, அவ்வினைகளுள் இன்ன காலத்திலே இன்ன வினையை அநுபவிக்கப் பண்ணுவோம் என்று நியமித்து, ஊட்டுமாறன்றி, இவ்விடத்துப் பரதந்திரராகிய பிறர் ஒருவரால் நமக்கு ஓர் தீதுவந்தடையாது; அது,

"இன்னவினை யின்னதலத் தின்னபொழு தின்னதனு
லின்னபடி யாய்ப்பொருந்துமென் றறிந்தே-யன்னவினை
யன்னதலத் தன்னபொழு தன்னதனு லன்னபடி
பின்னமரக் கூட்டும் பிரான்."

என்பதனால் அறிக. நம்மை ஆளும் 'ஆற்றலுள்ள நாயராகிய அரசர்களால் எமக்கு ஓர் தீது உறுதா எனில்; அச்சிவன் சர்வலோகைக நாயகராதலால், அவரையன்றி இவர் ஒருதீது செய்தல் கூடாது; அது, "அரசனுஞ்செய்வ தீசனருள்வழி" என்பதனாலறிக. அங்ஙனம் சர்வலோகைக நாயகராயினும், அவரறியாமல் இவர்தீதுசெய்தல் கூடாதாவெனில் அச்சிவன் அநாதிசித்த சருவஞ்ஞர் ஆகலால், அவர் அறியாமல் இவர் தீது செய்தல்கூடாது. அவர் அறியாமல் இவர்செய்தல் கூடாதாயினும், இவர் தீதுசெய்யுமிடத்து அவர்வந்து தடுப்பாரா? எனில்; அவர் பரிபூரணர் ஆதலால், அவரைவிட்டு இவர் இருத்தற்குஞ் செய்தற்கும் இடமேயில்லை. ஆதலால், பரமேசுரனாகிய சிவனே தீவினைக்கு ஈடாக ஒருதீது தருவார் எனில், அதனை யாவர் நீக்கிக்கொள்வார்? ஒருவருமில்லை. ஆகையால் நம்மினும் நமக்கு இனியராகிய சிவன்ஒருவரே நமக்குத்துணை. அது "ஈசனே காப்பி னல்லால் யாரையும் பிறராற் றம்மா-லாசறப் போற்ற லாகா ததுதுணிவாகும்." என்பதனால் அறிக. இங்ஙனம் இருத்தலானும், அச்சிவனே பரமத நிராகரணமும் சைவஸ்தாபனமும் ஆகிய சிவபுண்ணியத்தை விதித்தவராதலானும், அப்புண்ணியஞ் செய்பவர்களுக்கு யாதோரிடரையும் வருவியாது பேரருள் புரிவரென்பது நிச்சயம்.

இன்னும், இங்கிலிஷரசினர், கிறிஸ்தவர்களாயினும், தாம் ஆளுந் தேசங்களெங்கும் உள்ளார்க்கு, தம்மாலும், தமது பரிவாரத்தாலும், பகைவராலும், திருடராலும், உயிர்களாலும், வாழ்பாலனவாகிய ஐந்து பயத்தையும் நீக்கி, எல்லாச்சமயி

கட்கும் ஒப்பமுடிந்த சாமானிய தருமத்தைப் பரிபாலனம் பண்ணுபவர்களன்றி, சுவசமயாபிமானம் பற்றிப் பக்ஷபாதிகளாய், மற்றை சமயங்களிலுள்ள விசேஷ தருமங்களுக்கு, பூருவகாலத்திருந்த சமணர் பௌத்தர் மகம்மதீயர் முதலியவர்கள்போல சிறிதாயினும் இடையூறு செய்பவர்களல்லர். துரபிமானமும் பொருளாசையும் விபரீதசிந்தனமும் அநீதியுமேநிறைந்தபாதிரிகள் மானிப்பாய் முதலியஇடங்களிலுள்ள நமது தேவாலயங்களுக்கு இடையூறு செய்யும்படி பலதரம் முயன்றமையை அறிந்து, கல்வியினும் அதன் பயனாகிய அறிவினும் அதன்பயனாகிய நீதியினும் சிறந்து விளங்கும் நமது இங்கிலிஷரசினர், அவ்விடையூறு வாராமல் நீக்கிக் காத்துக்கொண்டு, நீங்கள் இன்னும் இவ்வாறு பிறசமயிகளுக்கு இடையூறுசெய்ய முயல்வீர்களேனில், நாம் உங்களை இந்நாட்டினின்றும் ஒட்டிவிடுவோமென்று அப்பாதிரிகளுக்குத் திக்காரதண்டஞ் செய்தமையே அதற்குச் சான்றாம்.

இனி, இவ்வரசர்களால் நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இந்தச் சரீரத்துக்கு ஓர் தீதுவருமெனினும், விருத்தநிலையுள்ளதாகிய ஆன்மலாபத்தின் பொருட்டு, பிராணத்தியாகம் பண்ணியும், சைவஸ்தாபனம் பண்ணுதலே அத்தியாவசியகம், நாம் காத்தல்வேண்டுமெண அவாவும் இச்சரீரத்தை நாம் பெற்றது முத்திபெறும் பொருட்டன்றோ? சிவதூஷணம் முதலிய அதிபாதகங்களைப் பரிகரித்தற் பொருட்டுச் சரீரத்தை விடுத்தவர் முத்திபெறுதல் சத்தியமென்பது சிவசாத்திரங்களாலே சாதிக்கப்பட்டதன்றோ? அங்ஙனமாதலின், நாம் சிவதூஷணம் முதலியவற்றைப் பரிகரிக்குங்கால் ஒரோவழி வாற்பாலதாகிய சரீரநாசத்தை ஏற்றுக் கோடலினாலே முத்திபெறுவேமென்பது சத்தியமாமே. அங்ஙனமெனில், முத்தியாகிய சாத்தியம் சித்தித்தவழி இச்சரீரமாகிய சாதனம் இருந்தென்? ஒழிந்தென்?

ஆதலால், நாங்கள் நித்தியாநந்தமாகிய முத்தியையே பெறல்வேண்டுமெனத் துணிந்து, பரதந்திரராகிய இவர்களுக்கு அஞ்சி இதத்தைச்செய்யினும், இவர்களாற் சிறிதுங் காக்கப்படாது, "வினைப்போக மேயுமுந் தேசங்கண் டாய்வினை தானொழிந்தாற் - றினைப்போ தளவுநில்லாது." எனச் சான்றோர் கூறியவாறே விழுவதாகிய இச்சரீரத்தின்மேல் ஆசையினாலே இவர்களுக்கு அஞ்சாமல், சுவதந்திரபதியாகிய பரசிவனுக்கே அஞ்சி, அவரை அனுசந்தானம் பண்ணி, அவருடைய திருவருளையே முன்னிட்டுக்கொண்டு, சிவதூஷணம் முதலி

யன செய்யும் பாதிரிகளைக்கண்டித்து, அவர்களுடைய புன்மதமாகிய கிறிஸ்துமதத்தை நிராகரித்துவிட்டு, சற்சமயமாகிய சைவத்தை ஸ்தாபிக்கும்படி முயலக்கடவோம்.

நாங்கள் முயலும் இச்சிவபுண்ணியம் அவசிய கர்த்தவ்வியமாகிய உலோகோபகாரமாதலானும், செய்தல் செய்வித்தல் உடன்படல் என்னும் மூன்றும் ஒக்குமாதலானும், நீங்கள் யாவரும் இப்புண்ணியம் சபலமாகும்பொருட்டு, உபகாரகர்களாய் இருத்தல்வேண்டும். நீங்கள் உபகரிக்குமாறு கூறுதும்.

க. நீங்கள் எல்லாரும், தினந்தோறும், சந்தியாவந்தனம் சிவபூசை சிவதரிசனம் முதலியன செய்யும்பொழுதெல்லாம், வேண்டுவார் வேண்டியதே ஈயும் பரமகாருண்ணியசாகரமாகிய பரசிவனை, அழலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, கண்ணீர் சொரிய, அன்பினோடு சிந்தித்துத் துதித்து வணங்கி, கிறிஸ்துமதத்தை நிராகரித்துச் சைவஸ்தாபனம் பண்ணுதலாகிய இச்சிவபுண்ணியம் நிர்விக்கினமாய் நிறைவேறும்பொருட்டு அருள்செய்யுமென்று, பிரார்த்தித்தல் வேண்டும்.

உ. இச்சிவபுண்ணியஞ் செய்தற்குச் செல்வப்பொருளும் இன்றியமையாக் கருவியாய் இருத்தலால், நீங்கள் எல்லாரும் சிறிதாயினும் உலோபமின்றி, உங்களுங்களாலியலும் பொருளுதவி காலந்தோறும் செய்தல்வேண்டும்.

ங. அப்பொருள் கொண்டு நாங்கள் அச்சிற்பதிப்பிக்கும் புத்தகங்களை, நீங்களெல்லோரும் வாங்கி, சித்த சமாதானத்துடனே பலமுறை வாசித்துணர்தல்வேண்டும்.

ச. நீங்கள் வாசித்தவற்றைப் * பிறருந் தெள்ளிதின் அறியும்படி உணர்த்தி, நமது சமயிகள் கிறிஸ்துசமயப் படுகுழியில் வீழாதொழியும்படி, சாவதானமாகக் காத்துக்கொள்ளல்வேண்டும்.

ரு. பாதிரிகளாயினும் அவர்களைச் சேவிக்கும் பரிசனங்களாயினும் சைவதூஷணஞ்செய்து கிறிஸ்துமதத்தைச் சரீதிக்கலுந்தால், அவர்களைப் பிரீதிப்படுத்தல் வேண்டுமென்னுங் கருத்துச் சிறிதுமின்றி, எதிர்த்து நின்று, சைவத்தின்மேல் அவர்கள் எற்றுந் தூஷணங்களைப் பரிகரித்து, அவர்களுடைய மதத்தைக் கண்டித்து, அவர்கள்வாயை அடக்கிவிடல் வேண்டும்.*

௬. நீங்களெல்லாரும் உங்களுங்கள் பிள்ளைகளை, பரசமயிகளோடு பரிசயம் பண்ணவிடாமல், தகுந்த பருவத்திலே சிவதீக்ஷை பெறுவித்து, அவரவர் பக்குவத்துக்கு ஏற்ப, சைவநூல்களை, தகுந்த ஆசிரியரைக்கொண்டு, ஐயந்திரிபறக் கற்பித்து, சைவாசாரங்களை அனுஷ்டிப்பித்தல் வேண்டும்.

௭. நிகண்டு இலக்கணம் தருக்கம் முதலிய கருவிநூல்களிலும், திருவள்ளுவர்குறள்முதலிய நீதிநூல்களிலும் வல்லவர்களாய், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களையே செய்பவர்களாய், சிவதீக்ஷை பெற்றவர்களாய், தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்னும் அருட்பாவைந்தையும் அத்தியயனம் பண்ணினவர்களாய் நான்கு பாதத்தையும் பிரதிபாதிக்கும் ஒரு தந்திரத்தையாயினும் முற்றக் கற்றவர்களாய், திராவிட சித்தாந்தம் பதினான்கையும் உணர்ந்தவர்களாய் குருலிங்க சங்கமபத்தி விசிஷ்டர்களாய் இருக்கும் புருஷர்களைத் தெரிந்து, சைவப்பிரசாரகர்களாக நியோகித்து, ஊர்தோறும் தேவாலயம் மடம் முதலிய பரிசுத்த ஸ்தானங்களிலே சர்வஜனோபகாரமாக வாரந்தோறும் சைவப்பிரசாரம் செய்வித்தல்வேண்டும்.

இவ்வெழுவகையாலும் நீங்கள் எல்லாரும் இந்நன்முயற்சிக்கு உபகாரர்களாய் இருப்பீர்களாகில், நமது தமிழ்நாடெங்கும் புறச்சமயமாகிய இருள்கெடச் சைவசமயமாகிய பேரொளி தழைத்தினி தோங்கும்; ஓங்கில் அநேகர் பிறந்திறந்துழலும் பசுக்களாகிய பிறரைப் பொருளெனமதியாது, பரமபதியாகிய சிவனது மகிமையை உணர்ந்து, அவரே பரம்பொருளெனத் துணிந்து, அவரையே மெய்யன்பினோடு விதிப்படி வழிபட்டு, நித்தியானந்த முத்தியை அடைவர்கள். இங்ஙனம் அனேகர் முத்திபெறுதற்கு ஏதுவாய் இருத்தலால், இச்சிவபுண்ணியமே எல்லாப் புண்ணியங்களினுஞ் சிறந்தது. நமக்கெல்லாம் இறக்கும்பொழுது துணையாய் உடன் வருவது இச்சிவபுண்ணியமே ஆதலானும், நமது தேகம் இக்கணம் இருக்கும் இக்கணம் நீங்கும் என அறிதல் கூடாமையானும், நாம் அனைவரும் சிறிதும் தாழ்க்காமல், நமக்கு எக்காலத்தும் உற்ற உறவாகிய சிவனது திருவருளையே முன்னிட்டுக்கொண்டு, இவ்வருமருந்தன்ன பெரும்புண்ணியத்தை விரைவிலே முயன்று நடத்தக்கடவோம்.

சிவதருமோத்தரம், எட்டாவது சனனமரணவியல்.

பாம்பழல் வாயினுற் பற்ற மண்டுகக்
தேய்பிடுந் துயருறுஞ் சீவன் றேயுநாள்

ஓம்பிட வல்லுரோ வுற்ற மற்றையார்
போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்.

### பட்டணத்துப்பிள்ளையார் பாடல்.

அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

### நாலடியார்.

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால்.

நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

### திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

திருவங்கமாலை - பண்-சாதாரி.

உற்றா ராருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றா ராருளரோ.

யாழ்ப்பாணம்:
பிரமாதீச வருஷ
தைப்பூசம்.

இங்ஙனம்:
சைவப்பிரகாச சமாசீயர்.

3233 (6466)

உ

சிவமயம்.

## கடவுள் வணக்கம்.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

# உபோற்காதம்.

அநாதி பகவனாகிய பரசிவன் அருளிச்செய்த வேதாக மங்களால் உணர்த்தப்படும் சைவ சமயமே சற்சமயமாம். இச் சற்சமயம் வழங்கும் நமது ஆரியகண்டத்திலே மிலேச்சர்களா கிய பாதிரிகள் புகுந்து, இச்சைவத்தை விளக்கும் சிவசாத் திரங்களைச் சிறிதும் அறியாமையினாலும், தாங்கள் முன்னே தழுவிக்கொண்ட துர்ச்சமயமாகிய கிறிஸ்துமதத்தின் மேல் வைத்த துரபிமானத்தினாலும், அப்புன்மதத்தைப் பிரசாரித் தலே தங்களுக்கு எளிதிற் பொருள் வரும்வழியாய் இருத்த லாலும், இச்சைவத்தை வாய்மொழியாலும், குருட்டுவழி முத லிய பல புத்தகங்களாலும் அநியாயமாகவே தூஷிக்கின்றார் கள்.

நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும, அப்பாதிரிகளது பொய்ந்நூலாகிய விவிலியநூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்க நூலிலே அற்பமேனும் பயிலாத வர்களுமாகிய சில சனங்கள் அத்தூஷணங்கள் ஒக்குமென்று

மதிமயங்கி, கிறிஸ்துசமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள்.

யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூஷணங்களாலே ஒருவரும் கெடாது சைவத்தின்வழியேநின்று உய்யும்பொருட்டு, அத்தூஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து மெய்யறிவுச் சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரப்பந்தத்தை, பரமகாருணிகராகிய பரமசிவனது திவ்வியப் பிரசாதத்தினாலேயே, செய்தோம்.

திருச்சிற்றம்பலம்.

வேதநா யகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசம யங்கண் மாளப்[செய்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

# சைவதூஷணபரிகாரம்.

முதலாவது

## பதிப்பிரகரணம்.

பாதிரியே!

பெருங் கருணையினாலே, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் தம் பிரயோசனங் குறியாது ஆன்மாக்களது பிரயோசனங் குறித்துச் செய்தருளும் பதி ஒருவரே என்றும், அவர் முற்றறிவு வரம்பிலின்பம் இயற்கை யுணர்வு தன்வயம் குறைவிலாற்றல் வரம்பிலாற்றல் என்னும் ஆறு குணங்களும் நிறைந்த சிவனே என்றும், நாங்கள் மெய்ந்நூல்களெனத் துணிந்த வேதாகமங்கள் உணர்த்துகின்றன. அதுபற்றி அச்சிவனையே நாங்கள் வழிபடுகின்றோம். ஆதலால், நாங்கள் சைவர்கள் எனப்படுவோம். நீ இக் கருத்தைச் சிறிதாயினும் ஆராய்ந்து அறியாது, எங்களைப் பலரைத் தெய்வம் என்று வணங்கும் அஞ்ஞானிகள் என்று இகழ்கின்றாய். யெகோவா பரிசுத்தாவி கிறிஸ்து என்னும் பலரைத் தெய்வமென்று வணங்கும் அஞ்ஞானி நீயே.

சிவனையேயன்றி விஷ்ணுமுதலிய பிறரையும் நீங்கள் வணங்கக் காண்கின்றேனே என்பாயாகில், சத்தியம் நீ சொல்லியது; ஆயினும், நாங்கள் அவர்களைப் பரம்பொருளாகிய பதிகளெனக்கொண்டு வணங்குவதில்லை; பதியாகிய அச்சிவனுடைய அடியார்களெனக்கொண்டு வணங்குகின்றோம். கடவுளையேயன்றி அவருடைய அடியார்களை வணங்குவது தகுதியன்றே என்பாயாகில், சிவனானவர் தம்முடைய அடியார்களை வழிபடுவர்கள் தம்மையே வழிபடுபவர்களென்றும், தாம் அவ்வடியார்களை அதிட்டித்து நின்று அவ்வழிபாட்டை

ஏற்று அது செய்தவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்வாரென்றும், தம்முடைய அடியார்களை நிந்திப்பவர்கள் தம்மையே நிந்திப்பவர்கள் என்றும், தாம் அந் நிந்தையின்பொருட்டு அவர்களுக்குத் தண்டஞ் செய்வாரென்றும், வேதாகமங்களிலே திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றமையால், அவ் வணக்கந் தகுதியேயாம்.

உன்சமய நூலாகிய விவிலிய நூலிலும், ஆதி ௧௮-அதி. ௨. வசனத்தில் ஆபிரகாம் தேவதூதர்கள் மூவரைப் பூமிக்கு நேராய்த் தாழ்ந்து வணங்கினான் என்றும், யோசு. ௫-அதி. ௧௪. வசனத்தில், யோசுவா யெகோவாவின் சேனைக் கதிபதியைத் தரையிலே முகங் குப்புறவிழுந்து நமஸ்காரம் பண்ணினான் என்றும், மத். ௨௫-அதி. ௪௰. வசனத்தில் உன்தேவனாகிய கிறிஸ்து தமதன்பருக்குச் செய்தவைகள் எல்லாம் தமக்கே செய்தவைகள் என்று சொன்னார் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகண்டும், நாங்கள் சிவனடியார்களை வணங்குதலை நீ இகழ்வது மடமையன்றோ?

சிவனுக்கு உருவமுண்டென்று உங்கள் வேதாகமங்கள் சொல்கின்றனவே; உருவமுடையவர் கடவுளாவது எங்ஙனம்? என்பாயாகில், ஓகோ! அவருடைய உருவம், தன்னைப் பந்தித்த மூலமல காரணத்தினாலே தான் முன்செய்த கன்மானுசாரமாகத் தோல் எலும்பு முதலிய சத்த தாதுக்களாலாகிய சரீரங்கொண்டு ஒரு மாதாவின் யோனிவாய்ப் பட்டுப் பிறந்து பெருந்துயரம் அனுபவித்து இறந்த மனிதனாகிய உன்னுடைய கிறிஸ்துவின் உருவைப்போலும் என்று நினைந்தாயா? எங்கள்சிவன் அப்படிப்பிறந்த கதையுங்கேளோம்; பேருலகில் வாழ்ந்துண்டிறந்த கதையுங் கேட்டிலேம். அவருடைய உருவம் ஆன்மாக்களின் நிமித்தம் பஞ்ச கிருத்தியங்கள் செய்யும்பொருட்டும், தம்மை வழிபடும் அடியார்களுடைய தியானாதிகளுக்கு எளிதாம்பொருட்டும், வேதாகமங்களைத் தோற்றுவித்தற்பொருட்டும், தமது அருட்சத்தியா லாக்கப்பட்ட சரீரமேயாம். அப்படியாமாயில், கடவுட்டன்மைக்குக்குறைவு என்னை? அறிவு சிறிதும், இல்லாதவனே! சொல்லு. சிவனுக்கு அங்கப்பிரத்தியங்க சாங்க உபாங்கங்களெல்லாம் சிவசத்தி ரூபமாமென்பது ஸ்ரீவாதுளாகமத்தில் விஸ்தரிக்கப்பட்டது.

உங்கள்சிவன் பார்வதிதேவி என்பவளை விவாகஞ்செய்து அவளோடு உகந்து புணர்ந்தார் என்றும், அவளைப் பிரிந்தார்

என்றும் உங்கள் சிவபுராணங்களிலே சொல்லப்படுகின்றதே; ஆன்மாக்களைப்போலக் காமியாய் இருப்பவரைப் பரம்பொருள் என்பதெப்படி? அவர் உங்களை இரட்சிப்பதெப்படி? என்பாயாகில், ஆண் பெண் அலி என்னும் மூன்றுமல்லாத அநாதி மலமுத்த பதியாகிய சிவத்தையே, சர்வான்மாக்களையுந் தோற்றுவித்தலால், ஆண்பாற்படுத்துப் பிதாவெனவும், சூரியனுக்குக் கிரணம்போல அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சத்தியையே, நிமித்தகாரணமாகிய அச்சிவம் அத்தொழில் இயற்றுதற்குத் துணைக்காரணமா யிருத்தலால், பெண்பாற்படுத்து மாதாவெனவும், அச்சிவம் அச்சத்தியோடு கூடி உத்தியோகித்துச் சங்கற்பித்தலையே, அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணத் தொழிலாகையால், உகந்து புணர்தல் எனவும், அச்சங்கற்பம் இல்லாமையையே, பிரிதல் எனவும் சொல்லியதென்றறிக. இந்த ரகசியம் சமாதி கொடுக்கும் சாக்ஷாத்காரவான்களுக்கு வெளிப்படும். இவ்வுண்மையை அறியாமலும், சிவபுராணங்களிற்றானே பலவிடங்களிலே சிவன் ஆணவம் மாயை கர்மம் என்னும் மும்மலங்களையும் அநாதியே யில்லாதவரென்றும் ஞானந்தானுருவாகிய நாயகர் என்றும் சொல்லப்பட்டிருத்தலால், அவர் பார்வதியைப் புணர்ந்தார் பிரிந்தார் என்பன முதலியவற்றிற்கு வேறு பொருள் இருத்தல் கூடும்; நாம் அதனை ஆராயாமல் இகழ்தல் தகுதியன்று என்று சிந்தியாமலும் எங்கள் கடவுளை வாயில் வந்தபடியே தூஷித்துக்கொண்டு திரியும் அதிபாதகனாகிய நீ, உன் விவிலிய நூலிலே சலோமோன் எழுதிய உன்னதகீதத்திலே கிறிஸ்துவாகிய புருஷன் ஒரு பெண்ணைக்கண்டு மயங்கினான் என்றும், அவளுடன்கூடி மகிழ்ந்தான் என்றும், அவளுடைய அழகைப் புகழ்ந்தானென்றும், அவளைப் பிரிந்தானென்றும், அதனால் அவள் துயருற்றுத் தேடித்திரிந்தாளென்றும் சொல்வதை நிந்தியாது அங்கீகரிப்பது என்னை?

இன்னும் முதனூல்களாகிய வேதாகமங்களிலே கூறப்பட்ட விஷயங்களுட் பல சிவபுராணங்களிலே குறிப்பாகப் பொருள்கொள்ளக் கிடக்கும். அது ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய சிவானுபூதிமான்கள் இயற்றிய பல சாத்திரங்களாலும் குருசம்பிரதாயத்தாலும் தெள்ளிதிற் றுணியப்பட்டது. மலபரிபாகம் உடையவர்களாய், சைவாசாரியர்களை அடைந்து வழிபட்டுக் கேட்கில், அவர்கள் சிவபுராணங்களுக்கு முதனூல்களோடு விரோதமறப் பொருள் உணர்த்துவார்கள். அவைகளை எனக்கு விளங்கச் சொல்லல்வேண்டும் என்

பாயாகில், சிவதூஷணம் கோமாமிசபக்ஷணம் முதலியபெரும்பாதங்களை செய்யும் உனக்கும் உன்போலிகளுக்கும் அவைகளைச்சொல்ல, எங்களுக்குச் சிவனுடைய அநுமதியில்லை. நீ இவ்வுண்மையை அறியாது, சிவபுராணங்களிலே குறிப்புப்பொருளாகக் கொள்ளற் பாலனவற்றைச் செம்பொருளாகக் கொண்டு, அதுவே மெய்ப்பொருள் என்று துணிந்து, சற்சமய லக்கணங்களெல்லாங் குறைவற அமைந்த சத்திய சமயமாகிய எங்கள் சைவத்தின்மேலே குற்றங்கள் ஏற்றப் புகுந்தமை மண்குதிரையை நம்பி ஆற்றின் வழிக்கொள்ளப் புகுந்தமைபோலும்.

---

## இரண்டாவது
## புண்ணியஸ்தலப்பிரகரணம்.

---

நீன்கொடி கட்டப்பட்ட தேசமெங்கும் தன் ஆணைசெல்லும்படி அரசியற்றும் இராசாவானவன் குறைவேண்டினோரும் முறைவேண்டினோரும் தன்னை எளிதில்வந்து காணும்படி அத்தாணியில் வீற்றிருத்தல்போல, சர்வலோகாதிநாயகராகிய சிவன் தம்மாலே பயன்பெற விரும்பிய சர்வான்மாக்களும் தம்மை வந்து வழிபட்டு உய்யும்படி சிதம்பரம் முதலிய தலங்களிலே விசேஷமாக எழுந்தருளியிருப்பார். ஆதலால், அவைகள் புண்ணிய ஸ்தலங்களெனப்படும். இராசாவானவன் தன்னாணை தன்தேசமெங்கும் செல்லினும், சர்வ வியாபகத்துவமும் சர்வஞ்ஞத்துவமும் இல்லாதவனாகையால் சமஸ்தரும் தன்னை எளிதிற் காணும்படி அத்தாணியில் வீற்றிருத்தல் வேண்டும் என்பது ஒக்கும்; கடவுள் அவனைப்போலன்றிச் சர்வ வியாபகத்துவமும், சர்வஞ்ஞத்துவமும் உடையவராகையால், அவரை எவ்விடத்தினும் எவர்களும் வழிபட்டு அநுக்கிரகம்பெற்றுக் கொள்ளலாமே என்பாயாகில்; அது மெய்ம்மையே; ஆயினும், தேவர்கள் இருடிகள் முதலிய பெரியோர்கள் ஒவ்வோரிடங்களிலே கடவுளை அன்போடு பூசித்து அவர் சத்திகாரிய சரீரங்கொண்டு தங்களுக்குப் பிரசன்னரான போது, அவரை வணங்கித் துதித்து தாங்கள், தாங்கள் விரும்பிய வரங்களைப் பெற்றபின்பு, அவரை நோக்கி கிருபாசமுத்திரமாகிய சுவாமீ! தேவரீர் சர்வ வியாபியாயினும், அடியேங்கள் தேவரீரைப் பூசித்த இந்த ஸ்தானத்திலே சதாகாலமும்

விசேஷமாக எழுந்தருளியிருந்து, இவ்விடத்தில் வந்து தேவரீரை வழிபடும் சர்வான்மாக்களுக்கும் விசேஷ பக்தி ஜனிப்பித்து, அவர்கள் செய்யும் தானங்கள் தவங்கள் ஒன்று அனந்தமாய் விருத்தியடையவும், அவர்கள் முன்செய்த பாவங்கள் குறையவும், அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும் என்று பிரார்த்திக்க, வேண்டுவோர் வேண்டியதே யீவாராகிய அக்கடவுளானவர், ஆன்மாவானது சரீரமுழுதும் வியாபித்திருப்பினும் சாக்கிரமுதலிய அவஸ்தைகளிலே விசேஷமாக நிற்பதுபோல, தாம் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்திருப்பினும், அப்புண்ணிய ஸ்தலங்களிலே விசேஷமாக எழுந்தருளியிருப்பாராயினர் என்று சிவசாத்திரங்கள் செப்புகின்றன.

க. இரா. கக. அ. இஸ்சா தேவமலையாகிய ஒரேப்பைச் சேர்ந்தான். யாத். ௩, க, ௫. மோசே ஒரேப் என்னுந்தேவமலையைச் சேர்ந்தான். யெகோவா நீ இந்தஸ்தானத்திற்குச் சமீபித்துவராதே; நீ நிற்குமிடம் பரிசுத்தமுள்ள பூமி; உன்பாதரட்சையைக் காலினின்று கழற்றிவிடு என்றார். ௸ கக, உ, கஉ. சீனாய் வனத்திற்போய் அந்த வனத்திலிறங்கினார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கெதிராகப் பாளையமிறங்கிய பின்பு, மோசே தேவ சந்நிதியிலேறினான். நீ சனங்களை நோக்கி நீங்கள் மலையிலேறாதபடிக்கும், அதினடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் என்றுசொல்லி, அதின் சுற்றிலும் ஒரு எல்லையைக் குறித்துவிடு. மலையைத்தொடுகிற எவனும் நிச்சயமாகக் கொலைசெய்யப்படுவான். சங். ௯. கக. சீயோனிலே வாசமாயிருக்கிற யெகோவாவைக் கீர்த்தனம் பண்ணுங்கள். ௸ ௯௯. ௯. நம்முடைய தேவனாகிய யெகோவாவைக்குறித்து மேன்மைபாராட்டுங்கள், அவருடைய பரிசுத்தமலையில் நமஸ்காரம் பண்ணுங்கள். க. சாமு, உ0. ௬. நான் எங்கே என்று உமதுபிதாகேட்டால், தாவீது தன்னூராகிய பேத்லகேமிலே தன்வமிசத்தார் யாவரும் வருஷாந்தர பலியிடுகிறபடியால் அங்கே போகும்படி என்னிடத்தில் வருந்திக்கேட்டானென்று சொல்லும். ௸. க0. ௩. ௫. தேவனுக்கு ஆராதனை செய்யும்படி பெத்தேலுக்குப் போகிற மூன்று மனிதர் உன்னைக்கண்டு சந்திப்பார்கள், அப்பால் பெலிஸ்தியரின் பாளையமிருக்கிற தேவமலைக்குப்போவாய். உ. பேதுரு க. கஅ. அவருடனே நாங்கள் பரிசுத்தமலையிலிருந்தபொழுது வானத்திற்பிறந்த அந்தச் சத்தத்தைக்கேட்டோம். க. இரா. கக. க௩. நான் தெரிந்துகொண்ட யெருஷலே மின்நிமித்தமும், க. நாளா. உ௩. உ௫. இஸ்ரவேலரின் தேவனாகியயெகோ

வாசதாகாலமும் யெருஷலேமில்வாசம்பண்ணி, தமது சனங்களுக்கு ஆறுதலைக் கொடுத்தார். எஸ்றா: க. உ. ௩. பரமண்டலத்திலுள்ள தேவனாகிய யெகோவா, பூமண்டலத்திலுள்ள சகல இராச்சியங்களையும் எனக்குத் தந்துவிட்டார், யூதாதேசத்திலுள்ள யெருஷலேமிலே தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய எல்லாச்சனங்களிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவன் தேவனாகிய யெகோவா அவனோடிருப்பாராக; அவன் யூதாதேசத்திலுள்ள யெருஷலேமுக்குப்போய், அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவானாக. யெருஷலேமி லிருக்கிற இஸரவேலரின் தேவனாகிய யெகோவாவே தேவன். யோவா. ச. உ0. எங்கள் பிதாக்கள் இந்த மலையில் ஆராதனைசெய்தார்கள். நீங்களோ தொழுதுகொள்ளவேண்டிய ஸ்தானம் யெருஷலேமில் உண்டென்று சொல்லுகிறீர்கள் என்றாள். மத். ச. ரு. பிசாசானவன் அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய் அவரைத் தேவாலயத்தின்மேல் உபரிகையில் நிறுத்தி மத், ரு. ௩ரு. யெருஷலேமைக் கொண்டு சத்தியம் பண்ணலாகாது; அது மகாராசாவின் நகரம்.

சலோமோன் யெகோவாவை நோக்கிச்செய்த விண்ணப்பம். உ. நாளா. ௬. கஎ—உக. இஸரவேலின் தேவனாகிய யெகோவாவே, உமது தாசனாகிய தாவீதுக்கு நீர்சொல்லிய வாக்கு மெய்ப்படும்படி அருள்செய்யும். தேவன் நிச்சயமாய்ப் பூமண்டலத்திலே மனிதருடன் வாசம்பண்ணுவாரா? வானமும் வானங்களுக்கு மேலுள்ள வானமும் உம்மைக்கொள்ளாதே; நான் கட்டினவீடு உம்மைக்கொள்வது எப்படி? என் தேவனாகிய யெகோவாவே, உமது அடியான் செய்யும் பிரார்த்தனையின்மேலும் விண்ணப்பத்தின்மேலும் சிந்தைவைத்தருளும்; உமது அடியான் உமது சமுகத்தில் இடும் ஓலத்தையும் அவன் பிரார்த்தனையையுங் கேட்டருளும். எனது நாமம் அதில் நிறுத்தப்படும் என்று நீர் குறித்த இந்த ஸ்தானத்துக்கு நேரே, உமது அடியான்செய்யும் பிரார்த்தனையைக் கேட்கும்படி இரவும்பகலும் இந்த வீட்டின்மேல் நீர் கண் திறந்திருப்பீராக. உமது அடியானும் உமது சனமாகிய இஸரவேலரும் இந்தஸ்தானத்துக்கு நேராய்ச்செய்யும் விண்ணப்பங்களைக் கேட்பீராக. ஷை. ௩உ, ௩௩. மேலும் புறத்தேசத்தார், உமது மகாநாமத்தையும், உமது வலிமையான கரத்தையும், ஓங்கிய உமது புயத்தையுங் குறித்துக் கேட்டிருப்பார்களே; ஆதலால் உமது சனங்களாகிய இஸரவேலரிலே சே

ராத அவர்கள், உமது நாமத்தினிமித்தம தூரதேசத்திலிருந்துவந்து, இந்த ஆலயத்துக்கு நோரகப் பிரார்த்தனை பண்ணினால், நீர் உமது வாசஸ்தலமாகிய வானத்தினின்றுங் கேட்டு, உமது சனங்களாகிய இஸரவேலரைப்போலவே, பூமண்டலத்திலுள்ள சகல சனங்களும் உமது நாமத்தை அறிந்து உமக்குப் பயப்படும்படிக்கும் நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உமது நாமம் இடப்பட்டதென்று அறியும்படிக்கும், அந்தப் புறத்தேசத்தார் உம்மை நோக்கிப் பிரார்த்திப்பதெல்லாவற்றையும் அவர்களுக்குச் செய்தருளும்.

யெகோவா சலோமோனுக்குச் செய்த வாக்குத்தத்தம்:— உ. நாளா. எ. கஉ—கசு. யெகோவா இராவிலே சலோமோனுக்குத் தரிசனமாகி, அவனை நோக்கி, நான் உன் பிரார்த்தனையைக் கேட்டேன், எனக்குப் பலியிடும் வீடாக இந்த ஸ்தானத்தைத் தெரிந்துகொண்டேன், மழை பெய்யாமல் நான் வானத்தை அடைத்தாலும், தேசத்தை அழிக்கும்படி வெட்டுக்கிளிகள் வரக்கட்டளையிட்டாலும், நான் என் சனங்களுக்குள்ளே கொள்ளைநோயை அனுப்பினாலும், என்னுடைய தரிக்கப்பெற்ற என் சனங்கள் தங்களைத் தாழ்த்திப் பிரார்த்தனைசெய்து, என் முகத்தைத் தேடித் தங்கள் துன்னெறிகளினின்று திரும்புவார்களாகில், நான் வானத்தினின்று கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்தை ஆற்றுவேன். இந்த ஸ்தானத்திற் செய்யப்படும் பிரார்த்தனைக்குக் கண் திறந்து செவிசாய்ப்பேன், என் நாமம் சதாகாலமும் இந்த ஆலயத்திலே தங்கும்படி, நான் இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப் படுத்தினேன். என் கண்ணும் என்மனமும் சதாகாலமும் இதிலே தரித்திருக்கும்.

இவ் வசனங்களினாலே உன் கடவுளுக்கும் விசேஷ ஸ்தலங்கள் உண்டென்பது துணியப்படுகின்றது. அதுகண்டும், நாங்கள் சிவனுக்கு விசேஷ ஸ்தலங்கள் உண்டென்று எங்கள் சாத்திரங்களாலே துணிந்து, அவைகளுக்கு யாத்திரை செய்தலை நீ இகழ்வது அறியாமையன்றோ?

---

மூன்றாவது

## ஆலயப்பிரகரணம்.

புண்ணியஸ்தலங்களிலே அறிவுள்ளவர்களும் அறிவில்லாதவர்களும் ஆகிய சகலருங் கூடிக் கடவுளை அன்போடு

வழிபட்டு உய்யும்பொருட்டு விதிப்படி ஆலயங்களைக் கட்டிப் பிரதிட்டை பண்ணுதல் புண்ணியமென்று சைவாகமங்கள் சொல்லுகின்றன.

யாத். ௨௫. ம் அதிகாரந் தொடங்கி ௪௦-ம் அதிகாரம் வரைக்கும் மோசே என்பவன் உன் தேவனுடைய ஆஞ்ஞைப்படி அவனுக்கு ஒரு ஆவாசத்தை உண்டாக்கிப் பிரதிட்டை பண்ணினான் என்று சொல்லப்படுகின்றது. ௨. நாளா. ௬. ௭—௯. இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவாவுக்கு ஒரு ஆலயங்கட்ட என் பிதாவாகிய தாவீது அபிப்பிராயங் கொண்டிருந்தார்; யெகோவா என் பிதாவை நோக்கி, என்பேரால் ஒரு ஆலயங்கட்ட நீ அபிப்பிராயங் கொண்டாய்; நீ கொண்ட அபிப்பிராயம் நல்லது; ஆனாலும் நீ அந்த ஆலயத்தைக் கட்ட மாட்டாய்; உன்னுதரத்திற் றோன்றும் புத்திரனே என் பேரால் ஒரு ஆலயங் கட்டுவான் என்று சொல்லியிருந்தார். ௧. இராசா. ௬-ம்,௮-ம் அதிகாரங்களில் சலோமோன் யெருஷலேமிலே உன் தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டிப் பிரதிட்டை செய்தானென்றும், எஸ்று. ௬-ம் அதிகாரத்திலே யெருஷலேமிலே உன் தேவனுடைய ஆஞ்ஞைப்படி ஆலயம் திரும்பவும் கட்டிப் பிரதிட்டை செய்யப்பட்டதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாறே உன் கடவுளுக்கும் ஆலயங்கட்டிப் பிரதிட்டை செய்தல் புண்ணியமென்றும், அதனைப் பலர் செய்தார்களென்றும், உன் சமயநூல் பேசுகின்றது. அஃதுணர்ந்தும், நாங்கள் எங்கள் கடவுளுக்கு ஆலயங்கட்டிப் பிரதிட்டை செய்தல் புண்ணியமென்று எங்கள் சாத்திரங்களாலே தெளிந்து, அவ்வாறு செய்தலும் அங்கே கூடி அவரை வழிபடுதலும் விருதாவென்று நீ புலம்புவது என்னை ?

---

நான்காவது

## இலிங்கப்பிரகரணம்.

வியத்தலிங்கம் அவ்வியத்தலிங்கம் வியத்தாவியத்தலிங்கம் * என்னும் மூவகை இலிங்கங்களை, வரிவடிவெழுத்தை

---

* வியத்தலிங்கம்—எல்லா அவயவங்களும் வெளிப்பட்டிருக்கும் சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து விக்கிரகங்

ஒலிவடிவெழுத்திற்கு அறிகுறியாகக் கொள்ளுதல்போலக்கடவுளுக்கு அறிகுறியாகவும், அதிட்டேயமாகவும் கொண்டு அவரை அவற்றினிடத்தே விதிப்படி ஆவாகனம் பண்ணிப் பூசித்து வழிபடில், பாலானது பசுவினுடம்பெங்கும் வியாபித்திருப்பினும், கன்றைக்கண்டபொழுது முலைவழியாகவே ஒழுகுதல்போல, அவர் தாம் சமஸ்தப்பிரபஞ்சத்தும் நிறைந்திருப்பினும் அவ்விலிங்கத் துவாரத்தால் அருள் செய்வார் என்று சிவாகமங்கள் செப்புகின்றன.

யாத். ௨௫-ம் அதிகாரத்திலே யெகோவா மோசைநோக்கி, சீத்தீம் மரத்தினாலேயொருபெட்டிசெய்து, அதைச்செம்பொற்றகட்டால் மூடி, அதன்மேல் செம்பொன்னினால் ஒருகிருபாசயம்பண்ணி, அந்தக்கிருபாசயத்தின் இரண்டோரத்திற்கும் பொன்னினால் இரண்டு கெருபிகளென்னும் விக்கிரகங்களையுண்டாக்கி, அந்தப்பெட்டிகளுக்குள்ளே தாம் எழுதிக்கொடுத்த சாட்சிப்பத்திரத்தை வைத்து, சதாகாலமும் ஆராதனை பண்ணும்படி விதித்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஷ ௩௫, ௩௬, ௩௭, ௪௦-ம் அதிகாரங்களில் யெகோவா விதித்தபடி மோசே ஒரு ஆவாசத்தையுண்டாக்கி, பெட்டியும் கிருபாசயமும் கெருபிகளென்னும் விக்கிரகங்களும் செய்துமுடித்து, பெட்டிக்குள்ளே சாட்சிப்பத்திரத்தை வைத்து, பிரதிட்டை பண்ணினனென்றும், அன்று தொடங்கி அந்தப்பெட்டிக்கு ஆராதனைசெய்து வந்தார்கள் என்றும், அதற்கு ஆசாரியர்களாக ஆரோனையும் அவன் சந்ததியாரையும் தலைமுறைதோறும் நியமிக்கவிதித்தாரென்றும், அந்த ஆசாரியர்கள் செய்த ஆராதனைக்கு யெகோவா மகிழ்ந்து அநுக்கிரகம்பண்ணிவந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. யாத். ௨௫. ௨௨. சாட்சிப்பெட்டியின் மேலிருக்கிற இரண்டு கெருபிகளின் மத்தியினின்றும், கிருபாசயத்துக்கு மேலாய் நான் உனக்குத் தரிசனமாகி, இஸ்ரவேல் சந்ததியாருக்கு நான் கட்டளையிடும்யாவையும் உன்னிடத்தில் சொல்லுவேன். (என்று யெகோவாசொன்னார்.) எண்-௭. ௮௯. மோசே தேவனுடனே பேசும்படி சபையின் ஆவாசத்துட் பிரவேசிக்கையில், தன்னுடனே பேசுகிறவருடைய சத்தம் சாட்சிப்பெட்டியினது

---

கள். அவ்வியத்தலிங்கம்:— அவைகள் வெளிப்படாததாய்ப் பீடமும் சிவலிங்கமுமாய் இருப்பது. வியத்தாவியத்தலிங்கம்:—முகமுந் தோள்களுமாத்திரம் வெளிப்பட்டிருக்கும் சிவலிங்கம்.

கிருபாசயத்தின் இரண்டு கெருபிகளின் மத்தியினின்றும்
தோன்றக்கேட்டான்; அங்கே அவர் அவனுடனே பேசுவார்.
௨. சாமு. ௬. ௨. கெருபியரின் மத்தியில் வாசமாயிருக்கிற
சேனைபதியாகிய யெகோவாவின் நாமம் தொழுது கொள்ளப்
படுகிற தேவனின் பெட்டி. சங். ௮௰. ௧. கெருபிகளின் யத்தி
யில் வசிப்பவரே, பிரகாசியும். ஷை ௯௯. ௧. யேகோவா இராச்
சிய பரிபாலனம் பண்ணுகிறார்; சனங்கள் நடுங்குவார்களாக;
அவர் கெருபிகளின் மத்தியில் வீற்றிருக்கிறார். எண். ௧௬.
௪௬.—௪௮. வசனங்களிலே ஒருநாள் யூதர்களில் வெகு ஜன
ங்களுக்குச் சடிதியாக ஒரு வாதை சம்பவித்தபொழுது,
ஆரோன் சீக்கிரமாக ஓடிப்போய், அந்தப்பெட்டிக்குத் தூபங்
காட்டி, ஆராதனைசெய்து வழிபட்டதனால், அவ்வாதை நீங்
கிற்று என்று சொல்லப்பட்டிருக்கின்றது. யோசு. ௩. ௨—௪.
அதிபதிகள் பாளையமெங்கும்போய்ச் சனங்களை நோக்கி, உங்
கள் தேவனாகிய யெகோவாவினுடன்படிக்கைப் பெட்டியை
யும், லேவிய ஆசாரியர் அதைச் சுமக்கிறதையுங் கண்டவு
டனே நீங்களும் புறப்பட்டு அதற்குப்பின் செல்லுங்கள்; உங்
களுக்கு மதற்கும் இடையில் இரண்டாயிர முழமளவு தூர
மிருக்கவேண்டும்; இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும்
இந்தவழியாலே போகவில்லையே; ஆகையால் நடக்கவேண்
டிய வழியையறியும் படிக்கு அதற்குச் சமீபமாய் வராதிருப்
பீர்களாக என்று சொல்லிக் கட்டளையிட்டார்கள். ஷை ௩.
௧௧—௧௭. வசனங்களில் இஸ்ரவேலர் கானான் தேசத்துக்குப்
போம்போது மிகப்பிரவாகிக்கும் யோர்தான் நதியைச்சேர்ந்த
வுடனே, ஆசாரியர்கள் சாட்சிப் பெட்டியைக்கொண்டு இறங்
கினதினால், அந்நதியிரண்டாய்ப்பிரிந்து வழிகொடுத்தது என்
றும், சமஸ்தசனங்களும் யோர் தானைக்கடந்து தீருமளவும்,
ஆசாரியர்கள் அந்தப்பெட்டியைச் சுமந்துகொண்டு, அந்நதி
யின் மத்தியிலே நின்றார்களென்றும், சொல்லப்பட்டிருக்கின
றது. ஷை ௬—அதி. யெகோவா விதித்தபடி ஆசாரியர்கள் சாட்
சிப் பெட்டியைச் சுமந்துகொண்டு யெரீகோ நகரத்தைச்சுற்றி
வந்ததினால், அந்நகரத்தின் மதில் இடிந்து கீழேவிழுந்தது
என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஷை. ௭—அதி. ஒருநாள்
இஸ்ரவேலர் போரிலே சத்துருக்களுக்குத் தோற்றுப் புறங்
காட்டியோடினதினால், யோசுவாமுதலியோர் மிக வியாகுலி
த்து, யெகோவாவின் பெட்டிக்கு முன்பாகச் சாயங்காலம்
வரைக்கும் தரையிலே முகங்குப்புறவிழுந்துகிடந்து, சத்துருக்
களை வெல்லவரம்பெற்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்
றது. ௧. சாமு. ௫, ௬-ம் அதிகாரங்களிலே ஒருமுறை அந்தச்

சாட்சிப்பெட்டியை இஸ்ரவேலருடைய சத்துருக்கள் எடுத்துக்கொண்டுபோய்த் தங்கள் தேவாலயத்தில் வைத்தபோது, அங்கேயிருந்த விக்கிரகம் அந்தப் பெட்டிக்கு முன்பாக விழுந்து தலைவேறு கைவேறாக வெட்டுண்டு கிடந்தது என்றும், அந்நாடுகளெல்லாம் மூலவியாதியினால் வாதிக்கப்பட்டன என்றும், அதினாலே, அவர்கள் அந்தப்பெட்டியைத் திரும்ப இஸ்ரவேலரிடத்திற்கு அனுப்பிவிட்டார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ௨. சாமு. ௬. அதிகாரத்திலே அந்தப் பெட்டியைத் தாவீது முப்பதினாயிரம் பேரோடுபோய் ஒரு புது இரதத்தின் மேலேற்றிக்கொண்டு வரும்பொழுது, மாடுகள் அப்பெட்டியை அசைத்தபடியினாலே, அவ்விரதத்தை நடத்திய ஊசா, அகியோ என்னுமிருவருள் ஊசா தன்கையை நீட்டி அதைப்பிடித்தான் என்றும், அதினால் யெகோவா அவனைக்கோபித்துக் கொன்றுபோட்டார் என்றும், அது கண்டு தாவீது பயந்து யெகோவாவின்பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி, அதைத் தன்னிடத்திலே கொண்டுவர விரும்பாமல், கித்தியனாகிய ஓபெத் ஏதோமின் வீட்டிலே கொண்டுபோய் வைத்தான் என்றும், அந்தப்பெட்டி அவன் வீட்டிலே மூன்றுசாமம் தங்கிற்றென்றும், அதினிமித்தம் யெகோவா ஓபெத் ஏதோமையும் அவன் குடும்பத்தார் அனைவரையும் ஆசீர்வதித்தார். என்றும், தாவீது அதை அறிந்துபோய் அந்தப் பெட்டியைத் தன் நகரத்திலே கொண்டுவந்து வைத்தும் பலிகொடுத்து ஆராதனை பண்ணினான் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ௧. இரா. ௬, ௮. அதிகாரங்களிலே தாவீதின் குமாரனாகிய சலோமோன் யெருஷலேமிலே ஒரு ஆலயங்கட்டி, அதிலே அந்தப்பெட்டியை வைத்துப் பிரதிட்டைபண்ணி, அனேகம் ஆடுமாடுகளைப் பலிகொடுத்து, ஆராதனை செய்தான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே உன்சமயநூலிலே, உன் தேவனாகிய யெகோவா சாட்சிப்பெட்டியையும், அதற்கு இருபக்கத்திலும் இரண்டு கெருபிகளையும் வைத்து ஆராதனை பண்ணும்படி விதித்தார் என்றும், அவ்வாறே மோசேமுதலானவர்கள் செய்தார்களென்றும், யெகோவா அந்தப்பெட்டியிலே பிரசன்னராகிக் கிருபைசெய்தாரென்றும், அந்தப்பெட்டியை அவமதி செய்தவர்களைத் தண்டித்தார் என்றும், சொல்லப்பட்டிருக்கின்றது. அதை அறிந்துகொண்டும், கோதுமை அப்பத்தையும், திராட்சரசத்தையும் உன் தேவனாகிய கிறிஸ்துவின் சரீரமும் இர

த்தமு மாகவேணும் அவைகளுக்கு அறிகுறியாகவேணும் பாவித்து உட்கொள்ளல்வேண்டும் என்று புதியவுடன் படிக்கையில் விதித்தபடி செய்துகொண்டும், எங்களைக் கல்லையும் செம்பையும் வணங்கும் அஞ்ஞானிகளென்றும், கடவுளுக்குச் செய்யற்பாலதாகிய வழிபாட்டை அறிவில்லாத விக்கிரகங்களுக்குச் செய்யும் பாவிகளென்றும், தூஷிப்பது மதிமயக்க கன்றோ! அறிகுறியும் அதிட்டேயமுமாகிய இலிங்கத்திலே காட்டப்படும் தமக்குச்செய்யும் வழிபாட்டைத் தமக்கென்றே கொள்ளாது இலிங்கத்துக்கென்று கொள்ளுதற்குக் கடவுள் மதிமயக்க முடையவரல்லர்.

---

ஐந்தாவது

## அபிஷேகப்பிரகரணம்.

இலிங்கங்களை அதிட்டித்து அருள்செய்யும் கடவுளுக்கு, எண்ணெய் பால் தயிர் நெய் தேன் இளநீர் முதலியவைகளினால் விதிப்படி அபிஷேகம் பண்ணுதல் புண்ணியமென்று சைவாகமங்கள் சாற்றுகின்றன.

யாத். ௩0. ௨௨—௩௩, யெகோவா மோசேயை நோக்கி, அதி உத்தம சுகந்த திரவியங்களாகிய சுத்தமான வெள்ளைப்போளத்தில் பரிசுத்த ஸ்தானத்துச் சேக்கலின்படி, ௫௱ சேக்கலும், கருவாப்பட்டையில் அதிற்பாதியாகிய ௨௱௫0 சேக்கலும், சுகந்த வசம்பு ௨௱௫0 சேக்கலும், இலவங்கப்பட்டையில் ௫00-சேக்கலும், சீதவிருட்சத்தெண்ணெயில் ஒருகின்னும், எடுத்து, பரிமளதைலக்காரனுடைய செய்கையாய்ச் செய்யப்பட்ட பரிமளதைலத்தைப்போல, அவைகளினாற் சுத்த அபிஷேகதைலத்தைச் செய்வாயாக. அதுவே அபிஷேக தைலமாயிருக்கவேண்டும். அதினாலே சபையின் ஆவாசத்துக்கும், சாட்சிப்பெட்டிக்கும், பீடத்துக்கும், அதின் பாத்திரங்களெல்லாவற்றிற்கும், கிளைவிளக்குக்கும், அதின் கருவிகளுக்கும், தூபவேதிகைக்கும், தகனபலிவேதிகைக்கும், அதின் பாத்திரங்களெவற்றிற்கும், தொட்டிக்கும், அதின் பாதத்துக்கும், அபிஷேகம் பண்ணக்கடவாய். அவைகள் பரிசுத்தமாகும்பொருட்டு, அவைகளைப் பரிசுத்தப்படுத்துவாயாக. அவைகளைப் பரிசிக்கிற யாவும் பரிசுத்தமாகும்.

3233

ஆரோனும், அவன் புத்திரரும், எனக்கு ஆசாரியத் தொண்டு செய்யும்படி, நீ அவர்களுக்கு அபிஷேகம் பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக. நீ இஸ்ரவேற் சந்ததியாரை நோக்கி, உங்கள் தலைமுறைதோறும் இதுவே எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கவேண்டும்; இது மனிதருடைய சரீரத்தில் வார்க்கப்படாது; இதற்கொப்பாக நீங்கள் வேறே செய்யவும்படாது; இது பரிசுத்தமானது; இது உங்களிடத்திற் பரிசுத்தமாயிருக்கவேண்டும்; இதற்கொப்பாகத் தைலமுண்டாக்குகிறவனும், இதில் எடுத்து அந்நியன்மேல் வார்க்கிறவனும் தன் சனங்களினின்றும் சேதிக்கப்படுவான் என்று சொல்லென்றார்.

இப்படியே உன்சமயநூலிலே அபிஷேகம் விதிக்கப்பட்டமை கண்டும், காணுதார்போல நீ நாங்கள் அபிஷேகம்பண்ணுதலைக்கண்டு, விக்கிரகங்களுக்கு அபிஷேகம் பண்ணினாலே பயனில்லையென்று பிதற்றுவது நீதியா?

---

# ஆறாவது

# நைவேத்தியப்பிரகரணம்.

இலிங்கங்களை அதிட்டித்து அருள்செய்யும் கடவுளுக்கு அன்னம் பால் பழம் மோதகம் முதலியவைகளை விதிப்படி நிவேதனம் பண்ணுதல் புண்ணியமென்று சைவநூல்கள் சொல்லுகின்றன.

யாத். உரு. ௩௦. என் சந்நிதியில், பீடத்தின்மேல் நித்தமும் சமுகத்தப்பம் வைக்கவேண்டும். எண். ௬. ௧௪—௧௭. தகனபலிக்குப் பழுதற்ற ஒருவருஷத்தாட்டுக்குட்டியையும், பிராயச்சித்த பலிக்குப் பழுதற்ற ஒருவருஷத்துப் பெண்ணாட்டுக்குட்டியையும், ஸ்தோத்திரப்பலிக்குப் பழுதற்ற ஓராட்டுக்கடாவையும், நைவேத்தியத்துக்கு ஒரு கூடையில் எண்ணெயிற்பிசைந்த புளிப்பில்லாத மெல்லியமாவிறுற் செய்த அதிரசங்களையும், எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், பானபலியுடன் யெகோவாவுக்கு நைவேத்தியமாகக் கொண்டுவரக்கடவன். அவைகளை ஆசாரியன் யெகோவாவின் சந்நிதியிற்கொண்டுவந்து, அவனுடைய பிரா

பச்சித்தபலியையும், அவனுடைய தகனபலியையும், நிவேதனம்பண்ணி, ஆட்டுக்கடாவைக் கூடையிலுள்ள புளிப்பில்லாத அப்பங்களுடனேகூட, யெகோவாவுக்கு ஸ்தோத்திரபலியாயிடக்கடவன்; அன்றியும் ஆசாரியன் நைவேத்தியத்துடனே பானபலியைச் செலுத்துவானாக. லேவி. ௨௪ - ௫— ௯-நீ மெல்லியமாவை எடுத்து ஒவ்வொரு அப்பம், ஒரு எபாவிற்பத்தில் இரண்டுபங்குள்ளதாகப் பன்னிரண்டு அப்பஞ் சுடவேண்டும். நீ அவைகளை யெகோவாவின் சந்நிதியில் பரிசுத்தபீடத்தின்மேல் ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு இருக்கும்படி இரண்டு அடுக்காகவைத்து யெகோவாவுக்கு அக்கினியிலிடப்படும் ஞாபகக்குறியாகிய நைவேத்தியமாகும்பொருட்டு, அடுக்குத்தோறுஞ் சுத்தகுந்துருவையிடக்கடவாய். அவைகளை நித்தியவுடன்படிக்கையாய் இஸ்ரவேல்சந்ததியார்கையில் வாங்கி ஓய்வுநாள்தோறும் யெகோவாவின் சந்நிதியில் அடுக்கிவைக்கக்கடவன். நித்தியநியமமாக யெகோவாவுக்கு அக்கினியிலிடப்படும் நைவேத்தியங்களுக்குள் அவைகள் மிகவும் பரிசுத்தமானவைகளாகையால் அவைகள் ஆரோனுக்கும் அவன் புத்திரருக்கும் உரித்தாகும்; அவைகளைப் பரிசுத்த ஸ்தானத்தில் புசிக்கக்கடவர்கள். இன்னும் நைவேத்தியத்தைக்குறித்து யாத். ௨௯-ம் அதிகாரத்திலும் லேவி. ௨, ௬, ௭-ம் அதிகாரங்களிலும் பிறவிடங்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இங்கே எடுத்துச்சொல்லிற்பெருகும்.

இப்படியே உன் சமயநூலிலும் நிவேதனம் விதிக்கப்பட்டமை கண்டும், நீ நாங்கள், எங்கள் கடவுளுக்கு நிவேதனம் பண்ணுதலை அறிந்து, நீங்கள் அன்னம், பழம் முதலியவைகளை இலிங்கத்துக்குமுன் படைக்கிறீர்களே; அது அவைகளை உண்ணுமா என்று இகழ்கின்றாய். இதனால் பூர்வகாலத்திலே உன் யெகோவா பசியினால் தமக்குமுன் படைத்தவைகளை உண்டாரென்பதே உன் கருத்தென்று தோன்றுகின்றது.

---

ஏழாவது

## தூபதீபப்பிரகரணம்.

இலிங்கங்களை அதிட்டித்து அருள்செய்யுங்கடவுளைத் தூபதீபங்களினாலே விதிப்படி பூசித்தல் புண்ணியமென்று சைவாகமங்கள் சொல்கின்றன.

யாத். ௩0. ௩௪—௩௬. யெகோவா மோசேயை நோக்கி வடிந்த வெள்ளைப்போளமும், குங்கிலியமும், சாம்பிராணியுமாகிய சுகந்த திரவியங்களையும், பரிசுத்தமான குந்துருவையும் சமநிறையாக எடுத்து, பரிமளதைலக்காரன் செய்கிறது போல் அவைகளைக்கலந்து நிர்மல பரிசுத்த சுகந்த தூபமாக்குவாயாக. அதில் ஒருபங்கை இடித்துப் பொடியாக்கி, நான் உன்னைச் சந்திக்கும் சபையின் ஆவாசத்திலிருக்கும் சாட்சிப் பெட்டிக்கு முன்னே வைக்கவேண்டும். அது உங்களுக்கு மிகவும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். லேவி. ௧௬ ௧௨. ௧௩. யெகோவாவின் சந்நிதியிலிருக்கும் வேதிகையிலெரியும் நெருப்புத் தணல்களினாலே தன் தூபகலசத்தை நிறைத்து, தூளாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்தில் தன் கைநிறைய அள்ளித் திரைக்குள்ளே கொண்டுவந்து, தான் சாகாதிருக்கும்படி தூபமேகம் சாட்சிப்பத்திரத்தின் மேலிருக்குங் கிருபாசயத்தை மூடத்தக்கதாக, யெகோவாவின் சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன். எண். ௧௬. ௪௬. நீ தூபகலசத்தை எடுத்து வேதிகையின் அக்கினியை அதிலிட்டு, அதின்மேலே தூபவருக்கந் தூவிச் சபையினிடத்திற் சீக்கிரமாயோடி அவர்களுக்குப் பிராயச்சித்தஞ் செய் என்றான். யாத். ௩0. ௭. ௮. ஆரோன் காலைதோறும் விளக்குகளைச் சோடிக்கும்பொழுது அதின்மேலே சுகந்த தூபமிடக்கடவன். மாலையில் விளக்கேற்றும்பொழுதும் அதின்மேலே சுகந்த தூபமிடக்கடவன். இதுவே உங்கள் தலைமுறைதோறும் யெகோவாவின் சந்நிதியில் இடவேண்டிய நித்தியதூபம். வெளி. ௮. ௩.—௫. வேறொருதூதன் தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துவந்து வேதிகையின் அருகே நின்றான்; சிங்காசனத்துக்கு முன்பாக இருந்த பொன்வேதிகையின்மேலே, எல்லாம் பரிசுத்தவான்களுடைய பிரார்த்தனைகளோடும் இடும்பொருட்டு, சுகந்த தூபவருக்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. பரிசுத்தவான்களுடைய பிரார்த்தனைகளோடே சுகந்த வருக்கங்களின் புகை, தூதனுடைய கையினின்று தேவனுக்கு முன்பாக எழும்பிற்று. பின்பு அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதை வேதிகையிலுள்ள அக்கினியினாலே நிரப்பிப் பூமியிலே வீச, சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்தலுமுண்டாயின.

இவ்வாறே உன் சமயநூலிலே யெகோவாத் தமக்குத் தூபமிட விதித்தாரென்றும், அவ்வாறே அவர் பத்தர்கள்

செய்தார் என்றும் சொல்லப்பட்டிருத்தல் கண்டும், நாங்கள் எங்கள் கடவுளுக்குத் தூபதீபங்காட்டுதலை நீ இகழ்வது மூடத்துவமே.

---

எட்டாவது

## தீபப்பிரகரணம்.

சிவாலயங்களிலே திருவிளக்கேற்றுதல் புண்ணியமென்று சைவநூல்கள் சொல்லுகின்றன.

லேவி. ௨௪. ௧—௪. பின்னும் யெகோவா மோசேயை நோக்கி, நித்தமும் விளக்கெரியும்படிக்கு இஸ்ரவேல் சந்ததியாரிடித்துப் பிழிந்த சீதவிருட்சத்தின் சுத்தமான எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிடு; ஆரோனானவன் சபையின் ஆவாசத்தில் சாட்சிப் பத்திரத்தின் திரைச்சீலைக்கு வெளியே சாயங்காலந் தொடங்கி விடியற்கால பரியந்தம் யெகோவாவின் சந்நிதியில் நித்தமும் ஏற்றக்கடவன்; இது உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாயிருக்கும். அவன் பரிசுத்தக் கிளைவிளக்கின் அகல்களை யெகோவாவின் சந்நிதியில் ஒழுங்குப் படுத்தவேண்டும். யாத். ௨௭. ௨௦. ௨௧. வசனங்களிலே மேற்கூறியவாறே சொல்லப்பட்டிருக்கின்றது. எண். ௮. ௧—௪. யெகோவா மோசேயை நோக்கி, ஆரோனுக்கு, நீ விளக்கேற்றும்போது ஏழுதீபமும், கிளைவிளக்குத்தண்டிற்கு நேரே ஒளிகொடுக்க வேண்டும் என்று சொல் என்றார். யெகோவாமோசேக்குக் கட்டளையிட்ட பிரகாரம் ஆரோன் கிளைவிளக்குத் தண்டிற்கு நேரே எரிய விளக்கேற்றினான். இந்தக் கிளைவிளக்குத் தண்டுமுதல் புஷ்பங்கள் வரைக்கும் பொன்னினால் வேலையாகச் செய்யப்பட்டது. யெகோவா மோசேக்குக் காண்பித்த சாயலின்படியே அந்தக் கிளைவிளக்கை உண்டாக்கினான்.

இப்படி உன் சமயநூலிலும் ஆலயங்களிலே திருவிளக்கேற்றுதல் விதிக்கப்பட்டமை கண்டும், நீ எங்களை நோக்கி, ஆலயங்களிலே வெகுபொருள் செலவிட்டு விளக்கேற்றி வைக்கிறீர்களே? உங்கள் கடவுளுக்குக் கண்தெரியாதா? என்று தூஷிப்பது பேதைமை யன்றோ?

---

ஒன்பதாவது

# வாத்தியப்பிரகரணம்.

அபிஷேகம் பூசை உற்சவம் முதலியன நடக்கும்பொழுது சிவ சந்நிதானத்திலே பலவகைப்பட்ட வாத்தியங்களை முழக்குதலும், நடனம் பண்ணுதலும் புண்ணியமென்று சிவ சாத்திரங்கள் செப்புகின்றன.

௧. நாளா-௧௫, ௧௫, ௧௬. யெகோவாவின் வாக்கின்படி, மோசே கட்டளையிட்ட பிரகாரம் தேவனுடைய பெட்டியைத் தண்டோடும் தங்கள் தோளின்மே லெடுத்துக்கொண்டு வந்தார்கள்; தங்கள் சகோதரரைத், தம்புருவும், கின்னரமும், கைத்தாளங்களுமாகிய கீதவாத்தியங்கள் முழங்க, ஆனந்தத்துடன் உரத்த சத்தமாய்ப் பாடும்பொருட்டு, ஏற்படுத்தும்படி தாவீது கட்டளையிட்டான். ஷை அதி, ௧௯—௨௧, பாடகராகிய ஏமானும், ஆசாப்பும், ஏதானும், வெண்கலத்தினாலே செய்த தொனிக்குங் கைத்தாளம் போடவும், சகரியாவும், அசியேலும், ஷிமிராமோத்தும், யிகியேலும், உன்னியும், இலியாப்பும், மாசெயாவும், பினாயாவும்; அலாமோத்தில் தம்புருகளை வாசிக்கவும், மத்தித்தியாவும், இலிப்பேலேகும், ஓபேத்ஏதோமும், யெயீயேலும், அச்சியாவும், ஷிமினீத்தினால் உயர்ந்த தொனிசெய்து, கின்னரம் வாசிக்கவும் நியமிக்கப்பட்டார்கள். ஷை அதி, ௨. ஊது கொம்போடும், பூரிகைகளோடும், கைத்தாளத்தோடும், தம்புருவும், கின்னரமும் முழங்க, இஸரவேலர் அனைவரும் யெகோவாவின் உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வந்தார்கள். ஷை ௧௬. ௬. ஆசாரியராகிய பினாயாவும், யாகசியேலும். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நித்தமும் பூரிகை யூதினார்கள். எண். ௧௦. ௮—௧௦. ஆரோனின் புத்திரர்களாகிய ஆசாரியர்களே எக்காளங்களை ஊதக்கடவர்கள்; உங்கள் தலைமுறைதோறும் இந்தவிதி நித்திய நியமமாயிருக்கும்; உங்கள் தேசத்தில் உங்களைக் கிலேசப்படுத்தும் சத்துருவுக்கு விரோதமாய் யுத்தத்துக்குப் போகும்பொழுது, நீங்கள் எக்காளங்களைப் பேரொலியாய் ஊதக்கடவீர்கள்; அதினால் உங்கள் தேவனாகிய யெகோவா உங்களை நினைப்பார்; நீங்கள் உங்கள் சத்துருக்களினின்றும் இரட்சிக்கப்படுவீர்கள். அன்றியும் உங்கள் ஆனந்ததினத்திலும், உற்சவநாள்

களிலும், மாசாரம்பங்களிலும், உங்கள் தகனபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் செலுத்தும்பொழுது எக்காளங்களை ஊதவேண்டும்; அது யெகோவாவின் சந்நிதியில் உங்களுக்கு ஞாபகக் குறியாயிருக்கும்; நானே உங்கள் தேவனாகிய யெகோவாவென்றார். சங். கூஅ. ௫-கின்னரத்தினாலும், கின்னரத்தோடு கீதத்தினோசையினாலும் யெகோவாவைப்பாடுங்கள். தாரையினாலும் எக்காளத்தினாலும் இராசாவாகிய யெகோவாவின் சமுகத்தில் ஆனந்தத் தொனிசெய்யுங்கள். உ. சாமு. சு. ௫. தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் சமஸ்தரும் யெகோவாவின் சமுகத்தில் தேவதாருவினாற் செய்யப்பட்ட கின்னரமும், தம்புருவும், மிருதங்கமும், வீணையும், கைத்தாளமு மாகிய நானாவித வாத்தியங்களையும் முழக்கினார்கள்.

இப்படியே உன் தேவசந்நிதானத்திலே வாத்தியகோஷஞ் செய்தல் வேண்டுமென்று விதித்தமை கண்டும், நீ எங்கள் சிவாலயங்களிலே வாத்தியங்கள் முழக்குதலைக்கண்டு இகழ்வது தகுதியன்றே.

---

பத்தாவது

## புண்ணியகாலப்பிரகரணம்.

சோமவாரம் மங்கலவாரம் சுக்கிரவாரம் பானுவாரம் அமாவாசி பூரணை சதுர்த்தி சட்டி கார்த்திகை சிவராத்திரி மாசப்பிறப்பு வருஷப் பிறப்பு உற்சவகாலம் முதலிய தினங்கள் புண்ணிய காலங்க ளென்றும், அவைகளிலே மனம் பொறி வழிபோகாமல் உண்டிசுருக்குதல் செய்து கடவுளை விதிப்படி விசேஷமாக வழிபடுதல் பெரும்புண்ணியம் என்றும் சைவநூல்கள் சொல்கின்றன.

உ. இரா. ௪. உஉ, உங. தன் புருஷனைக் கூப்பிட்டு நான் தேவனுடைய தாசனிடத்திற்போய் வரும்படி வாலிபரில் ஒருவனையும், கழுதைகளில் ஒன்றையும் என்னிடத்தில் அனுப்பும் என்றாள். அதற்கு, அவன் நீ இன்றைக்கு அவனிடத்திற் போகவேண்டிய தென்ன? அமாவாசியுமல்ல; ஓய்வுநாளுமல்லவென்று சொல்ல, அவள் நன்மையாய் முடியுமென்றாள். க. நாளா. உங. ௩க. ஓய்வுநாளிலும், அமாவாசியிலும் நியு

மிக்கப்பட்ட உற்சவங்களிலும், தொகைப்படி, தங்களுக்குக் கட்டளையிடப்பட்ட விதிப்பிரகாரம், யெகோவாவின் சந்நிதியில் நித்தமும் யெகோவாவுக்குச் சகல தகனபலிகளையு மிடவும். லேவி.உ-ங-ம் அதிகாரத்திலும் பிறவிடங்களிலும் ஓய்வு நாளும் மாசப்பிறப்பும் அமாவாசியும் பூரணையும் உற்சவ நாள்களும் புண்ணியகாலங்கள் என்றும், அந்தக்காலங்களிலே யெகோவர்வின் ஆவாசத்தை விட்டுப்பிரியலாகாதென்றும், எவ்வித சாதாரணவேலையுஞ் செய்யலாகாதென்றும், நித்தியாக்கினியிலே இறைச்சி முதலியவைகளை யிட்டுத் தகனபலி செய்தல்வேண்டும் என்றும், தங்கள் தங்கள் சங்கற்பத்தின் படியே நியமித்த தினங்களிலே உபவசித்து விரத மனுட்டித்தல் வேண்டும் என்றும் சொல்லப்பட் டிருக்கின்றது.

இப்படியே உன்விவிலியநூல் பேசுவதைக்கண்டுகொண்டும், எங்களைப் போலவே பானுவாரத்தைப் புண்ணியகாலமென்று கொண்டாடிக் கொண்டும் எங்களைநோக்கி, நீங்கள் காலமெல்லாம் சமமாயிருக்கச் சிலவற்றை வேறுபிரித்துப் புண்ணிய காலங்களென்று கொண்டு, விரதம் அனுட்டித்தலும், திருவிழாக் கொண்டாடுதலும் வீண்செய்கைகள் என்று பிதற்றுவது அழகா?

---

## பதினொராவது
## சிவாசாரியப்பிரகரணம்.

பார்த்தலிங்கப் பிரதிட்டை பரார்த்த பூசை உற்சவம் என்பனவும் தீக்ஷைமுதலியனவுமாகிய சகல கர்மங்களும் செய்தற்கு, கௌசிகாதி பஞ்சரிஷி கோத்திரத்திற் பிறந்த ஆதிசைவர் என்னும் சிவப் பிராமணர்களுள், பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்பவர்களாய், சமயம் விசேஷம் நிருவாணம் என்னும் மூன்று தீக்ஷையும் பெற்றவர்களாய், சைவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களாய், சிவாகமங்களில் விதித்த இன்னோரன்னபல இலக்கணங்களையும் உடையவர்களாய் ஆசாரியாபிஷேகம் பெற்ற சிவாசாரியர்களே அதிகாரிகள் என்றும், மற்றைப் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர்என்னும் நான்கு வருணத்தார்களுள்ளும் மேற்கூறிய வாறேஆசாரியாபிஷேகம் பெற்றவர்கள் மேற்கூறிய பரார்த்த லிங்கப்பிரதிட்டைமுதலியன நீங்கலாக மற்றை ஆன்மார்த்த

லிங்கப் பிரதிட்டை தீக்ஷைமுதலியன செய்தற்கு அதிகாரிக ளென்றும், அவர்களெல்லாரும் மனிதப் பிறப்பினராயினும் தேவர்களாகப் பாவிக்கற்பாலர் என்றும், அவர்களைப் பூசிப்பவர்கள் சிவனைப் பூசிப்பவர்களென்றும், அவர்களைத் தூஷிப்பவர்கள் சிவனைத் தூஷிப்பவர்கள் என்றும் அவர்களுக்குத் தொண்டுசெய்து அவர்கள் சொற்கேட்டு நடத்தல் பெரும் புண்ணியமென்றும், சிவாகமங்கள் செப்புகின்றன.

யாத். உகூ-ம். அதிகாரத்தில் ஆரோனையும் அவன் புத்திரரையும் ஆசாரியராக அபிஷேகம் பண்ணல் வேண்டும் என்றும், அபிஷேகவிதி இன்னது என்றும் யெகோவா விதித்தார் எனவும், ஷை சுo-ம அதிகாரதில் அவ்விதிப்படிமோசேஅவர்களுக்கு அபிஷேகம் பண்ணினான் எனவும், எண். அ-ம் அதிகாரத்தில் யெகோவாவுக்கு மற்றைத் தொண்டுகளைச்செய்யும் பொருட்டு லேவியர் இஸ்ரவேலரினின்றும் பிரித்து அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் எனவும், எண். கஅ-ம் உo-ம் வசனத்திலும், உபா கஅ க. உ. வசனஙகளிலும், ஷை. கசும் வசனத்திலும், ஆரோனுக்கும் அவன் புத்திரருக்கும் அவன் பிதாவின் வம்சத்தாராகிய லேவியாசாரியருககும் அவர்கள் சகோதரராகிய இஸரவேலரோடு பாகமும சுதந்தரமும் இல்லை; யெகோவாவே அவர்களுக்குச் சுதந்தரம் எனவும், எண். கஅ-ம் அதிகாரத்தில் இஸரவேலர் யெகோவாவுக்குக் கொண்டுவந்து கொடுக்கும் இறைச்சி அப்பம் காணிக்கை முதலியவைகளில் ஆரோனுககும அவன் புத்திரருக்கும் லேவியருக்கும் பங்கு உண்டெனவும், உபா. கஉ ம் அதிகாரத்தில் லேவியரைக கைவிடலாகாது எனவும், ஷை. கஎ-ம் அதிகாரதில் சகலரும் லேவியர் சொற்கேட்டு நடத்தல்வேண்டும் எனவும், எண் கசு-ம் அதிகாரத்தில் ஆரோனுக்கு விரோதமாகப் பேசினவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் எனவும், லேவி உக-ம் அதிகாரத்தில் இவர்கள் சந்ததியார்களே தலைமுறைதோறும் ஆசாரியர்களாதற்கு அதிகாரிகள் எனவும், இன்ன இன்ன இலக்கணங்களை யுடையவர்களே ஆசாரியர்களாதற்கு உரியரென வும், மத்-க0-ம் அதிகாரதில் யேசு தன்னுடைய சிஷரை நோக்கி உங்களை அங்கீகரிக்கிறவன் என்னையும் அங்கீகரிக்கிறான்; என்னை அஙகீகரிக்கிறவன் என்னை அனுப்பியவரையும அஙகீகரிக்கிறான். இந்தச் சிறியவர்களில் ஒருவன் என் சீஷனென்று அவனுக்கு ஒரு கலசந் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகான் என்று சொல்லி வியாதிகளை நீக்கவும், பிசாசுகளை ஓட்டவும், அவர்

களுக்கு அதிகாரங் கொடுத்தார் எனவும்சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே உன் சமயநூல் பேசுதல்கண்டும், மனிதர்கள் எல்லாருஞ் சமமாயிருக்க, சைவர்கள் தங்கள் அறியாமையால் அவர்களுட் சிலரை ஆசாரியர்களென்றும், பிராமணர்களென்றும் பெயரிட்டு, அவர்களை உத்தமோத்தமர்களென்று அவர்களை வணங்கி அவர்களுக்குத் தொண்டுசெய்து திரிகிறார்களென்று நீ புலம்புவது என்னை ?

---

பன்னிரண்டாவது

## சரீரசுத்திப் பிரகரணம்.

தினந்தோறும் அனுட்டானம் செபம் பூசை சிவாலய சேவை வேதாகமாதிசாத்திர படனம் முதலிய சற்கருமங்களை, சலத்தினாலே விதிப்படி சரீர சுத்திபண்ணித் தௌத வஸ்திரம் தரித்துக்கொண்டே செய்தல் வேண்டுமென்றும், அவ்வாறே செய்யாமை பாவமென்றும், சைவநூல்கள் சாற்றுகின்றன.

யாத். கம. கக. யெகோவா மோசேயை நோக்கி, மூன்றாம் நாளிலே யெகோவா சகல சனங்களுக்கும் பிரத்தியக்ஷமாகச் சீனாய்மலையின்மே லிறங்குவார். ஆதலால் நீ சனங்களிடத்திற்போய், இன்றைக்கும் நாளைக்கும், அவர்கள் தங்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கும்படி செய்து அவர்களைப் பரிசுத்தப்படுத்தி மூன்றாம்நாளுக்கு ஆயத்தமாயிருக்கும்படிசெய்வாயாக. ஷை. உம. சஉ, சரு, சசு, ருக, ருஉ. நீ ஆரோனையும் அவன் புத்திரரையும், சபையின் ஆவாசவாசலில் வரச்செய்து, அவர்களைச் சலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து, ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களைத் தரிப்பித்து எனக்கு ஆசாரியத்தொண்டு செய்யும்படி, அவனுக்கு அபிஷேகம்பண்ணி, அவனைப் பரிசுத்தப் படுத்துவாயாக:—அப்படியே மோசே செய்தான், யெகோவா தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தான். அவ்விடத்திலே மோசேயும், ஆரோனும், அவனுடைய புத்திரரும், தங்கள் கைகளையும் கால்களையும் கழுவினார்கள். யெகோவா மோசேக்குக் கட்டளையிட்டபடி

அவர்கள் சபையின் கூடாரத்திற் பிரவேசிக்கிறபொழுதும் வேதிகையைச் சமீபிக்கிறபொழுதும் கழுவுவார்கள். யாத். ௩௰. ௧௭. ௨௧. யெகோவா மோசேயை நோக்கி, கழுவுகிறதற்குப் பித்தளையினாலே ஒரு தொட்டியை யுண்டுபண்ணு; அதின் பாதமும் பித்தளையா யிருக்கவேண்டும்; அதைச் சபையின் ஆவாசத்துக்கும் வேதிகைக்கும் இடையில்வைத்து, அதிலே சலம்வார்க்கவேண்டும்; அதில் ஆரோனும், அவன்புத்திரரும் தங்கள் கை கால்களைக் கழுவக்கடவர்கள்; அவர்கள் சபையின் ஆவாசத்தில் பிரவேசிக்கும் பொழுதும், யெகோவாவுக்குத் தகனபலி செலுத்தும்படி தொண்டுசெய்ய வேதிகைக்குச் சமீபிக்கும் பொழுதும், சாவாதபடி ஜலத்தினால் தங்களைக் கழுவக்கடவர்கள்; இது தலைமுறை தலைமுறையாக அவனுக்கும், அவன் சந்ததியாருக்கும், நித்திய நியமமாயிருக்குமென்றார்.

இப்படியே சரீரசுத்தி அத்தியாவசியகமென்றும், அது செய்யாதார் தண்டிக்கப்படுவார்கள் என்றும், உன் சமயநூல் பேசுதல் கண்டும், நீ எங்களை இகழ்வது மடைமையன்றோ?

---

பதின்மூன்றாவது

## ஆசௌசப்பிரகரணம்.

சனன மரணங்களினாலே ஆசௌசமுண்டு என்றும், அது விதித்தகால எல்லையிலே பிராயச்சித்தத்தால் நீங்குமென்றும், ருதுமதிக்கு மூன்றுநாள் ஆசௌசமுண்டு என்றும், அது நான்காம் நாள் பிராயச்சித்தத்தாற்றீருமென்றும், இவ்வாசௌசங்களுடையவர்களைத் தீண்டலாகாது என்றும், சைவநூல்கள் சாற்றுகின்றன.

லேவி, ௧௨. ௧—௫. யெகோவா மோசையை நோக்கி, நீ இஸரவேற்சந்ததியாரிடத்தில், ஒரு ஸ்திரி கருப்பவதியாகி ஆண்பிள்ளைபெற்றால், அசுசியினிமித்தம் ருதுமதியைப்போல எழுநாள் அசுசியாயிருக்கக்கடவள். எட்டாந்தினத்தில் அந்தப்பிள்ளை தன் அக்கிரசருமத்தில் விருத்தசேதனம் பண்ணவேண்டும். பின்பு அவள் முப்பத்து மூன்று நாள்வரைக்கும் உதிரசுசியி னிலைமையிலிருப்பாளாக. சுசிக்கேற்றதின

ங்கள் நிறைவேறுமளவும், எந்தப்பரிசுத்த வஸ்துவையும், பரிசிக்கவும், பரிசுத்த ஸ்தானத்திற் பிரவேசிக்கவும் வேண்டாம். பெண்பிள்ளையைப் பிரசவித்தால் ருதுமதியைப்போல இரண்டுவாரம் அசுசியாயிருந்து, பின்பு தன்னுதிர சுசியினிலைமைக்கேற்ப அறுபத்தாறு நாளிருக்கக்கடவன். லே. ௨௧. ௧—௬. யெகோவா மோசேயை நோக்கி, ஆரோனுடைய புத்திரராகிய ஆசாரியர்களில் எவனாகிலும் தன்சனத்தாரில் ஒருவன் மரித்தால், அசுசியாயிருக்கப்படாது. தன் பிதாவும் மாதாவும் புத்திரனும் புத்திரியும் சகோதரனுமாகிய தன் கிட்டின உறவின் முறையாருக்காகவும், தன் கிட்டின இனத்தாளும் புருஷனில்லாத கன்னிகையுமாகிய தன் சகோதரிக்காகவும் அசுசியாயிருக்கலாம். லே. ௧௧. ௩௯. உங்களுக்கு ஆகாரத்துக்கான மிருகஞ்செத்தால், அதின் பிணத்தைப் பரிசிக்கிறவன் சாயங்காலபரியந்தம் அசுசிப்பட்டிருப்பானாக. லே ௧௫. ௧௯—௨௪. ருதுமதியான ஸ்திரி தன் சரீரத்தின் ஊறலினிமித்தம் ஏழுநாளளவும் அசுசியாயிருப்பாள். அவளைப் பரிசிக்கிறவன் எவனோ அவன் சாயங்கால பரியந்தம் அசுசியாயிருப்பான். அவள் அசுசியாயிருக்கையில் அவள் படுத்த எந்தப்படுக்கையும் அவளிருந்த எந்த ஆசனமும் அசுசியாயிருக்கும். அவளுடைய படுக்கையைப் பரிசிக்கிறவனெவனோ அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துச், சலத்திலே ஸ்நானம் பண்ணக்கடவன், சாயங்காலபரியந்தம் அவன் அசுசியாயிருப்பான். அவள் இருந்த ஆசனத்தைப் பரிசிக்கிறவன் எவனோ அவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துச் சலத்திலே ஸ்நானம் பண்ணவேண்டும். சாயங்காலபரியந்தம் அவன் அசுசியாயிருப்பான். அவளுடைய படுக்கையின் மேலாகிலும் அவளுடைய ஆசனத்தின்மேலாகிலும் இருந்த யாதொன்றைப் பரிசித்தவன் சாயங்காலபரியந்தம் அசுசியாயிருப்பான். ருதுமதியான ஸ்திரியுடன் படுத்தும், அவளால் தீண்டப்பட்டுமிருக்கிற எந்தப் புருஷனும் ஏழுநாள் அசுசியாயிருப்பான்; அவன் படுக்கும் படுக்கையும் அசுசியாகும். இன்னும் ஆசௌசங்களைப்பற்றி மேற்படி புத்தகம். ௧௧. ௧௨. ௧௩. ௧௪. ௧௫. ௨௧. அதிகாரங்களிலே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்படியே, சனனமரண முதலியவைகளால் விதித்த கால எல்லைவரைக்கும் ஆசௌசமுண்டென்றும், அது பிராயச்சித்தத்தால் நீங்குமென்றும், உன் சமயநூல் பேசுதல் கண்டும், நீ எங்களை நோக்கி, சனனாசௌசம் மரணாசௌசம் உண்

டென்று சொல்லுகின்றீர்களே! அதற்கு உருவமுண்டா? பிரேதமுதலியவற்றைத் தீண்டில் அது தீண்டினவனைத் தொடருமா? அது பிராயச்சித்தம் செய்தாலன்றி நீங்காதா? என்று தூஷிப்பது என்னை?

---

பதினோராவது

## நிபந்தத்திரவியப்பிரகரணம்.

சிவாலயங்களுக்குத் தங்கள் தங்களாலியன்றபடி நிபந்தத் திரவியங்களைக் கொடுத்தல் புண்ணியம் என்று சைவ நூல்கள் சொல்கின்றன.

யாத். உரு. க—எ. யெகோவா மோசேயைநோக்கி, இஸ்ரவேல் சந்ததியார் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவந்து செலுத்தும்படிக்கு, அவர்களுடனே பேசுவாயாக. இஷ்டத்துடன் மனப்பூர்வமாய்க் கொடுப்பவன் எவனோ, அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக. நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய காணிக்கையாவன:—பொன், வெள்ளி, பித்தளை, நீலம், தூமிரம், சிவப்பு என்னும் நிறங்களையுடைய மெல்லிய பஞ்சினூல், வெள்ளாட்டு மயிர், சிவப்புவன்னங் கொடுத்த ஆட்டுக்கடாத்தோல், தகசின்தோல், சீத்தீம்மரம், விளக்கெண்ணெய், அபிஷேக தைலத்துக்குப் பரிமள திரவியங்கள், தூபத்துக்கு சுகந்த வருக்கங்கள், கோமேதகரத்தினம், எபோத்து வஸ்திரத்திலும் மார்புப் பதக்கத்திலும் பதிக்கும் இரத்தினங்கள் என்னுமிவைகளாம். ஷை ருகு. ச—கூ. வசனங்களில் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கின்றது. ஷை. உஉ. மனப்பூர்வமுள்ள ஸ்திரீ புருஷர்கள் யாவரும் அஸ்தகடகங்களும், காதணிகளும், மோதிரங்களும், ஆரங்களுமாகிய சகலவிதப் பொன்னுபரணங்களையும் கொண்டுவந்தார்கள். எ. கூ. இவ்விரண்டு பிரதானிகள் ஒவ்வொரு வண்டிலும், ஒவ்வொருவன் ஒவ்வொருமாடுமாக ஆறுகூரல் வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், யெகோவாவுடைய சந்நிதியில் காணிக்கையாகச் செலுத்தும்படி ஆவாசத்துக்கு முன்பாகக்கொண்டு வந்தார்கள். ஷை. கங—கஎ. அவனுடைய காணிக்கையாவது, நைவேத்தியத்துக்கு எண்ணெயிற் பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசு

த்த ஸ்தானத்து ஷேக்கலாக நூற்றுமுப்பது ஷேக்கல் நிறைகொண்டதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது ஷேக்கல் நிறைகொண்ட ஒரு வெள்ளிக்கலமும், தூபவருக்கம் நிறைந்த பத்துஷேக்கல் நிறைகொண்ட ஒரு பொற்கிண்ணமும், தகனபலிக்கு ஒரு இளங்காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவருஷத்து ஆட்டுக்குட்டியும், பிராயச்சித்தத்துக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவும், ஸ்தோத்திரபலிக்கு இரண்டுமாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவருஷத்து ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே: இவையே அம்மினதாபின் புத்திரனாகிய நாக்ஷோனுடைய நைவேத்தியம். இன்னுமிவ்வாறே நிதனேல் எலியாம் முதலிய பிரபுக்கள் காணிக்கை செலுத்தினார்கள் என்பது இவ்வதிகாரத்திலேதானே சொல்லப்பட்டிருக்கின்றது. யாத். ௩௦. ௧௫. உங்கள் ஆத்துமங்களின் பொருட்டுப் பிராயச்சித்தம் பண்ணும்படி நீங்கள் யெகோவாவுக்குக் காணிக்கை கொடுக்கும்பொழுது, செல்வர், அரைச்சேக்கலுக் கேறக்கொடுக்கவும் வேண்டாம்; தரித்திரர், அதற்குக் குறையக் கொடுக்கவும் வேண்டாம். ௨. இரா. ௧௨. ௧௩. ௧௪, ௧௬. யெகோவாவின் ஆலயத்திற் கொண்டு வரப்பட்ட பணத்தினால், யெகோவாவின் ஆலயத்துக்காக வெள்ளிக்கிண்ணங்களும், திரிவெட்டிகளும், பாத்திரங்களும், எக்காளங்களும், எந்தப் பொற்பாத்திரங்களும், வெள்ளிப் பாத்திரங்களும் செய்யப்படவில்லை. யெகோவாவின் ஆலயத்தைப் புதுப்பிக்கும்படி அதை வேலைக்காரருக்குக் கொடுத்துவிட்டார்கள். குற்றத்தினிமித்தமும், பாவத்தினிமித்தமும் கொடுக்கப்பட்ட பணம், யெகோவாவின் ஆலயத்தில் கொண்டு வரப்படவில்லை; அது ஆசாரியர்களுக்கு உரியது. மத். ௮. ௪. பின்பு யேசு, நீ இதை ஒருவனுக்கும் சொல்லாதபடி சாவதானமாயிரு; போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, அவர்களுக்குச் சாட்சியாக மோசே விதித்த காணிக்கையைச் செலுத்துவாயாகவென்றார். மத். ௨. ௧௧. பின்பு அவர்கள் அந்த வீட்டிலே பிரவேசித்து, அதின் (யேசுவின்) மாதாவாகிய மரியாளோடே பிள்ளையைக்கண்டு, வணக்கமாய் விழுந்து, அதை நமஸ்கரித்தார்கள். அன்றியும், அவர்கள் தங்கள் பொக்கிஷப்பெட்டிகளைத் திறந்து, பொன்னையும், குந்துருவையும், வெள்ளைப்போளத்தையும், அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

இப்படியே உன் கடவுள் தமக்குக் காணிக்கை தரும்படி விதித்தார் என்றும், அவ்வாறே அவர் பத்தர்கள் செய்தார்

கள் என்றும், உன் விவிலிய நூலுணர்த்துதல் கண்டும், சிறி தாயினும் ஆராய்ச்சி இன்றி எங்களை நோக்கி, மனிதருக்குப் பரிதானங் கொடுத்தல்போல நீங்கள் எல்லாப் பொருள் களையுமுடைய கடவுளுக்குப் பொன் வெள்ளி முதலியவை களைக் கொடுக்கின்றீர்களே! இதனாலே கடவுள் பிரியப்படு வாரா? இது புண்ணியமாகுமா? என்று சொல்லி இகழ்கின் றாய்.

---

## விவேசனம்.

---

புண்ணியஸ்தலப் பிரகரணமுதலாக நிபந்தத்திரவியப் பிரகரணமீறாக உள்ள பிரகரணங்களிலே, உன் சமயநூலா கிய விவிலிய நூலினின்றும் எடுத்துக்காட்டப்பட்ட வசனங் களினாலே, புண்ணியஸ்தல யாத்திரை முதலிய கிரியைகள் செயற்பாலன என எங்கள் சமயநூலில் விதிக்கப்பட்டவாறே உன் சமயநூலினும் விதிக்கப்பட்டமையைத் தெளிவுறக்காட் டினோம்; நாங்கள், எங்கள் சமயநூலில் விதிக்கப்பட்ட கிரி யைகளை விடாது செய்துவருகின்றோம்; நீயோ உன் சமய நூலில் விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்யாமல் வெறுத்து ஒழித்ததுமன்றி, ஐயையோ, பாவீ! எங்களை நோக்கி, நீங்கள் செய்யும் இக்கிரியைகள் எல்லாம் பயனில்லாதனவாம்; ஆக வே, இவைகளைச் செயற்பாலனவென விதித்த உங்கள் கட வுள் முற்றறிவுடைய மெய்க் கடவுள் அல்லர் என்று இகழ் தலும் செய்கின்றாய்: செய்யவே, உன் சமயநூலில் விதித்த கிரியைகளும் அவ்வாறே பயனில்லாதன என்றும், அவைகளை விதித்த யெகோவாவும் அவ்வாறே மெய்க் கடவுள் அல்ல ரென்றும் இகழ்கின்றவனாயினையே.

"எங்கள் கடவுளாகிய யெகோவா பிதா குமாரர் பரிசுத் தாவீ என மூவராயிருப்பர்: அவர்களுள், குமாரர் எனப்பட் டவர் மனித அவதாரமெடுத்து, யேசுக்கிறிஸ்து எனப்பெயர் பெற்று, அக்கிரியைகள் எல்லாவற்றையும் தள்ளிவிட்டார் ஆதலால், நாங்கள் அவைகளைச் செய்யாதொழித்தனம் என் பாயாகில்; உன் யெகோவா அக்கிரியைகள் தலைமுறைதோ றும் நித்தியமும் செயற்பாலன என்று விதித்திருக்கின் றாரே. அதற்குப்பிரமாணம்:—ஆதி. கள. எ, கஉ, கரு. யாத். கஉ. கச, கஎ. ௯. உ௮. சரு. ௯. உக. ௯, உ௮, சஉ. ௯.

௩0. அ. ௧0. ௨௧, ௩௧. ஷை. ௩௧. ௧௯, ௬௯. ஷை. ௬0, ௧௫, லேவி. ௩. ௧௭. ஷை. ௬. ௨௨. ஷை. ௭. ௩௩. ௩௫. ஷை. ௧0. ௧௧, ௧௫, ஷை. ௧௬. ௨௯, ௩௧. ௩௪. ஷை. ௧௭. ௭. ஷை. ௨௨. ௩. ஷை. ௨௩. ௧௪. ௨௧; ௪௧. ஷை. ௨௪. ௩, ௮; ௯. எண். ௧0. ௮. ஷை. ௪௮. ௧௧, ௧௯, ௨௩. ஷை. ௧௯. ௧0. ஷை. ௨௮. ௬. என்னு மிவைகளாம். யேசுக்கிறிஸ்து இப்படி நித்தியமும் தலைமுறைதோறும் செயற்பாலன வெனத் தமது பிதாவாகிய யெகோவாவால் விதிக்கப்பட்டவைகளைப் பயனில்லாதன என்று தள்ளினுரெனில், தாம் அவரினும் நுண்ணறிவுடைய ரெனக்காட்டி, அவருக்கு விரோதியாயினரே; இப்படி மாறுபட்ட இருவரைச்சமமாகிய அறிவும் ஆற்றலுமுடையரென்று நீ கொள்வது எப்படி?

அக்கிரியைகளைத் தள்ளுதல் பிதாவாகிய யெகோவாவுக்கும் ஒத்தகருத்தேஎன்பாயாகில், அவர் தமக்கு அது கருத்தாமாயில், அவை பின்னர் இன்னகாலத்திலேதள்ளப்படும் என முன்னுணர்ந்து காலவரையறை குறித்திருத்தல் வேண்டும்; அங்ஙனங்குறியாது "நித்தியநியமம்" எனக் கூறினமையாலும், பின்னர்ப் பயனிலவெனத் தள்ளற்பாலனவற்றை முன்னர்ப் பயனுடையவெனக் கொண்டு விதித்தார் எனப்பட்டு இயற்கையுணர்விலாதார் என முடிதலாலும், அவர்க்கு அது கருத்தன்றெனக. இன்னும், நித்திய நியமம் என்று யெகோவா விதித்தபடி கிறிஸ்துநாதருக்கு விருத்தசேதனம் பண்ணப்பட்டது என்றும், அவருடைய பிதாமாதாக்கள் அவரைத் தேவாலயத்துக்குக் கொண்டுபோய் அவர்பொருட்டு யெகோவாவுக்குப் பலியிட்டார்களென்றும், அவர் ஒரு குஷ்டரோகியைச் சுஸ்தப்படுத்தி, அவனைநோக்கி, ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மேசேயின் கட்டளைப்படி நீ சுத்தமானதைக்குறித்துப் பலிசெலுத்துவாயாக என்று கட்டளையிட்டாரென்றும், உற்சவகாலங்களிலே தேவாலய சேவைசெய்தார் என்றும், மத்தேயு மாற்கு லூக்கர் யோவான் எழுதிய சுவிசேஷங்களிலே சொல்லப்பட்டிருத்தலால், அவருக்கும் அது கருத்தன்றெனக.

மனிதர்கள் சகலரும் பாவிகளானபடியினாலே, அவர்கள் பொருட்டு யேசுக்கிறிஸ்து மனிதராய்ப் பிறந்து சிலுவையி லறையுண்டு மரிப்பார் என்பதனை முன்னுணர்ந்து, அதற்கு அறிகுறியாகவே இக்கிரியைகளை யெகோவா விதித்தார்; ஒரு பொருளைக்காட்டும் அறிகுறியானது தன்னாலே காட்டப்படும் அப்பொருள் கைவரும்வரைக்கும் பயன்பட்டு

அது கைவந்தபின்னர்ப் பயன்படாதொழியுமே; அவ்வாறே யேசுக்கிறிஸ்துவின் மரணத்தைக்காட்டும் அறிகுறியாகிய இக்கிரியைகள் அது நிகழும்வரைக்கும் பயன்பட்டு அது நிகழ்ந்த பின்னர்ப் பயன்படாதொழிந்தன என்பாயாகில், அங்ஙனமாயின், கிறிஸ்துநாதர் மரணித்த உடனே, இக்கிரியைகளெல்லாம் பயனில்லன எனக்கொண்டு ஒழிக்கப்படுதல்வேண்டும்; அங்ஙனம் ஒழிக்கப்படாது, அக்கிறிஸ்துவின் அப்போஸ்தலராகிய பவுல்முதலியோராற் செய்யப்பட்டன வென்பது, அப் ௧அ. ௧அ—௨௧. "பவுல் தான் முன்பண்ணின சங்கற்பத்தினிமித்தம் கெங்கிரேயாவிலே தலைச்சௌரம்பண்ணிப் பிரிஸ்கில்லாளும் அக்கிலாவு மானவர்களுடன் சூரியதேசத்திற்குக் கப்பலேறிச்சென்றான். அவன் எபேசுநகரத்தைச் சேர்ந்தபொழுது, அவர்களைவிட்டு நீங்கி, ஆலயத்தில் பிரவேசித்து, யூதருடனே சம்பாஷணை பண்ணினான். அவர்கள் அவனைச் சிலகாலம் தங்களுடன் இருக்கவேண்டும் என்று கேட்க, அவன் சம்மதியாமல், வருகிற உற்சவத்தை ஆசரிப்பதற்கு எதுவிதமும் நான் யெருசலேமில் இருக்கவேண்டும்; தேவனுக்குச் சித்தமுண்டானால், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்று சொல்லி, அவர்களுடைய உத்தரவைப் பெற்றுக் கொண்டு கப்பலேறி எபேசுவைவிட்டுப் புறப்பட்டான்." என்பதனாலும், ஷை. ௨௧. ௨௬. "மறுநாளிலே பவுல் அந்த மனுஷரைச் சேர்த்து அவர்களுடனே தானுஞ் சுத்திசெய்து கொண்டு, தேவாலயத்திற் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் வேண்டிய பலிகொடுக்கப் படுமளவும் சுத்தமாவதற்கான நாட்களை நான் நிறைவேற்றுவேன் என்று அறிவித்தான்" என்பதனாலும், ஷை ௧௬. ௩. "பவுல் தீமோத்தேயுக்கு விருத்தசேதனம் பண்ணினான்." என்பதனாலும் தெளிவுறத் தோன்றுதலாலும், பின்னரப் பவுல் எபிரேயருக்கு எழுதிய நிருபத்திலே பலியையும், உரோமாநகரத்தாருக்கு எழுதிய நிருபத்திலே விருத்த சேதனத்தையு மாத்திரமே விலக்கினானன்றி வேறொன்றையும் விலக்காமையாலும், அந்தப்பவுல் மனிதனேயன்றித் தேவனல்லாமையாலும், தேவனாகிய கிறிஸ்துவின் சொற்பற்றி விலக்கினானெனில், அவர் மரித்தவுடனே தான் அக்கிரியைகளைச் செய்யாதொழித்து விடுவனே அங்ஙன மின்மையானும், கிறிஸ்துநாதர் விலக்கினாரென்பது புதிய உடன்படிக்கையில் யாண்டும் பெறப்படாமையாலும், யார்விலக்கினும் யெகோவா நித்திய நியமமெனக் கூறியதற்கு மாறுபடுதலானும், நீ கூறுவது எவ்வாற்றானும் பொருந்தாது.

இன்னும் யெகோவா பழையவுடன்படிக்கையில் விதித்த கிரியைகளெல்லாம் அறிகுறிகள் எனக் கூறினையே. அங்ஙனமாயில், அக்கிரியைகளெல்லாம் இன்னது இன்னதற்கு அறிகுறியெனப் பொள்ளெனப் புலப்படினன்றிப் பயன்படுதல் கூடாமையாலும், அங்ஙனம் இன்னகிரியை இன்னதற்கு அறிகுறியெனத் தெளிவுற யெகோவா விரித்தாரென யாண்டும் கூறப்படாமையாலும், கூறப்படாதாகவே, அக்கிரியைகளை அனுட்டித்த மோசே முதலியவர்கள், அவைகள் அறிகுறியெனவும் அவ்வறிகுறிகள் காட்டும் பொருள்கள் இவைகளெனவும் அறிந்திரார்களாகையாலும், அறிந்திரார்கள் ஆகவே அவைகளாற் பயன்பெற்றிலர்கள் என்பது தெள்ளிதிற்பெறப்படுதலானும், நீ கூறுவது சற்றும் பொருந்தாது. இப்படிப் பொருந்தா உரைகள் பல பிதற்றுதலை இனியொழித்துவிடு.

எங்கள் சமயமுதனூல்களாகிய சிவாகமங்கள் கிரியாகாண்டம், ஞானகாண்டம் என இருபகுதியனவாம். அவற்றுள், பின்னையகாண்டத்தாற் பிரதிபாதிக்கப்படுஞ் சிவஞானமே பரமமாகிய முத்திக்கு நேரே காரணமாம். முன்னையகாண்டத்தாற் பிரதிபாதிக்கப்படும் கிரியைகள் அந்தச் சிவஞானத்தை யுதிப்பித்து முத்தியைப் பயப்பித்தலால் பரம்பரைக் காரணமாம். அக்கிரியைகள் எல்லாம் சிவஞானத்திற்கு அறிகுறிகளாகும். அது பசுக்களாகிய எங்கள் யுத்தியினால் இடர்ப்பட்டு அமைக்கப்பட்டதன்று. சிருட்டிகாலத்திலே சைவாகமங்களில் அக்கிரியைகளை விதித்த அதிபரமாப்தராகிய சிவனே அக்கிரியைகளுள் இன்னது இன்னதற்கு அறிகுறியென அவ்வாகமங்களிலேதானே தெளிவுறத் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார். முத்திக்குநேரே சாதனமாகிய சிவஞானங் கைவரும்வரைக்கும் இக்கிரியைகளை யாவரும் தங்கள் தங்கள் பக்குவத்துக்கிசைய ஆசாரியர் உபதேசித்தபடி செய்தல்வேண்டும் எனவும் சிவஞானங் கைவந்தபின்னர் அவைகளைச் செய்யாதொழியினும் ஒழியலாம்; பரோபகாரத்தின் பொருட்டு அவைகளைச்செய்யினும் செய்யலாம் எனவும், அக்கடவுளே அருளிச்செய்திருக்கின்றார். இப்படியே பூர்வாபரவிரோதமுதலிய தோஷங்களின்றி விளங்கும் சிவப்பிரணீதமாகிய சைவாகமங்களைக் குருமுகமாக உணர்ந்து, அவைகளால் விதிக்கப்படும் சிவஞான சாதனமாகிய கிரியைகளை நாங்கள் செய்துவருகின்றோம். இவ்வுண்மையை நீ சிறிதாயினும் ஆராய்ந்தறியாமையாலும், நான் பிடித்ததேசாதிப்பன் என்னுங் கருத்தினாலும், எங்களையும், எங்கள் சமயத்தையும்

வேண்டியவாறே இந்நாள்காறும் இகழ்ந்தமைபோல இன்னும் அவ்விகழ்தலே தொழிலெனக்கொண்டு, உன்வாழ்நாளை வீணாகப் போக்காமல் மெய்யுணர்வைப் பெற்று உய்குதி! உய்குதி!!

---

பதினைந்தாவது

## சிவசின்னப்பிரகரணம்.

சிவமந்திரங் கொண்டு விதிப்படி தகிக்கப்பட்ட கோமயமாகிய விபூதியும், அவ்வாறே விதிப்படி பிரதிட்டை செய்யப்பட்ட உருத்திராக்ஷமணியும், முறையே பசுமல நீக்கத்துச் சிவத்துவக்குறியாயும், சிவனது திருக்கண்ணிற் றோன்றும் திருவருட் குறியாயும் இருத்தலாலும், தம்மைத் தரிப்பவர்களை, நாம் சர்வலோகாதி நாயகராகிய பரசிவனுடைய அடிமைகள் என்று இடைவிடாது நினைந்து, தங்கள் மனம் வாக்குக் காயம் மூன்றையும் சிவத்தொண்டுகளிலே செலுத்துவித்து, அவர்களைச சிவனடியார்களோடு சேர்த்தற்கும், அவர்களைக் காண்பவர்களி யாவரையும், இவர்கள் எம்பெருமானாகிய சிவனுக்கு அடிமை பூண்டவர்கள் என்று தெளிந்து அவர்கள்மேற் பத்திபண்ணுவித்தற்கும், ஏதுவா யிருத்தலாலும் அவைகள் சைவசமயமே சற்சமயம் என்று துணிந்து, அதன் வழி நிற்கப் புகுந்தயாவரும் விதிப்படி நித்தியமுந் தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்களா மென்று வேதாகமங்க ளெல்லாம் விளம்பு கின்றன.

எண். கக. ரு, கூ. கடாரியின் தோலும் மாமிசமும் இரத்தமும் சாணியும் எரிக்கப்படவேண்டும்; சுசியாயிருக்கிறவனொருவன் அந்தக் கடாரியின் சாம்பலைப் பாளயத்திற்குப் புறம்பே சுசியான ஒரு இடத்திலே கொட்டிவைக்கக் கடவன். அது இஸ்ரவேற் சந்ததியின் சபையார் நிமித்தம் சுசிசெய்யும் சலத்தின் பொருட்டு வைக்கப்பட வேண்டும்: அது பாவத்தைப் பரிகரிக்கும். எபி. கூ. கங. காளை வெள்ளாட்டுக் கடா இவைகளின் இரத்தமும், கடாரியின் சாம்பலும், அசுசிப்பட்டவன்மேலே தெளிக்கப்பட்டு, சரீர அசுசி நீக்கி அவனைச் சுத்திகரிக்கும். எண். கரு. ருஎ - சo. யெகோவா மோசேயை நோக்கி, நீ இஸ்ரவேற் சந்ததியாரிடத்தில் உங்கள் தலைமுறை தோறும் வஸ்திரங்களின் ஓரங்களில் குஞ்சங்களை உண்டா

க்கி, ஓரத்தின் குஞ்சத்திலே நீலநாடாவைக் கட்டவேண்டும். உங்களுக்காக அது குஞ்சத்திலே இருக்கவேண்டும். அதைப் பார்த்து வியபிசார மார்க்கமாய்ப் போகிற உங்கள் சுவ இருதயத்துக்கும், உங்கள் சுவக்கண்களுக்கு மேற்க நடவாமல், என் சகல கட்டளைகளையும் நினைத்துக் காத்து உங்கள் தேவனுக்குப் பரிசுத்தராகும்படி நீங்கள்பார்த்து, யெகோவாவின் சகல கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி நினைக்கும் பொருட்டு, அது உங்களுக்கு ஒரு குஞ்சமா யிருக்கவேண்டும். யாத். கஉ. உஉ, உங. இஸ்ரவேலர் எகிப்துதேசத்தி லிருந்தபொழுது யெகோவா விதித்தபடி ஆட்டிரத்தத்தினாலே தங்கள் தங்கள் வாசல் நிலைக்கா லிரண்டிலும் நிலையின்மேல் விட்டத்திலும் அடையாளமிட்டு வைத்தார்கள் என்றும், அந்தத் தேசத்தாரைக் கொல்லும்படி யெகோவாவா லனுப்பப்பட்ட தூதர் அவ்வடையாளம் உள்ள வீடுகளிற் போகாமல் அவ்வடையாளம் இல்லாத வீடுகளிற்போய் அங்குள்ள தலைப்பிள்ளைகளைக் கொன்றாரென்றும், சொல்லப்பட் டிருக்கின்றது. வெளி. கூ. ச. தேவனுடைய முத்திரையை நெற்றிகளில் தரியாத மனுஷர்களை மாத்திரமே வருத்தப் படுத்துகிறதற்கு அவைகளுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது.

நீ உன்சமய நூலிலுள்ள இவ்வசனங்களை வாசித்தறிந்து கொண்டும், கோதுமை அப்பத்தையும் திராட்சரசத்தையும் உன் தேவனாகிய கிறிஸ்துவின் மாமிசமும் இரத்தமுமாக வேணும் அவைகளுக்கு அறிகுறியாகவேணும் பாவித்து உட்கொண்டுகொண்டும், நாங்கள் சிவசின்னமாகிய விபூதி உருத்திராக்ஷம் தரித்தலை இகழ்வது நீதியன்றே.

---

## பதினறாவது
## தியானதிப்பிரகரணம்.

சிவமந்திரத்தைக் குருமுகமாக அறிந்து, தினந்தோறும் கண்ணினாலே ஆநந்த அருவிசொரிய அழலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருகச் சிவனைத் தியானித்து அச்சிவ மந்திரத்தை விதிப்படி அதன் பொருளைவிடாது சிந்திக்குஞ் சிந்தையோடு செபம் பண்ணுதலும், அவருடைய திரு நாமங்களையும், கீர்த்தனங்களையு மெடுத்தெடுத்துச்சொல்லி அவரை ஸ்தோத்திரம் பண்ணுதலும், புண்ணியமென்று சிவ சாத்திரங்கள் சொல்லுகின்றன.

க. நாளா. கசு. அ—கய. யெகோவாவைத் துதித்து அவருடைய நாமத்தைச் சொல்லிப் பிரார்த்தனை பண்ணுங்கள்; அவருடைய கிரியைகளைச் சனங்களுக்குள்ளே பிரசித்தப் படுத்துங்கள்; அவரைப் பாடுங்கள்; அவரைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய ஆச்சரியமான கிரியைகளெல்லாவற்றையும் தியானித்துச் சொல்லுங்கள்; அவருடைய பரிசுத்த நாமத்தின் மேன்மையைப் பாராட்டுங்கள். கொலோ. ௩. கசு. சங்கீதங்களினாலும், கீர்த்தனங்களினாலும், ஞானப்பாட்டுக்களினாலும், ஒருவருக்கொருவர் போதித்து, புத்திசொல்லி, பத்தியோடு மனதிலே கர்த்தருக்கென்று பாட்டுப்பாடுங்கள். க. தெச. ரு. கஎ. இடைவிடாமற் பிரார்த்தனை பண்ணுங்கள். உரோ. கரு. கக. புறத்தேசத்தாரே நீங்களனைவரும் கர்த்தாவை ஸ்தோத்திரியுங்கள்; சனங்களே நீங்களனைவரும் அவரைத் துதியுங்கள். மத். சு-ம். அதிகாரத்திலே யேசுக்கிறிஸ்து தமதுசிஷரை நோக்கி, யெகோவாவைப் பிரார்த்தனை செய்யவேண்டுமென்றும் அது செய்யுமுறைமை இதுவென்றும் உபதேசித்து, "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள்பிதாவே" என்பதை முதலிலுடைய ஒரு பிரார்த்தனையை உண்டாக்கிக் கொடுத்தாரென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்வாறே உன் சமயநூலில் விதிக்கப்பட்டமை கண்டுகொண்டும், நீயும் அவ்வாறே தினந்தோறும் உன் கடவுளைப் பாடிப் பிரார்த்தனை செய்துகொண்டும், நாங்கள் எங்கள் கடவுளாகிய சிவனைத் தியானித்து அவருடைய மந்திரத்தைச் செபம்பண்ணி அவரை ஸ்தோத்திரஞ் செய்தலைப் புண்ணியமன்றென்று இகழ்வது நீதியா?

---

## பதினேழாவது
## நமஸ்காராதிப்பிரகரணம்.

---

கடவுளை விதிப்படி நமஸ்கரித்தலும் பிரதக்ஷிணம் அங்கப்பிரதக்ஷிணம் செய்தலும், புண்ணியமென்று சைவநூல்கள் சாற்றுகின்றன.

சங். கூரு. சு. நம்மைச் சிருட்டித்த யெகோவாவை நாம் நமஸ்கரித்து முழங்காற் படியிட்டு ஆராதனை செய்வோம் வாருங்கள். லேவி. கூ. உச. யெகோவாவின் சந்நிதியில் நின்

றும் அக்கினி தோன்றிவந்து வேதிகையின் மேலிருந்த தகனபலியையும், நிணத்தையும் பட்சித்து, சனங்களெல்லாரும் அதைக்கண்ட மாத்திரத்தில் சத்தமிட்டு முகங் குப்புற விழுந்தார்கள். யோசு. ரு. கசு. அப்பொழுது யோசுவா தரையிலே முகங் குப்புறவிழுந்து நமஸ்காரம்பண்ணி, அவருடனே, என்னுண்டவர் தமது அடியேனுக்கு என்ன சொல்லுகிறீரென்று வினவ. மத். உ. கக. பின்பு அவர்கள் அந்த வீட்டிலே பிரவேசித்து அதின் மாதாவாகிய மரியாளோடே பிள்ளையைக் கண்டு, வணக்கமாய் விழுந்து, அதை நமஸ்கரித்தார்கள். வெளி. எ, கக, கஉ, தேவதூதர் யாவரும் சிங்காசனத்தையும், மூப்பரையும், நாலு பிராணிகளையும் சூழ நின்றார்கள்; அவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாக முகங் குப்புறவிழுந்து, ஆமென்: எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும், பராக்கிரமமும், வல்லமையுஞ் சதாகாலமும் உண்டாகக்கடவன ஆமென் என்றுசொல்லித் தேவனை நமஸ்கரித்தார்கள்.

இப்படியே உன் சமயநூலிலே முழங்காற் படியிடுதலும், நமஸ்காரம் பண்ணுதலும் புண்ணியமென விதிக்கப்பட்டமை கண்டுகொண்டும், அவைகளுள் முழங்காற் படியிடுதலை நீயும் புண்ணியமென்று செய்துகொண்டும், நாங்கள் எங்கள் கடவுளை நமஸ்கரித்தலையும் பிரதக்ஷிணம், அங்கப்பிரதக்ஷிணம் செய்தலையும் புண்ணியமல்லவென்று இகழ்கின்றாயே; விவேகமில்லாதவனே ! எங்கள் அவயவங்களிலே இரண்டுமாத்திரம் கர்த்தாவுக்கு முன்னே நிலத்திற் றோயும்படி வணங்குதல் புண்ணியமென்று அவ்வாறே செய்கின்ற நீ எட்டு அங்கம் பூமியிற்பட நமஸ்காரம் பண்ணுதல் அதின் மிகவுமதிகமென்றும், ஒருமுறை பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்காரம்பண்ணுதல் அதினும்மிக அதிகமென்றும், அங்கப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் பண்ணுதல் அனேகமடங்கு அதிகமென்றும் அறியக்கடவாய்.

---

## பதினெட்டாவது
## சிவபுராணப்பிரகரணம்.

---

சிவபுராணங்களிலே சிவனுடைய மகிமையும், அவராலே விதிக்கப்பட்ட சிவபுண்ணியங்கள் பசுபுண்ணியங்களும்

அவைகளைச்செய்யும் முறைமையும், அவைகளைச்செய்தவர்கள் பெற்ற பெரும்பேறும், சிவத்துரோகம் முதலிய பாவங்களும், அவைகளைச்செய்தவர்கள் பெற்றதண்டமும், சொல்லப்படுகிறபடியால், அவைகளை அறிந்தவர்களுக்குப் பாவங்களிலே வெறுப்பும், புண்ணியங்களிலே விருப்பும், சிவனிடத்திலே பத்தியும் உதிக்கும். ஆதலால், அச்சிவ புராணங்களை ஆலயம், மடம் முதலிய பரிசுத்த ஸ்தானங்களிலே அன்புடனே விதிப்படி பூசித்து வாசித்தலும், பிரசாரம் பண்ணுதலும், கேட்டலும் புண்ணியம் என்று சைவநூல்கள் சாற்றுகின்றன.

மிஷி. கூ. ரு. அவர்கள் தங்கள் சங்கள் ஸ்தானங்களிலே நின்றுகொண்டு ஒரு சாமமட்டும் தங்கள் தேவனுகிய யெகோவாவின் நியாயப்பிரமாண புத்தகத்தை வாசித்தார்கள். க. தெச, ரு உஎ. இந்த நிருபத்தைப் பரிசுத்தமான சகோதரர் யாவரும் வாசிக்கும்படி செய்யவேண்டுமென்று, கர்த்தரைக் கொண்டு உங்களை ஆணையிட்டுக்கேட்கிறேன். கொலோ. சு. கசு இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின், லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள்.

உன் சமயநூலிலே இப்படிப் பேசப்பட்டமை கண்டுகொண்டும், நாங்கள் எங்கள் சிவபுராணங்களை வாசித்தல், பிரசரித்தல், கேட்டல்களினாலே யாதொருபயனும் இல்லையென்று பேசுகின்றாய். அப்படியாயில், நீ உன் சமயநூலை வெகுபொருள் செலவிட்டு அச்சிற பதிப்பித்து அநேகர் வாசிக்கும்படி கொடுப்பது என்னை? நீவாசித்து அதன் பொருளைப் பிறருக்குச் சொல்வது என்னை? இப்படித் தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயம் பேசலாமா? நாங்கள் எங்கள் சிவபுராணங்களைவாசித்தல், பிரசரித்தல், கேட்டல்களினாலே பெரும்பயனுண்டென்பதைச் சகல பிரமாணங்களினாலும் பூரணமாய் அறிந்திருக்கின்றோம்.

---

## பத்தொன்பதாவது
# புண்ணியதீர்த்தப்பிரகரணம்

சிவகங்கை, கங்கை, சேதுமுதலியன சிவனது அருட்சத்தி பதிதலால் புண்ணிய தீர்த்தங்களாம் என்றும், அவைகளிலே அன்புடன் விதிப்படி ஸ்நானம் பண்ணுகின்றவர்களுக்

குப் பாவங்களும் குஷ்டம்முதலிய நோய்களும் நீங்குமென்றும் சைவநூல்கள் சாற்றுகின்றன.

௨. இராசா. ரு-ம் அதிகாரத்திலே நாமான் என்பவன் யோர்தான் நதியிலே ஸ்நாநம் பண்ணினதினால், அவனை வருத்திய குஷ்டரோகம் நீங்கிற்று என்றும், யோவான். ரு-ம் அதிகாரத்திலே குருடர் சப்பாணிகள் சூம்பின உறுப்பை உடையவர்கள் முதலான அநேக வியாதிக்காரர் யெருசலேமிலுள்ள பேதெஸ்தா என்னப்பட்ட குளத்திலே ஸ்நாநம் பண்ணினதினாலே சொஸ்த மடைந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும் ஒருவன் உன் சமயத்திலே பிரவேசிக்கும்பொழுது, அவனுடைய அஞ்ஞானமெல்லாம்போக்கி அவனிடத்தே ஞானத்தைப் பதிக்கின்றோமென்றுசொல்லி, தண்ணீரினாலே அவனை ஸ்நானம் பண்ணுவிக்கின்றாய்.

இப்படியிருக்க நீ எங்களை நோக்கி, பூமியிலே உள்ள மற்றைத் தண்ணீரைப் பார்க்கிலும் புண்ணியதீர்த்தம் என்னப்பட்டதில் இருக்கும் விசேஷம் யாது? அதிலே ஸ்நானம் பண்ணுதலினால் சரீரத்திலுள்ள அழுக்குப்போமே யன்றிக் குஷ்டம் முதலிய வியாதிகள் நீங்குமோ? பாவங்கள் விமோசனமாமா? என்று இகழ்வது என்னை?

நாமான் என்பவனுடைய குஷ்டரோகம் நீங்கினது தேவதாசனாகிய இலீஷா என்பவன் "நீபோய் யோர்தான் நதியில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; உனது மாமிசம் புதிதாகும்; நீ சுசியாவாய்" என்று சொல்லிய சொல்லினது விசேஷத்தினாலேயன்றி அந்நதியினது விசேஷத்தினால் அன்று என்றும்; குருடர் சப்பாணிகள் முதலிய வியாதிக்காரர் சொஸ்தமடைந்தது தேவதூதனொருவன் விசேஷகாலத்திலே அந்தக் குளத்திலிறங்கிச் சலத்தைக் கலக்கிய விசேஷத்தினாலேயன்றி அக்குளத்தின் விசேஷத்தினால் அன்று என்றும்; நாங்கள் ஒருவனை எங்கள் சமயத்திற் சேர்த்துக்கொள்ளும்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவனுடைய பாவங்களைக் கழுவிச் சுத்தனாக்குவார் என்பதற்கு அடையாளமாகத் தண்ணீரினால் அவனை ஸ்நானம்பண்ணுவிக்கின்றோம்; அது எங்கள் சமய ஒழுங்குக்காகச் செய்யும் சடங்கு அதுவன்றி, அந்தத்தண்ணீர் அவனுடைய பாவங்களைப் போக்கி அவனைச் சுத்தனாக்குமென்று நாங்கள் உபதேசிப்பதில்லை என்றும் சொல்வாயா

கில், அப், உ. ௩அ, பாவமன்னிப்பின் நிமித்தம் யேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்தாவியாகிய வரத்தைப் பெறுவீர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றதே.

இது புண்ணிய தீர்த்தம் இதிலே நாம் விதித்த விதிப்படியே நம்மேல் வைத்த அன்புடனே ஸ்நானம் பண்ணுதல் புண்ணியம் என்று சர்வசாமர்த்தியமுள்ள சிவன் திருவாய் மலர்ந்தருளினமையாலும், அந்தத்தீர்த்தத்திலே அவருடைய அருட்சத்தி பதிந்திருக்கும் விசேஷத்தினாலும், விதிப்படி அதிலே ஸ்நானம் பண்ணுகின்றவர்களுடைய பாவங்களும் நோய்களும் போமென்பது நிச்சயம்.

---

## இருபதாவது
## சுவர்ணதானப்பிரகரணம்.

சிவனடியார்களுக்கும், வறியவர்களுக்கும், குருடர் முடவர் நோயாளர் முதலியவர்களுக்கும் பொன் வெள்ளி முதலிய திரவியங்களைக் கொடுத்தல் புண்ணியமென்றும், சிவனடியார்களுக்குக் கொடுக்கும் தானங்கள் ஒன்று அனந்தமாக விருத்தியடையும் என்றும் சைவநூல்கள் சாற்றுகின்றன.

சங். ராகஉ. ௯. அவன் வாரி இறைக்கிறான்; தரித்திரருக்குக் கொடுக்கிறான்; அவன் நீதி என்றும் நிற்கும்; அவனுடைய கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். எபி. ௧௩. ௧௬. நன்மையையும் தானதருமத்தையுஞ் செய்ய மறவாதிருப்பீர்களாக; இவ்விதமான பலிகள் மேல் தேவன் மிகவும் பிரியமாயிருக்கிறார். உரோ. ௧உ. ௧௩. பரிசுத்தர்களுடைய குறைவுகள் நிறைய உதவி செய்யுங்கள்; அன்னியரை உபசரிக்கக் கருத்தாயிருங்கள். உ. கொரி. ௯. ௬, எ, ௧உ. சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பெருக விதைக்கிறவன் பெருகவே அறுப்பான்; அவன் அவன் விசனமாயாவது, கட்டாயமாயாவது அல்ல; தன்தன் மனவிருப்பத்தின்படி கொடுக்கக்கடவன்; மனவிருப்பமாய்க் கொடுப்பவனில் தேவன் பிரியமாயிருக்கிறார்; உங்களுடைய இந்தக் கிருபையின் கிரியை பரிசுத்தர்களுடைய குறைவுகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமல்ல; அநேகர் தேவனை ஸ்தோத்திரிக்கிறதற்கும் மிகவும் உபயோ

கமாயிருக்கும். மத. ரு. ௪௨. உன்னிடத்தில் வேண்டிக்கொள்கிறவனுக்குக்கொடு; உன்னிடத்திற் கடன் வாங்க விரும்புகிறவனுக்குப் பாராமுகம் பண்ணுதே. நீதி. உக. கரு. தரித்திரன் ஓலமிடும்போது தன்செவியை அடைத்துக் கொள்ளுகிறவன் தானும் ஓலமிடும்பொழுது கேட்கப்படான். ஷை ககூ. கஎ. தரித்திரனுக்குத் தயை செய்பவன் யெகோவாவுக்குக் கடன் கொடுக்கிறுன்; அவன் செய்ததற்கு அவர் பிரதியளிப்பார். க. யோவா. கூ. கஎ. கஅ. இவ்வுலகத்தின் பொருளை உடையவன் ஒருவன் தன் சகோதரன் குறைவுபடக்கண்டும், தன்னிருதயத்தை அவனுக்கடைத்துக்கொண்டால், அவனுக்குள்ளே தேவனுடைய அன்பு நிலைத்திருக்கிறதெப்படி? என் பிள்ளைகளே! சொல்லினுலும் நாவினுலும் அல்ல; கிரியையினுலும் உண்மையினுலும் அன்புகூரக்கடவோம். தானி ச. உஎ. இராசனே! நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு, நீதியைச்செய்து, உமது பாவங்களையும் தரித்திரருக்குத் தயைசெய்து, உம்முடைய அக்கிரமங்களையும் அகற்றுவீராக; அப்படியானுல் உம்முடைய வாழ்வு நீடித்திருக்கவுங்கூடும். லூக். சு. ௩அ. கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். ஷை க௨. உ௨. உனக்குண்டானவைகளை யெல்லாம் நீ விற்றுத் தரித்திரருக்குக் கொடு; பரமண்டலத்திலே பொக்கிஷத்தைப் பெறுவாய். ஷை ககூ. அ. கூ. சக்கேயு கர்த்தரை நோக்கி, கர்த்தாவே! என் பொருளிற் பாதியைத் தரித்திரருக்குக் கொடுக்கிறேன்; நான் ஒருவனிடத்தில் எதையாயினும் அநியாயமாய் எடுத்திருந்தேனுனுல் நாலுமடங்காய்ப் பிரதியளிப்பேன் என்றுன். யேசு அவனைக் குறித்து, இவனும் ஆபிரகாமின் புத்திரன்; இநினிமித்தம் இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. அப். க௦. ச. தேவதூதன் கொருநேலியை நோக்கி, உன் பிரார்த்தனைகளும் உன் தானதருமங்களும் தேவனுடைய சமூகத்தில் ஒரு ஞாபகக்குறியாய் வந்தன. லூக். க௨, ௩௩, உங்களுக்குண்டானவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள்; பழையதாயப்போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரமண்டலத்திற் சேர்த்துவையுங்கள்; அங்கே திருடன் அணுகான்; பூச்சியுங் கெடுக்காது.

இப்படி உன்சமயநூலிலே பேசப்பட்டிருத்தல் கண்டும், நாங்கள்செய்யும் சுவர்ணதானம் புண்ணியம் அன்றென்றும், அதனுலே நாங்கள் பயன்பெறேம் என்றும், பாதிரியே! நீ சொல்வது புத்திஈனம்.

# இருபத்தொராவது

# அன்னதானப்பிரகரணம்.

சிவனடியார்களுக்கும் வறியவர்களுக்கும் குருடர் முட
வர் முதலியவர்களுக்கும் அன்னதானம் பண்ணுதல் மேலா
கிய புண்ணியம் என்று சைவநூல்கள் சாற்றுகின்றன.

மத். ௧௦. ௪௨. இந்தச் சிறியவர்களில் ஒருவன் என்
சீஷன் என்று அவனுக்கு ஒருகலசந் தண்ணீர் குடிக்கக்கொ
டுக்கிறவன் தன்பலனை யிழந்துபோகானென்று மெய்யாய்
உங்களுக்குச் சொல்லுகிறேன் (ஒருவனுக்குத் தண்ணீர் குடி
க்கக் கொடுத்தல் புண்ணியமாகில் அன்னங்கொடுத்தல் அதி
னும் எவ்வளவு அதிக புண்ணியமாம்.) மத். ௨௫. ௩௪ — ௪௬.
பின்பு இராசா தமது வலதுபாரிசத்தி லுள்ளவர்களை நோக்கி
வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே!
உலக சிருஷ்டி தொடங்கி உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்
பட்ட இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்; நான்
பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போசனத்தைத் தந்தீர்
கள்; நான் தாகமாயிருந்தேன், நீங்கள் எனக்குப் பானத்தைக்
கொடுத்தீர்கள்; நான் பரதேசியாயிருந்தேன், நீங்கள் என்னை
உங்களிடத்தில் சேர்த்துக்கொண்டீர்கள்; நான் நிருவாணியா
யிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; நான் வியாதி
யாயிருந்தேன், என்னை விசாரித்தீர்கள்; நான் காவலிலிருந்
தேன், என்னிடத்திற்கு வந்தீர்கள் என்றுசொல்ல, நீதிமா
ன்கள் அவருக்குத்தரமாய், கர்த்தாவே! நாங்கள் எப்பொழுது
உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு போசனங் கொடுத்தோம்?
தாகமுள்ளவராகக் கண்டு பானத்தைக் கொடுத்தோம்? நாங்
கள் எப்பொழுது உம்மைப் பரதேசியென்று கண்டு சேர்த்துக்
கொண்டு நிருவாணியென்று கண்டு வஸ்திரங் கொடுத்தோம்?
நாங்கள் எப்பொழுது உம்மை வியாதியுள்ளவரென்றும், காவ
லிலிருக்கிறவ ரென்றுங்கண்டு, உம்மிடத்தில் வந்தோமென்
பார்கள். அதற்குத்தரமாய் இராசா, மிகவுஞ் சிறியரான என்
சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்
தீர்களோ, அதை எனக்கே செய்தீர்களென்று மெய்யாய்
உங்களுக்குச் சொல்லுகிறேனென்பான். பின்பு அவர் தமது
இடதுபாரிசத்தி லுள்ளவர்களை நோக்கி, சபிக்கப்பட்டவர்
களே! நீங்கள் என்னைவிட்டுப் பிசாசானவனுக்காகவும், அவ
னுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தப் படுத்தப்பட்ட நித்திய

அக்கினியிடத்திற் போங்கள்; நான் பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போசனங் கொடுக்கவில்லை; நான் தாகமாயிருந்தேன், நீங்கள் எனக்குப் பானங் கொடுக்கவில்லை; நான் பரதேசியாயிருந்தேன், நீங்கள் என்னை உங்களிடத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை; நான் நிருவாணியா யிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; நான் வியாதியுள்ளவனும், காவலில் வைக்கப்பட்டவனுமா யிருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்கவில்லை யென்பான். அப்பொழுது அவர்கள் அவருக்குத்தரமாய், கர்த்தாவே! உம்மைப் பசியுள்ளவ ரென்றாவது, தாகமுள்ளவ ரென்றாவது, பரதேசியென்றாவது, நிருவாணியென்றாவது, வியாதியுள்ளவ ரென்றாவது, காவலிலிருப்பவ ரென்றாவது நாங்கள் எப்பொழுதுகண்டு உமக்குதவிசெய்யவில்லையென்பார்கள். அதற்குத்தரமாய் அவன், மிகவுஞ் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்யா திருந்தீர்களோ, அதை எனக்கே செய்யா திருந்தீர்களென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேனென்பான். இவர்கள் நித்திய தண்டனையையும், நீதிமான்களோ, நித்திய சீவனையும் அனுபவிக்கப் போவார்களென்றார். எசா. ௫௮. ௭. ௧௦. பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைக் கொடுக்கிறதும், தள்ளுண்ட தரித்திரரை உன்வீட்டிலே சேர்க்கிறதும், வஸ்திரமில்லாதவனைக்கண்டு அவனுக்கு வஸ்திரத்தைக் கொடுக்கிறதும், உன் மாம்சத்தைப் போன்றவர்களுக்கு உன்னை மறைத்துக்கொள்ளாமலிருக்கிறதுமாகிய இவைகளல்லவா எனக்குப்பிரியமான உபவாசம். பசியுள்ளவன்மேல் மனமுருகி, துயரப்படும் ஆத்துமாவைத் திருத்திப்படுத்தினால், அந்தகாரத்திலும் உன் ஒளிதோன்றும்; உன் இருளும் மத்தியானத்தைப்போலாகும். லூக். ௩. ௧௧. யோவான். இரண்டு சட்டைகளை யுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை யுடையவனும் அப்படியே செய்யக் கடவனென்றான். ஷை ௧௪. ௧௩. நீ விருந்து பண்ணும்பொழுது தரித்திரர், ஊனர், சப்பாணிகள், குருடர், இப்படிப்பட்டவர்களை அழைப்பாயாக.

இப்படியே உன் சமயநூலிலே பேசப்பட்டமை கண்டும் நாங்கள் அன்னதானம் பண்ணுதல் புண்ணியமன்று என்றும், அதனாலே பயன்பெறோ மென்றும் பேசுகின்றாய்.

## இருபத்திரண்டாவது
# தவப்பிரகரணம்.

ஆன்மாக்களுக்கு மனிதப்பிறப்புக் கிடைத்தது சிவனை வழிபட்டு நித்தியமாய் ஆனந்தமாயுள்ள முத்தியை யடைதற் பொருட்டாதலால் அதற்கு விக்கினமாயுள்ள மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் மூன்றையும் முழுமையும் வெறுத்துத்தள்ளி, தவவேடந்தரித்து, வனத்தில் வாசஞ்செய்துகொண்டு, உண்டி சுருக்குதல்செய்து, ஐம்பொறிகளையும் அடக்கி, சிவனை நினைந்து தவம் பண்ணுதல் பெரும் புண்ணியம் என்று சைவநூல்கள் சாற்றுகின்றன.

ஆசைகள் மூன்றையும் முழுமையும் நீக்கவேண்டிய அவசியம்யாது? வேடத்தினாற் பயன்யாது? உண்டிசுருக்குதலினாற் பயன்யாது? இப்படித் தவம்பண்ணினதினாலே மோக்ஷம் சேரலாமா? என்பாயாகில், சொல்வோம் கேள்.

முதலாவது:—மண், பொன், பெண் என்னு மூன்றும் அநித்தியமுந் துக்கந்தருவனவுமா யிருத்தலாலும், அவற்றின் மேலாசையுண்டாயவழிக் கடவுள்மேல் அன்புவைத்தல்கூடாமையாலும், அவற்றோடுகூடிய வழி ஆசையுண்டாதல் ஒருதலை ஆதலாலும், அவைகளை முழுமையும் வெறுத்து, ஒழித்தல்வேண்டும். அங்ஙனம் எல்லாப்பொருளையும் ஒழித்து ஒரு பொருளை ஒழியாவழியும், பெருநெருப்பைத் தணித்து ஒரு சிறுபொறியை இது யாது செய்யுமென்று தணியாவிடத்தும் அதுபக்கத்துள்ள பொருள்களெல்லாவற்றிலும் அதிசீக்கிரமாகப் பற்றிப் பின்னு மெரிந்தாற்போல அவ்வொருபொருளாசை முன்விடப்பட்டவெல்லாப்பொருளாசைகளையும் மீண்டும் வருவித்து, புண்ணியசங்கற்பத்தை அழித்துத் தவத்திற்கு இடையூறாய்க் கலக்கஞ்செய்யும். ஆகையால் அவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே விடுதலே தகுதியாம்.

௧. கொரி. ௭. ௧, ௩௨, ௩௩, ௩௪. ஸ்திரீயைத் தொடாமலிருப்பது மனுஷனுக்கு நலம். நீங்கள் கவலையில்லாமல் இருக்க வேண்டும் என்பதே என் வாஞ்சை. விவாகமில்லாதவன், கர்த்தரைப் பிரியப்படுத்தும்படி கர்த்தருக்கு ஏற்றவைகளைக் குறித்து விசாரமாயிருப்பான். விவாகம் பண்ணினவன், மனைவியைப் பிரியப்படுத்தும்படி உலகத்துக் கேற்றவைகளுக்

3233 (6466)


தாகக் கவலைப்படுவான். அவள் விவாகம்பண்ணாமலிருந்தால் அதிக சௌக்கியத்தை அநுபவிப்பாள். மத். ௧௯. ௧௦—௧௨. அவருடைய சீஷர் அவரை நோக்கி, ஸ்திரீயுடனே புருஷனுடைய சம்பந்தம் இப்படி யிருக்குமேயாகில், விவாகம் பண்ணுவது நன்மை யல்லவென்றார்கள். அவர், அவர்களுடனே, எவர்களுக்கு அளிக்கப்பட்டதோ அவர்களேயன்றி, மற்றவர்கள் இவ்வாக்கைப்பற்றார்கள். அண்ணகர்களுண்டு, சிலர் மாதாவின் கருப்பத்தில் அப்படியே பிறந்தார்கள். சிலர் மற்றை மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டார்கள். சிலர் பரமராச்சியத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கினார்கள். இதற்குடன்பட வல்லவனெவனோ, அவன் உடன்படக் கடவனென்றார். ஷை அதி. ௨௩, ௨௪. யேசு தம்முடைய சீஷரை நோக்கி, ஐசுவரியவான் தேவனுடைய பரமராச்சியத்திற் பிரவேசிப்பதரிதென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன். ஐசுவரியவான் தேவனுடைய இராச்சியத்திற் பிரவேசிப்பதிலும், ஒரு ஒட்டகம் ஊசியின்காதிலே நுழைவது எளிதென்று உங்களுக்குச் சொல்லுகின்றேன் என்றார். ஷை அதி. ௨௯. என் நாமத்தினிமித்தம், வீடுகளையாகிலும், சகோதரரையாகிலும், சகோதரிகளை ஆகிலும், பிதாவை ஆகிலும், மாதாவை ஆகிலும், மனைவியை ஆகிலும், பிள்ளையை ஆகிலும்,நிலங்களை ஆகிலும், விட்டவன் எவனோ அவன் நூறு மடங்கு பலன் பெற்று, நித்திய சீவனையும் சுதந்தரித்துக்கொள்வான் லூக். ௧௪. ௨௬, ௩௩. ஒருவன் என்னிடத்தில் வந்து தன் பிதாவையும், மாதாவையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன்சுவபிராணனையும், வெறுக்காவிட்டால் என் சீஷனா யிருக்கமாட்டான். உங்களில் எவனும் தனக்குண்டான யாவற்றையும் வெறுத்துவிட்டா லொழிய அவன் என் சீஷனாயிருக்கமாட்டான். மத், ௬. ௨௪. ஒருவன் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ் செய்யமாட்டான். ஒருவனை அவன் பகைத்து, மற்றவனை நேசிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அலட்சியம்பண்ணுவான். நீங்கள் தேவனையும் மம்மோனையும் சேவிக்கமாட்டீர்கள்.

இப்படி உன்சமய நூலிலே பேசப்பட்டமை கண்டும், முற்றத்துறத்தலினாலே பயனில்லையென்று நீ சொல்வதுபுத்தியீனம். முற்றத்துறந்தோ மென்று தவவேடந்தரித்துத்திரிகின்றவர்களுள் அனேகர் ஆசையில் அமிழ்ந்திக் கெட்டுப்போனார்களே எனபாயாகில், உன்னுடைய கிறிஸ்து தமக்குச்சீஷராகத் தெரிந்துகொண்ட பன்னிருவருள் இருவர் கொடியரா

வஞ் செய்தார்களென்று உன் சமயநூலிலே பேசப்பட்டதை நினைந்து பேசக்கடவாய்.

உ-வது: தவவேடமானது, தன்னைத் தரிக்கின்றவனை, அவன் தவஞ்செய்யும்படி மனசிலேபண்ணிய சங்கற்பத்தை இடைவிடாது நினைப்பித்து, அவனைத் தவத்திலே நிலை நிறுத்தி, தபோதனர்களோடு சேர்த்தலாலும், அவனைக் கண்டோர் யாவரையும், அவனைத் தபோதனனென்று உணர்ந்து அவன் மேற் பத்தி பண்ணுவித்தலாலும், தன்னைத் தரிக்கின்றவர்களுக்கும் பிறர்க்கும் பயன்படுகின்றது.

அப். ௧௮. ௧௮. பவுல் தான்முன்பண்ணின சங்கற்பத்தினிமித்தம் கெங்கிரேயாவிலே தலைச்சௌரம்பண்ணி, சூரிய தேசத்திற்குக் கப்பலேறிச்சென்றான். ஷை ௨௧. ௨௪, நீ அவர்களைச் சேர்த்து, அவர்களுடனே உன்னையுஞ் சுத்திபண்ணிக்கொண்டு, அவர்கள் தலைசௌரம் பண்ணிக்கொள்வதற்கு வேண்டிய செலவபண்ணுவாயாக. எண், ௬. ௫. அவன் பிரதிட்டை சங்கற்பகாலம் முழுதுஞ் சௌரகன் கத்தி அவன் தலையின் மேற்படலாகாது; யெகோவாவுக் கென்று பிரதிட்டைபண்ணினகாலம் நிறைவேறுமளவும், அவன் பரிசுத்தமாயிருந்து தன் தலைமயிரை வளரவிடக்கடவன். நிகி. ௯. ௧. அந்த மாதத்தின் இருபத்துநாலாந் தினத்திலே, இஸ்ரவேற்சந்ததியார் உபவாசஞ்செய்து இரட்டுடுத்து, புழுதியைத் தலையின் மேற் போட்டுக்கொண்டு கூடினார்கள். லூக். ௧0. ௧௨. அவர்கள் நெடுங்காலத்துக்குமுன் இரட்டைத்தரித்து, சாம்பலிலுட்கார்ந்து மனந்திரும்புவார்கள்.

இப்படியே உன் சமயநூலிலே தவவேடம் விதிக்கப்பட்டமை கண்டும், சைவர்கள் முண்டனஞ் செய்தலையும் சடை வளர்த்தலையும் காவிவஸ்திரம் தரித்தலையும்இகழ்வது மடமையன்றோ?

௩-வது : உண்டி சுருக்குதல் மனம் பொறிவழி போகாமல் நிற்றற் பொருட்டேயாம்.

கொலோ. ௨. ௨௩. இவைகள் சுவசித்த ஆராதனையினாலும், தாழ்மையினாலும், சரீரத்தைப்பேணாமல் அதை வருத்தப் படுத்துகையினாலும், ஞானவேட முள்ளவைகளாயிருக்கின்றன. சங். ௱௯ ௨௪. உபவாசத்தினால் என் முழந்தாள்கள்

தடுமாறுகின்றன. நிணமின்றி என் மாமிசம் காய்ந்து போகின்றது. உரோ. கரு. கசு. உங்கள் மாமிசத்திற்காக அதின் இச்சைகளைத் திருத்தியாக்கும்படி தேடாமல், கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள். மத். சு. கசு. நீங்கள் உபவாசம் பண்ணும்பொழுது, கபடிகளைப்போல முகவாட்டத்தைக் காட்டவேண்டாம். அவர்கள், தாங்கள் உபவாசமா யிருப்பதை மனுஷர் காணும்படி, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்.

இப்படியே உண்டி சுருக்குதல் உன் சமயநூலில் விதிக்கப்பட்டமை கண்டும், சைவர்கள் உண்டி சுருக்குவதை நீ இகழ்வது பேதமை அன்றோ?

சுவது: மனசைப் பொறிவழி போகாமல் அடக்குதல் கடவுளை இடைவிடாது தியானித்து முத்திபெறற் பொருட்டாம்.

மத். சு. சு. நீ பிரார்த்தனை செய்யும்பொழுது, உன் உள்ளறையில் பிரவேசித்து, அதின்கதவைப் பூட்டினபின்பு, அந்தரங்கத்திலுள்ள உன்பிதாவைநோக்கிப்பிரார்த்தனைசெய்; அப்போது அந்தரங்கத்தி லுள்ளதைப் பார்க்கிற உன்பிதா, பிரத்தியட்சமாய் உனக்குப் பலனளிப்பார். (உலகக்கவலையை யொழித்துத் தனியே சற்றுநேரம் இருந்து பிரார்த்தனை பண்ணுதல் பெரும்பயனைத் தருமாயின், அநவரதமும் கடவுளை இடைவிடாது சிந்தித்துத் தவம் பண்ணுகை அதினும் எத்தனைபங்கு அதிகமாகிய பயனைத் தருமென்பதனை, புத்தியில்லாத பாதிரியே! நீதானே சிந்தித்துப்பார்.) லூக். கக. ரு—க0. பின்னும் அவரவர்களிடத்தில், உங்களில் ஒருவன் அத்தராத்திரியிலே தனக்குச் சிநேகனுனவனிடத்திற்குப்போய் அவனுடனே, சிநேகனே! என் சிநேகிதன் ஒருவன் பிரயாணமாய் என்னிடத்தில் வந்திருக்கிறான்; அவனுக்கு 'முன் வைக்கிறதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை; நீர் எனக்கு மூன்று அப்பங் கடனுகக் கொடுக்கவேண்டுமென்று கேட்கும் பொழுது, உள்ளேயிருக்கிறவன், என்னை வருத்தப்படுத்தாதே; இப்பொழுது கதவு பூட்டியாயிற்று; என் பிள்ளைகள் என்னுடனே படுத்திருக்கிறார்கள்; நான் உனக்குத் தருகிறதற்கு எழுந்திருக்கக்கூடாதென்று உத்தாஞ்சொல்லி, அவன் தனக்குச் சிநேகிதனு யிருப்பதினிமித்தம் அவனுக்கு எழும்பிக்கொட' திருந்தும், தன்னை அவன் வருந்திக் கேட்கிறபடி

யினால் எழுந்து, அவனுக்கு வேண்டிய அளவு கொடுப்பானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேண்டிக் கொள்ளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்; வேண்டிக் கொள்ளுகிறவனெவனும் வாங்கிக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். ஷெ. ௧௮. ௭. தேவன் சிலநாள் தாமதித்தாலும், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டு, தம்மை நோக்கி இரவும் பகலும் வேண்டுதல் பண்ணுகிற அவர்களுக்காகப் பழிவாங்காமலிருப்பாரா.

இவ்வாறே கடவுளை இடைவிடாது சிந்தித்தல் பெரும் புண்ணியமென்று உன்சமயநூல் பேசுதல்கண்டும், சைவர்களுள் அனேகர் சந்நியாசிகளாய்ச் சிவனை இடைவிடாது தியானித்துத் தவம்பண்ணுதலை ஆவசியகம் அன்று என்று நீபேசுவது பெரும்பாவமே.

மத். ௩. ௧. ௪. யோவான் ஸ்நானன் யூதேயாவின் வனத்திலே வந்து, ஒட்டகமயிருடையைத் தரித்து, தன் அரையிலே வார்க்கச்சுக் கட்டிக்கொண்டிருந்தான்; வெட்டுக்கிளிகளும் காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தன. ஷை. ௧௧. ௭—௧௧. அவர்கள் போனபின்பு, யேசு, யோவானைக் குறித்துச் சனங்களிடத்திலே, நீங்கள் வனத்தில் எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், காற்று அசைக்கும் நாணலையோ; எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள், மெல்லிய வஸ்திரங்களைத் தரித்த ஒரு மனுஷனையோ; மெல்லிய வஸ்திரங்களைத் தரித்திருப்பவர்கள் அரசர் மாளிகைகளிலிருக்கிறார்கள்; எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், தீர்க்கதரிசியையோ; ஆம், தீர்க்கதரிசியிலும் அதிக மேன்மையுள்ளவனையேயென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். "பாரும், என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உனக்கு முன்னேபோய், உனது வழியை ஆயத்தப்படுத்துவான்" என்று ஒருவனைக் குறித்து எழுதியிருக்கின்றது; அவனே இவன்; ஸ்திரிகளிடத்திலே பிறந்தவர்களில், யோவான் ஸ்நானனிலும் பெரியவன் ஒருவனுந் தோன்றவில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதனால் யோவான் ஸ்நானன், லௌகிக ஆசைகளை முழுமையும் வெறுத்துத்தள்ளி, தவவேடந்தரித்து உண்டிசுருக்கி வனவாசியாய்த் தவம்பண்ணினான் என்றும், அதினாலே அவன் பூமியிலே பிறந்தவர்கள் எல்லாருள்ளும்

மிகப்பெரியவனாயினான் என்றும் காண்கின்றது. அதுவுமன்றி இலீசா என்பவன் தவவேடம் பூண்டு, தவம் பண்ணினான் என்று, உ. இரா. க. அ. ம் வசனத்திற் காணப்படுகின்றது.

---

## விவேசனம்.

சிவனே பரமபதியென்றும், அவர் அருளிய வேதாகமங்களே மெய்ந்நூல்களென்றும், அவைகளில் விதிக்கப்பட்டவைகளெல்லாம் புண்ணியங்களென்றும், அப்புண்ணியங்களினாலே பெரும்பயனுண்டென்றும், சகல பிரமாணங்களினாலும் நாங்க ளறிந்திருக்கின்றோம். அப்படிப்பட்டவைகள் பண்ணியங்கள் அல்லவென்றும், அவைகளினாலே பயனில்லையென்றும், பயன் உண்டென்று சொன்ன நூல் பொய்ந்நூலென்றும், அப்படிச்செய்தவர்களுக்கு இன்ன இன்ன பயனளிப்போமென்று சொன்னதேவன் பொய்த்தேவனென்றும் உனக்குத் தெளிவாக விளங்கினால், நீ அவ்வாறாகிய புண்ணியங்களையேவிதித்த உன்சமயநூலையும் பொய்ந்நூலென்று கிழித்தெறிந்து, இப்போது நீ தேவனென்று வழிபடுகின்ற பொய்த்தேவனையும் உன் மனசினின்று மாற்றிவிடு.

கிறிஸ்துவை விசுவசிக்கும் விசுவாசத்தினாலன்றி, யாவராயினும் தாங்கள் செய்யும் புண்ணியங்களினாலே மோட்சம் சேர்தல் கூடாதென்கிறேன்; அதுவன்றி, சொல்லப்பட்ட புண்ணியங்களைப் புண்ணியங்களல்லவென்று நான் ஒருபொழுதும் சொன்னதில்லை என்பாயாகில், மற்றைப் புண்ணியங்களைத் தவிர்த்தால் விசுவாசம் என்பது ஒன்றில்லையே. யாக்: உ, கச—உகூ, "என் சகோதரரே! ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியுங் கிரியைகளில்லாதவனானால் அவனுக்கென்ன பலன்வரும்; விசுவாசம் அவனை இரட்சிக்குமா? சகோதரனாயினும், சகோதரியாயினும் வஸ்திரமில்லாதவர்களும், தின ஆகாரமில்லாதவர்களுமாயிருக்கும்பொழுது, உங்களில் ஒருவன, அவர்கள் சரீரத்துக்கு வேண்டியவைகளைக் கொடாமல், அவர்களுடனே, நீங்கள் சமாதானத்தோடே போய்க் குளிர்காய்ந்து, பசியாறுங்கள் என்று சொல்வதினால் என்னபலன்? இவ்வண்ணமே விசுவாசமும், அதற்குக்கிரியையில்லாதிருந்தால், தனித்து மரித்ததாயிருக்கும். ஒருவன் வந்து உனக்கு விசுவாசமுண்டு; எனக்குக் கிரியைகளுண்டு; உன கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் கா

ண்பி; நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினால் உனக்குக் காண்பிக்கிறேனென்பான். தேவன் ஒருவருண்டென்று விசுவசிக்கிறாய்; நீ நன்றாகச் செய்கிறாய்; பிசாசுகளும் விசுவசித்து நடுங்குகின்றன. உணர்வற்ற மனுஷனே! கிரியைகளில்லாத விசுவாசம் மரித்ததென்று அறிய விரும்புகிறாயா; நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம், வேதிகையின்மேல் தன் புத்திரனாகிய ஈசாக்கைப் பலியிட்டபொழுது, கிரியைகளினாலல்லவா நீதிமானாக்கப்பட்டான்; விசுவாசம் அவன் கிரியைகளுடனே கூட முயற்சிசெய்து, அந்தக் கிரியைகளினாலே விசுவாசம் முடிவுபெற்றதென்று நீ காணலாகும்; "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியென்றெண்ணப்பட்டது" என்கிற வேதவாக்கியம் நிறைவேறலாயிற்று; அவன் தேவனுடைய சிநேகனென்னப்பட்டான். ஆதலால், ஒரு மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலும் நீதிமானென்றெண்ணப்படுவதைக் கண்டிருக்கிறீர்கள். மேலும் இராகாப்பென்னும் வேசை தூதர்களை ஏற்றுக்கொண்டு, வேறுவழியாய் அவர்களை அனுப்பிவிட்டபொழுது, கிரியைகளினாலல்லவா நீதியுள்ளவளாக்கப்பட்டாள். ஆதலால், ஆவியில்லாமல் சரீரம் சாவுக்குட்பட்டதாயிருப்பதுபோல், கிரியையில்லாமல் விசுவாசம் மரித்ததாயிருக்கின்றது" என்று இப்படி மற்றைப் புண்ணியங்களைத் தவிர்க்கில் விசுவாசம் என்பது ஒன்றில்லையென்று உன் சமயநூலிலேதானே சொல்லப்படுகின்றது. அதுவுமன்றி, இரக்கம் பொறை முதலியனபோல விசுவாசமும் மனசினாலே செய்யப்படும் புண்ணியம்தானே; ஆகையால் யாவரும் தாம்செய்யும் புண்ணியங்களினாலே மோக்ஷம் சேர்தல் கூடாதென்று நீ பிதற்றுவது பொருந்தாது. மத்: எ. உக. என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே!! என்று சொல்லுகிற எவனுமல்ல, பரமண்டலத்திலுள்ள என்பிதாவுடைய சித்தத்தின்படி செய்கிறவனே, பரமராச்சியத்திற் பிரவேசிப்பான். லூக்: சு. சசு. நான் இடுகிற கட்டளைப்படி நீங்கள் செய்யாமலிருந்து என்னைக் கர்த்தாவே! கர்த்தாவே!! என்று சொல்வதென்ன? யாக்: க. உஉ. நீங்கள் உங்களை வஞ்சியாமல் வாக்கியத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி நடக்கிறவர்களாயுமிருப்பீர்களாக. இப்படி உன்சமயநூலிலேதானே புண்ணியங்களின்றி மோக்ஷஞ் சேர்தல் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கின்றதே.

விசுவாசம் மனம் வாக்குக் காயங்களினாலே செய்யப்படும் புண்ணியங்களுள் ஒன்று என்பதும், புண்ணியங்க

ளின்றி மோக்ஷஞ்சேர்தல் கூடாதென்பதும் மெய்யே; ஆயினும், அவைகளை எங்கள் சமயத்தினின்று செய்தல்வேண்டும்; மற்றைச் சமயிகள் செய்யும் கிரியைகளெல்லாம் புண்ணியங்களைப்போன்றிருப்பினும் அவைகளாற் சிறிதும் பயனில்லை, அவைகள் ஸ்திரீகளுடைய ஆசௌசம்பட்ட வஸ்திரங்கள்போன்றிருக்குமேயன்றி, ஒருபொழுதும் கர்த்தாவுடைய திருவுளத்திலேருவாம். ஆதலால், அவர்கள் எவ்வகைப்பட்ட புண்ணியங்களைச் செய்யினும், நித்திய நரகவேதனையை அனுபவிப்பார்கள் என்பாயாகில், கிறிஸ்துசமயம் சிறிதாயினும் பரவாத இடங்களிலுள்ளவர்களும் தாம்தாம் எவ்வெப்புண்ணியங்களைச் செய்யினும் கிறிஸ்துவை விசுவசியாமையால், நரகத்திற் செல்வாரெனச் சொல்லல்வேண்டும்; அங்ஙனமாயில், அவர்கள் கிறிஸ்துவை விசுவசியாமைக்கேது உன்கடவுள் தமது சமயநூலை அவர்களுக் குணர்த்துவியாமையாம். ஆகவே, குற்றம் யாரிடத்தது? விவேகஞ் சிறிதுமில்லாதவனே! சொல்லு. இன்னும், கிறிஸ்துசமயம் பரவிய இடங்களிலுள்ளவர்களும் அச்சமயநூலை வாசித்தும், தத்தஞ்சமயநூலே மெய்ந்நூலென்று துணிந்து, அதனுள் விலக்கப்பட்ட பாவங்களையொழித்து விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்து அதனாலே கடவுளெனப்பட்டவரை வழிபடுகின்றவர்கள் நித்திய நரகத்திற் செல்வார்களெனல்வேண்டும்; அப்படியாயில், அவர்கள் கிறிஸ்துசமயநூலை மெய்ந்நூலெனக் கொள்ளாமைக்கேது உன்பரிசுத்தாவி அவர்களுள்ளத்திற் புகாமையேயாம். ஆகவே, குற்றம் பரிசுத்த ஆவியினிடத்ததேயாம். இந்நியாயத்தினாலே "கிறிஸ்துவை விசுவசியாதவர்கள் எல்லாரும் நித்தியநரகத்திற் செல்வார்கள்" என்னும் உன்னுரை சிறிதும் பொருந்தாமை சிறுவருக்கும் தெள்ளிதிற் புலப்படும். எங்கள் சமயநூல்களாகிய வேதாகமங்கள், சைவசித்தாந்தமொன்றே சற்சமயமென்றும், அதன்வழி நிற்பவர்களே பரமமாகிய முத்தியையடைவர்கள் என்றும், அந்நூல்களை மெய்ந்நூல்களெனத் தெளியாது பிறசமய நூல்களை மெய்ந்நூல்களெனக்கொண்டு அவற்றின்வழி நிற்பவர்கள் சுவர்க்காதிகளிலே தங்கள் தங்கள் கர்மத்துக்கேற்ற பயன்களை அனுபவித்து, தங்கள் தங்கள் புண்ணிய விசேடத்தினாலே பின்னர்ச் சைவத்திற் புகுவார்கள் என்றும், சைவமே சற்சமயமென்று தெளிந்தும் பரசமயங்களிற் புகுந்தவர்கள் நரகத்திலே துயருறுவார்களென்றும் சொல்கின்றன. இதனைக்குறித்துச் சைவாகமங்களிலே விரித்தவாறே விரிக்கப்புகில், பெருகுமாதலா

MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY

லும், விரிக்கினு முனக்குச் சிறிதும் பயன்படாதாகலாலும், விரித்துரைத்திலமென் றறியக்கடவாய்.

அநேகர் அற்ப புண்ணியத்தினுலும் மோக்ஷஞ்சேர்ந்தார் களென்று உங்கள் சிவபுராணத்திற் சொல்லப்படுகின்றது; இது யுத்திக்குச் சிறிதும் பொருந்தவில்லையே என்பாயாகில், இன்னது இன்னது புண்ணியமென்றும், இன்னது இன்னது பாவமென்றும், அவைகளுக்கு இன்னது இன்னது பயனென்றும், ஆதியிலே கடவுள் தாமே வகுத்தார். கடவுள் எதனைப் புண்ணியமென்று விதித்தாரோ அதுவே புண்ணியமும், அதற்கு எதனைப் பயனென்று விதித்தாரோ அதுவே பயனும், எதனைப் பாவமென்று விலக்கினரோ அதுவே பாவமும், அதற்கு எதனைப் பயனென்று விதித்தாரோ அதுவே பயனுமாயிருக்கும்; அங்ஙனமன்றி அவரால் விதிக்கப்படாதது புண்ணியமுமன்று; விலக்கப்படாதது பாவமுமன்று. இப்படி வகுக்கப்பட்ட புண்ணியங்களுள் சற்றும் பிரயாசமின்றி மிக எளிதிற் செய்யப்படுவனவாயும் மிகுந்த பயனைத் தருவனவாயும் இருக்கும் புண்ணியங்களுமுண்டு; பெரும்பிரயாசத்தினுற் செய்யப்படுவனவாயும் சிறுபயனைத் தருவனவாயும் இருக்கும் புண்ணியங்களுமுண்டு; பாவங்களும் இப்படியே யிருக்கும். இப்படிப்பட்ட புண்ணியபாவங்களைச் செய்பவர்கள் அதற்குக் கடவுளால் நியமிக்கப்பட்ட சுகதுக்கங்களை அடைவார்கள். ஆகையால் பிரயாசமின்றி மிக எளிதிற் செய்யப்படும் புண்ணியங்களினுலும் மோக்ஷமடையலாம் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்ட மகாசண்டாளராகிய கள்வரிருவரும் அறிவீருக்கும்வரைக்கும் அவரை நிந்தித்தார்களென்றும், பின்பு அவர்களுளொருவன் அவரை நோக்கி, கர்த்தாவே! நீர் உம்முடைய இராச்சியத்திற் பிரவேசிக்கும்பொழுது அடியேனை நினைந்தருளுமென்றான் என்றும், அதனால் அவன் மோக்ஷமடைந்தானென்றும், மத். ௨௭. ௪௪, லூக்: ௨௩, ௪௨-௪௩, வசனங்களிற் காணப்படுகின்றது. இப்படிச் சற்றேனும் பிரயாசமின்றிச் செய்யப்படுவனவாயும். பெரும்பயனைத் தருவனவாயுமிருக்கும் புண்ணியங்கள் உண்டென்று உன் சமயநூலிலே காணப்படுகின்றது. பெரும்பிரயாசத்தினுற் செய்யப்படுவனவாயும் சிறுபயனைத் தருவனவாயும் இருக்கும் புண்ணியங்களை உன் சமயநூலில் வந்தவழிக் கண்டுகொள்க. ஒருவன் அற்பபாவத்தினுலே நரகடைவானெனின், அற்ப புண்ணியத்தினுலே ஒருவன் மோக்ஷமடைதலுங் கூடுமே. பாவத்தினுல் வருந்துன்பம் அவனுக்கு உண்

டெனில், புண்ணியத்தினால் வரும் இன்பமும் அவனுக்கு உண்டென்பதற்குச் சந்தேகமில்லையே.

லூக். ௭. ௩௬—௪௮, பரிசேயரில் ஒருவன் தன்னுடன் போசனம் பண்ணும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் பரிசேயனுடைய வீட்டிற் பிரவேசித்துப் பந்தியிருந்தார். பரிசேயனுடைய வீட்டிலே பந்தியிருக்கிறதை அந்த ஊரிலுள்ள பாவியாகிய ஒரு ஸ்திரீ அறிந்து, ஒரு பாணியிற் சுகந்த தைலத்தைக் கொண்டுவந்து, அவருடைய பாதங்களினருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைக் கண்ணீரினாலே கழுவி, தன் தலைமயிரினாலே துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, சுகந்த தைலத்தைப் பூசினாள். அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபொழுது, இவர் தீர்க்கதரிசியானால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும், இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பாரென்று தனக்குள் எண்ணிக்கொண்டான். அப்பொழுது ஏசு அவனை நோக்கி, சீமோனே! உனக்கு ஒன்றைச்சொல்ல விரும்புகிறேனென்று சொல்ல, அவன், போதகரே! சொல்லுமென்றான். கடன்காரன் ஒருவனுக்குக் கடனாளிகள் இரண்டுபேரிருந்தார்கள், அவர்களில் ஒருவன் ஐந்நூறு தேனாரியக்காசும், மற்றவன் ஐம்பதுங் கொடுக்கவேண்டியதாயிருந்தது. அவர்கள் கொடுக்கிறதற்குத் திராணியில்லாதவர்களாயிருந்தபொழுது, இருவருக்குங் கடனை மன்னித்தான். அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்; அதை எனக்குச் சொல்லென்று கேட்க, சீமோன் அவருக்குத்தரமாக மிகுதிக்கு மன்னிப்புப் பெற்றவனே யென்று நினைக்கிறேனென்றான். அப்பொழுது அவர், நீ யதார்த்தமாய்த் தீர்த்தாயென்று சொல்லி, பின்பு ஸ்திரீக்கு நேரே திரும்பி, சீமோனை நோக்கி இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயா; நான் உன் வீட்டில் வந்தபொழுது நீ என் கால்களுக்குத் தண்ணீரைத் தரவில்லை; இவளோ கண்ணீரினால் என் கால்களைக் கழுவி, தன் தலைமயிராலே துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை; நான் இங்கே பிரவேசித்தது முதல் இவள் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்கிறாள்; நீ என் தலைக்கு எண்ணெயிடவில்லை; இவளோ சுகந்த தைலத்தை என் பாதங்களிற் பூசினாள்; ஆகலால் இவள் தான்செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டதைக்குறித்து மிகவும் அன்பாயிருக்கிறாளென்று உனக்குச் சொல்லுகிறேன்; கொஞ்சமாக மன்னிப்புப்பெற்றவனை

வனோ அவன் கொஞ்சமாய் நேசிப்பானென்று சொல்லி, பின்பு அவளை நோக்கி, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்றார். இவ்வாறே அற்ப புண்ணியங்களினாலே பெரும் பாதகங்களுக்கு நிவாரணமாகுமென்றும், அனேக பாவங்களைப் பொறுத்துவிடுதலே தருமமென்றும், உன்னுடைய சமய சாத்திரத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதுகண்டும், சற்றேனும் பிரயாசமின்றிச் செய்யப்பட்ட அற்ப புண்ணியத்திற்குப் பயன் கிடைக்குமா? அது பொய்; அப்படி விதித்த தேவனும் பொய்த்தேவன்; அப்படிச் சொன்ன சமயநூலும் பொய்நூல்; அது மெய்யாகில், உலகத்தில் உள்ள சகலரும் உள்ளநாள் எல்லாம் பெரும்பாதகங்களைச் செய்து, இறக்கும் போதாயினும் அதற்கு முன்னாயினும், அப்படியொரு அற்ப புண்ணியஞ்செய்து மோக்ஷஞ் சேரலாமே; ஒரு அற்பபுண்ணியத்தைச் செய்து மோக்ஷஞ் சேர்ந்துகொள்ளலாம் என்று நினைந்து சகலரும் மற்றைப் புண்ணியங்களெல்லாவற்றையுஞ்செய்யாமல் விட்டுவிடுவார்களே; இப்படிச்சொல்லும் சமயநூல் பாவஞ்செய்யும்படி சகலரையும் ஏவுகின்றதே; இப்படிப்பட்ட அற்பபுண்ணியம் செய்தவனுக்கு இவ்வளவு பயனென்றால், பெரும்புண்ணியத்தைச் செய்தவனுக்கு எவ்வளவு அதிகமாகிய பயனுண்டு? அப்படிப்பட்ட புண்ணியங்கள் ஆயிரம் பதினாயிரம் ஒருவன் செய்தால், அவனுக்குக் கிடைக்கும் பயனுக்கு அளவில்லையே, என்று வாயில் வந்தபடியே பிதற்றுகின்றாய். ஆன்மாக்கள் தாம்தாம் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க சுகதுக்கங்களை அநுபவிப்பார்களென்றும், பாவங்கள் விதிப்படி பிராயச்சித்தம் செய்தலாற் நீங்குமென்றும், பின்னர்ப் பிராயச்சித்தஞ் செய்துகொள்வோமென நினைந்து முன்னர்ப் பாவஞ்செய்தார் தண்டிக்கப்படுவாரென்றும், சிவசாத்திரங்கள் செப்புகின்றன. இப்படிச் சொல்லும் எங்கள் சமயநூலோ, எவ்வகைப்பட்ட பாவங்களைச் செய்தும் இறுதியிலே கிறிஸ்துவை விசுவசித்தவர் நித்திய மோட்சத்தை அடைவாரென்றும், எவ்வகைப்பட்ட புண்ணியங்களைச் செய்தும் இறுதியிலே கிறிஸ்துவை விசுவசியாதவர் நித்திய நரகத்தை அடைவாரென்றும், சொல்கின்ற உன் சமயநூலோ, ஆன்மாக்களைப் பாவம் செய்யும்படி ஏவும் நூல்? நன்றாகச் சிந்தித்துணர்ந்து பேசு.

எங்கள் தேவனாகிய கிறிஸ்துவை அந்தக் கள்ளன் புத்திபூர்வமாகப் பிரார்த்தித்தபடியால் மோக்ஷஞ்சேர்ந்தான்; அந்த ஸ்திரியும் அவரைப் புத்திபூர்வமாக வழிபட்டதனால் அவளு

டைய பாவங்கள் நிவாரணமாயின. உங்கள் சிவபுராணங்களிற் சொல்லப்படும் சரித்திரங்கள் இப்படிப்பட்டனவல்லவே; சிவ சிவ என்று சொன்னதினாலும், விபூதி சரீரத்திலே பட்டதினாலும், புண்ணிய ஸ்தலத்திலே சற்றுநோம் தங்கினதினாலும் மோக்ஷம் சேர்ந்தார்களென்று சொல்லப்படுகின்றதே என்பாயாகில், கடவுள் சர்வசாமர்த்தியமுள்ளவராகையால், ஒன்றுக்கும் பற்றாத ஒரு துரும்பை நோக்கி நீ உலகமெல்லாவற்றையும் தாங்குவென்று அருளிச்செய்தினும், அது அங்ஙனம் செய்யவல்லதாகும்; தாங்கென்றுரைத்த அக்கடவுளது சத்தி தன்னிடத்தே பதிந்திருக்கின்றமையினாலேயே, அது அங்ஙனம் விசேஷமுள்ளதாயிற்று. அவ்வாறே அக்கடவுளால் நியமிக்கப்பட்ட பொருள் இடம் காலம் கிரியை என்பவைகள் எல்லாம், அவருடைய சத்தி தங்களிடத்தே பதிந்திருக்கின்றமையால், புண்ணியப்பொருள்களும், புண்ணியஸ்தலங்களும், புண்ணியகாலங்களும், புண்ணியக்கிரியைகளுமாய், விசேஷம் அடைந்தன. சிவசிவ அரகர சம்பு மகாதேவனென்றற் றொடக்கத்துச் சொற்களும் அவருடைய திருநாமங்களாயிருத்தலால், அவரைத்தொட்டுப் புண்ணிய நாமங்களாய் விசேஷம் அடைந்தன. விபூதி ருத்திராக்ஷங்களும் அவராலே தரிக்கப்பட்டமையாலும், அவருடைய சத்தி தங்களிடத்திலே பதிந்தமையாலும், புண்ணியப் பொருள்களாயின. அவரை வழிபடுகின்றவர்களும் அவருக்கு அடிமைகளாயினபடியாலும், அவருடைய சத்தி தங்களிடத்தே பதிந்தமையாலும், புண்ணியவான்களாய் விசேஷமடைந்தார்கள். மத்: உசு. உசு. உஎ, யேசு அப்பத்தை எடுத்து, துதிசெய்து, அதைப்பிட்டு, சீஷருக்குக்கொடுத்து, நீங்கள் எடுத்துப் புசியுங்கள்; இதுவே என் சரீரமென்றார். பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரஞ்சொல்லி, அதை அவர்களுக்குக்கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிற் பானம் பண்ணுங்கள். இதுவே புதிய உடன்படிக்கைக்குரிய பாவமன்னிப்புக்கென்று அநேகருக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம் என்றார். இப்படியே அப்பமும் திராட்சரசமும் உன தேவனாலே நியமிக்கப்பட்டமையால், விசேஷமடைந்தனவென்பது உன் சமய நூலிலே காணப்படுகின்றது. அவ்வாறே நீயும் இப்பொழுது இராப்போசனம் உட்கொள்ள விரும்பி, உன் சபையார் எல்லாரும் சூழ்ந்திருப்ப, அப்பத்தையும் மதுவையும் கொண்டுவந்து, பீடத்தின் மேலேவைத்து, உங்கள் தேவனை நோக்கி, அவைகளை ஆசீர்வதிக்கும்படி விண்ணப்பம் பண்ணினதன்மேல், அவைகள் அவராலே ஆசீர்வதிக்கப்பட்டமைபற்றி அவருடைய

சரீரமும் இரத்தமுமாய் விசேஷமடைந்ததென்று துணிந்து, நீயும் உட்கொண்டு அரசசபையாருக்கும் உட்கொள்ளக் கொடுக்கின்றாயே.

சிவசிவ அரகரா என்றற்றொடக்கத்துப் பெயர்கள் சிவனுடைய திருநாமங்களாயிருக்கும் விசேஷத்தினாலே, அந்தப் புண்ணியநாமங்களை நினைப்பினும், நாவினால் உச்சரிப்பினும், பிறர்சொல்லக் கேட்பினும், பாவங்கள் நீங்கிப் புண்ணியங்களுண்டாம். கிறிஸ்துசமயத்திலே பிரவேசியாதவர்களும் கிறிஸ்துவின்நாமத்தைச்சொல்லி, பிசாசுகளை ஓட்டினார்களென்று மாற்கு ௯. ௩௮, வசனத்திலும், லூக். ௧௦. ௧௭-ம் வசனத்திலும் சொல்லுகின்றது. அப்பிசாசுகளை யோட்டினவர்கள் கிறிஸ்துவை விசுவசியாதவர்களாகையால், அவருடைய நாமத்தினது விசேஷத்தினாலேயே அப்பிசாசுகள்பயந்தோடின என்பது. சங். ௯௯. ௩, "கீர்த்தியும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக; அது பரிசுத்தமுள்ளது" என்னும் வசனத்தினாலே விளங்குகின்றது.

விபூதி ருத்திராக்ஷங்கள் சிவனால் அணியப்பட்ட விசேஷம் உடையன ஆகலால், அந்தப் புண்ணியப்பொருள்களைத் தரிக்கின்றவர்களுடைய பாவங்களை நீக்குகின்றன. பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடு உடையவளாய், அநேக வைத்தியரிடத்தில மிகவருத்தப்பட்டு, தனக்குண்டான யாவையுஞ் செலவழித்தும் சற்றாயினும் சொஸ்தமடையாமல் மிக மெலிவடைந்த ஒரு ஸ்திரீ யேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டுப் போய், அவருடைய வஸ்திரத்தைத் தொட்டவுடனே, அவளுடைய இரத்த ஊறல் நின்றுபோயிற்று. அவள் உபத்திரவம் நீங்கி, ஆரோக்கியமடைந்தனள் என்று மாற்கு. ௫. ௨௫—௨௯, வசனங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அவள் அந்த வஸ்திரத்தைத் தொட்டவுடனே நோய் நீங்கினமையால், அவ்வஸ்திரத்தினது விசேஷத்தினாலேயே அவளுடைய நோய் நீங்கிற்றென்று தோன்றுகின்றது.

இலீஷா என்பவன் யோர்தான் நதிக்கரையிலே நின்றுகொண்டு, இலீசாவினுடைய மேலங்கியினாலே சலத்தை அடிக்க, அது இருபுறமும் ஒதுங்கிப் பிரிவுபட்டது; இலீஷா கடந்துபோனான் என்று, ௨. இரா. ௨-௧௩-௧௪, வசனங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால், அந்தவஸ்திரத்தினது விசேஷத்தினாலேயே அந்த இலீஷாவுக்கு வழிவிட்டது

என்று காண்கின்றது. இப்படியே, புண்ணியஸ்தலம், புண்ணியகாலம், புண்ணியக்கிரியை முதலியவைகளின் விசேஷத்தினாலே பாவம் நீங்கினமை வந்துழிவந்துழிக் கண்டுகொள்க.

கிறிஸ்துவினுடைய சீஷர்கள் அவருடைய நாமத்தைச் சொல்லி, பிசாசுகளை ஓட்டினமையைக் கண்டு, கிறிஸ்து சமயத்திற் பிரவேசியாதவர்கள் தாங்களும் அப்படியே அவருடைய நாமத்தைச் சொல்லில், ஒருபோது பிசாசுகள் நீங்குமென்று விசுவசித்துச் சொன்னமையினாலேயே பிசாசுகளோடின; பன்னிரண்டுவருஷமாகப் பெரும்பாடுள்ள அந்தஸ்திரீ அவ்வஸ்திரத்தைத் தொட்டால் தான் சொஸ்தம் அடைவாளென்று விசுவசித்துத் தொட்டதினாலேயே சொஸ்தம் அடைந்தாள்; உங்கள் சிவபுராணங்களிற்சொல்லப்படும் சரித்திரங்கள் இப்படிப்பட்டன அல்லவோ; இன்னது செய்தால் பயனுண்டென்று விசுவசியாதிருக்கவும், விபூதி ருத்திராக்ஷம் தீர்த்தம் முதலியவைகள் சரீரத்திற் பட்டமையால் மோக்ஷம் சேர்ந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றதே என்பாயாகில், நன்று சொன்னாய்; சிரத்தையே பரமதருமம் என்றும், சிரத்தையே சமஸ்த புண்ணியங்களுக்கும் மூலம் என்றும், புண்ணியங்களெல்லாம் அச்சிரத்தையோடு கூடிய வழியே பயன்படுமென்றும், அச்சிரத்தையோடு கூடாவழியும், ஒருவாறு தத்தம் விசேஷங்களுக்குத் தக்கபயன்களைப் பிறப்பியாது விடா என்றும், எங்கள் சமயநூல்கள் சாற்றுகின்றன. ஆகையால், இது புண்ணியப்பொருள், இதைத் தொட்டால் பாவம்நீங்கிப் புண்ணியம் உண்டாம் என்று விசுவசியாதிருப்பினும், அப்பொருள் ஒருவனுடைய சரீரத்திற்பட்டால், அப்பொருளின் விசேஷத்துக்குத் தக்கபயன் அவனுக்குக் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. அப்: ௫. ௧௫-௧௬, பிணியாளிகளைப் படுக்கைகளிலும், கட்டில்களிலுங் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் சிலரிற் படும்படி, அவர்களை வெளியே வீதிகளிற்கொண்டு வந்து வைத்தார்கள். நான்கு திசையிலுமுள்ள பட்டணங்களிலுமிருந்து திரளான சனங்கள், பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் யெருஷலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்கள் எல்லாரும் சொஸ்தமாக்கப்பட்டார்கள். ஷை ௧௧. ௧௨, பவுலுடைய சரீரத்திலிருந்த வேர்வைப்பரிவட்டங்களையும் கச்சுக்களையும் வியாதியுள்ளவர்களிடத்தில் கொண்டுவர, வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்போயின; துஷ்ட ஆவிகளும் அவர்களினின்

றும் புறப்பட்டன. இந்த ரோயாளர்களுள் அனேகர் சன்னி முதலிய வியாதிகளினாலும் பிசாசினாலும் முழுமையும் அறி விழந்திருப்பார்களே, அப்படி அறிவிழந்து கிடப்பவர்கள் பேதுருவினுடைய நிழல் தங்கள் மேற்பட்டால் தாங்கள் சொஸ்தமடைவார்களென்றும், பவுலுடையவேர்வைப்பரிவட் டங்களும் கச்சுக்களும் தங்கள்மேற்பட்டால்தாங்கள்சொஸ்த மடைவார்களென்றும், விசுவசித்தல் கூடாதே; அவர்களுள் அநேகர் அறிவிழந்திருப்பார்களென்பது புதிய உடன்படிக் கையிற் சொல்லப்பட்ட சரித்திரங்களால் விளங்கும்.

இவர்கள் பேதுருவினுடைய நிழல் தங்கள் மேற்பட் டால் சொஸ்தமடைவார்களென்றும், இவர்கள்பவுலினுடைய வேர்வைப் பரிவட்டங்களும் கச்சுக்களும் தங்கள் மேற்பட் டால்சொஸ்தமடைவார்களென்றும், பிறராயினும்விசுவசித்து அங்ஙனம் செய்தமையால், அவர்களைப் பிடித்த வியாதிகளும் பிசாசுகளும் நீங்கின; உங்கள் சிவபுராணங்களிற் சொல்லப் படும் சரித்திரங்கள் இப்படிப்பட்டன அல்லவே; மகாபாதக ஞகிய ஒருவனுடைய எலும்புகளில் ஒன்றை ஒரு கழுகுகொ ண்டுபோய்க் கங்கையிலே போட்டதனால், அவன் மோட்சம் சேர்ந்தானென்றும், காவேரிநதிக்கரையிலே கிடந்த ஒருவன் மேல் ஒருதிவலை தெறித்ததனால் அவனுடைய பைத்தியம் நீங்கிற்றென்றும், சவத்திலே விபூதிபட்டதனால் அவ்வான்மா மோட்சம் சேர்ந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கின்றதே என்பாயாகில், அவைகளெல்லாம் அப் புண்ணியப் பொருள் களின் விசேடத்தினாலேயே நிகழ்ந்தன. ஒருசவத்தைச் சில ரடக்கும்படி கொண்டுபோகும்பொழுது, பகைஞருடைய சேனைகளைக் கண்டு பயந்து, இலீஷாவின் பிரேதவறையில் அந்தச்சவத்தை எறிந்துவிட, அது இலீஷாவின் எலும்பு களின்மேலே பட்டதனால், உயிர்பெற்றெழுந்து காலூன்றிக் கொண்டு நின்றது என்று, உ. இரா. ௧௩. உ௧, வசனத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. இலீஷாவினுடைய எலும்பைத் தீண்டினால் தான் உயிர்பெற்று எழும்புமென்று அந்தச்சவம் விசுவசித்தல் கூடுமா? கூடாதே. அதைச் சுமந்துகொண்டு போனவர்களாயினும் விசுவசித்தார்களா? இல்லையே. இப் படி உன் சமயசாத்திரத்திற் சொல்லப்பட்டவைகள் உனக்கு நியாயமாகத் தோன்றுவது என்னை? இவைகளெல்லாவற்றை யும் உன் சமயசாத்திரத்திலே நீ வாசித்திருந்தும், பிறசமய நூல்களிலே அவ்வாறு சொல்லப்பட்டிருக்கும் சரித்திரங் களைப் பொய்யென்று நுஷிப்பது என்னை?

சிவசின்னதாரணம் சிவபூசை சிவமந்திரசெபம் முதலிய சிவபுண்ணியங்களினாலே பயன் இல்லையென்று, உங்களாலே மெய்ஞ்ஞானிகளென்று பேசப்படும் பட்டணத்துப் பிள்ளையார் சிவவாக்கியர் தாயுமானசுவாமிகள் முதலியோர்கள் பேசுவதேதது? என்பாயாகில்,

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே, மாற்றிப் பிறக்க வகையறிந் தாயில்லை மாமறைநூ, லேற்றிக் கிடக்கு மெழுகோடிமந்திர மென்ன கண்டாய், யாற்றிற் கிடந்துந் துறையறியாம லலைகின்றையே." எ-ம்;

"சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலு, மல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாய்ந்துவிட்டோ, ரில்லினு மன்ப ரிடத்திலு மீச னிருக்குமிடங், கல்லினுஞ் செம்பினு மோவிருப்பா னெங்கள் கண்ணுதலே." எ-ம்,

"எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்கு மொன்றாய் முட்டித் ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாங் கட்டிச் சுருட்டித்தங் கக்கத்தில் வைப்பர் கருத்தில்வையார் பட்டப் பகலை யிரவென்று கூறிடும் பாதகரே." எ-ம்,

"ஆரூரா ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றூரூர்க டோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத ஊமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீதேடு வீர்."

என்றும் கூறிய பட்டணத்துப்பிள்ளையார் தாமே,

"ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து, மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான், செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக், கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே." எ-ம்,

"ஊரீ ருமக்கொ ருபதேசங் கேளு முடம்படங்கப், போரீர் சமணைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற், சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க, வேரீ ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே." எ-ம்,

"அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புல னும், வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளாங்கள் செய்து, விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித் தையிட்டு, புன்செய்க் களைபறித் தேன்வளர்த் தேன்சிவ போகத்தையே." எ-ம்,

"நாய்க்குண்டு தொண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல, வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரமதி யாமல்வரும், பேய் க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி, நோய் க்குண்டு தேசிகன் றன்னரு ணோக்கங்க ணோக்குதற் கே." எ-ம்,

"உரைக்கைக்கு நல்ல திருவெழுத் தைந்துண் டுரைப்படி யே, செருக்கித் தரிக்கத் திருநீறு முண்டு தெருக்குப் பையிற், றரிக்கக் கரித்துணி யாடையு முண்டெந்தச் சந் தியிலு, மிரக்கத் துணிந்துகொண் டேன்குறை வேது மெனக்கில்லையே." எ-ம்,

"நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருண் ஞானமிலாப், பொல்லா வெனைக்கொன்று போடும் பொழுதியல் பூசை செபஞ்,சொல்லார்நற் கோயி னியமம் பலவகைத் தோத் திரமு, மெல்லா முடிந்தபின் கொல்லுகண் டாய்கச்சி யேகம்பனே." எ-ம்,

"நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே, யல்லா து வேறு நிலையுள தோவக மும்பொருளு, மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு, மெல்லாம வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே." எ-ம்,

"அடியா ருறவு மரன்பூசை நேசமு மன்புமன்றிப், படிமீ தில் வேறு பயனுளதோ பங்கயன் வகுத்த, குடியான சுற்றமுந் தாரமும் வாழ்வுங் குசக்கலங்க, ளடியா லடி யுண்ட வாறொக்கு மென்றினஞ் சார்ந்திலரே." எ-ம்,

"சுடப்படு வாரறி யார்புர மூன்றையுஞ் சுட்டபிரான், றிடப்படு மாமதிற் றென்னொற்றி யூரன றெருப்பரப்பி, னடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு, கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே." எ-ம்,

"சோக்கிட் டரமனைப் புக்குட் டிருடிய துட்டர்வந்து, திக்
குற்ற மன்னரைக் கேட்பது போற்சிவ நிந்தைசெய்து, மிக்
குக் குருலிங்க சங்கம நிந்தித்து வீடிச்சிக்கு, மெக்குப் பெ
ருத்தவர்க் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே."

என்றும் கூறினர்.

மற்றை ஞானிகள் வாக்கியமும் இப்படியே இருக்கும். இப்படி இரண்டையும் ஒருவர்தாமே திருவாய்மலர்ந்தருளினமையால் அவைகள் ஒன்றையொன் றழிக்கமாட்டாவாம்; அதற்குச் சமாதான மிருத்தல்வேண்டும்; ஒன்றை ஒன்று அழிப்பினும், முன்னர்த் தழுவியதற்கும் பின்னர்த் தள்ளியதற்கும் காரணம் இருத்தல்வேண்டும் என்று பெரியோர்களிடத்திற் கேட்டறிதல்வேண்டும். அப்படிக் கேட்டறியாமல் எங்கேயாயினும் ஒரு செய்யுளை எடுத்துக்கொண்டு, சைவசமயிகளே! இந்தச் செய்யுள் இப்படிச்சொல்லியிருக்க, நீங்கள் என் இப்படிச்செய்கின்றீர்கள்? அது பெரியதப்பு! தப்பு!! என்று சொல்லிக்கொண்டு திரிகின்றாய். வியாதி நீங்கும்படி மருந்துண்பவனொருவன் வைத்தியசாத்திரத்தில் விதித்தவாறே அனுபானத்தோடு உண்ணுமையையும் அவபத்தியங்களைத்தள்ளிப் பத்தியங்களை கொள்ளாமையையும் வைத்தியசாத்திரம் வல்லானொருவன் கண்டிரங்கி, நீ உண்ணும் இம்மருந்தினாற் பயன்யாது? என்றக்கால், அவனுக்கு அம்மருந்துண்ணாற்கவென்பது கருத்தன்றாம். அதுபோல், மலபரிபாகம் வரும்படி கிரியைகளைச் செய்வோர் சிவசாத்திரத்தில் விதித்தவாறே அன்பொடு செய்யாமையையும் கொலைமுதலிய பாவங்களைத்தள்ளி இரக்கம் முதலிய புண்ணியங்களைக் கொள்ளாமையையும் சிவசாத்திரம் வல்லார் கண்டிரங்கி, நீர் செய்யும் இக்கிரியைகளாற் பயன் யாது? என்றக்கால், அவருக்கு அக்கிரியைகளைச் செய்யற்க வென்பது கருத்தன்றாமென்றறிக. இன்னும், சிவாகமங்களிலே சொல்லப்படும் பாதங்கள் சரியை கிரியை யோகம் ஞான என நான்காம். அவற்றுள், முன்னையமூன்றும் பொதுப்படக் கிரியைகளெனவேபடும். இந்நான்கினுள்ளும், சரியையின்றிக் கிரியையும், கிரியையின்றி யோகமும், யோகமின்றி ஞானமும் கைகூடாவாம். அது "விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞானநான்கு,மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே" என்னும் தாயுமானசுவாமிகள் திருவாக்கால் உணர்க. இந்த ஞானத்தாலடையப்படுவது பரமுத்தியாகிய சிவசாயுச்சியமாம். கிரியைகளினலே அடையப்படுவது பதமுத்தியாம். அப்பதமுத்தி பலபேதப்படும். கிரியைகளைச்செய்து அததற்கேற்ற

பதமுத்திகளைப் பெற்றுப் போகம் புசித்தவர்கள், திரும்பப் பூலோகத்திலேவந்து சென்மித்து, இருவினையொப்பு மலபரிபாகத்தினாலே சிவஞானத்தைப் பெற்று, சிவசாயுச்சியத்தை அடைவர்கள். பட்டணத்துப்பிள்ளையார் முதலியோர் இப்படிப்பட்ட பெருஞ்சிறப்பினதாகிய சிவஞானத்தைப்பெற்றவர்கள். அவர்கள், அச்சிவஞானமே பரமுத்திசாதனமென்றும், கிரியைகளெல்லாம் அதற்குக் கருவிகளென்றும், உணர்ந்து அக்கிரியைகள் வாயிலாகச் சிவஞானத்தைப்பெற முயலாது, அக்கிரியைகளையே பொருளெனக்கொண்டு களிப்பாரைக்கண்டிரங்கி, இகழ்ந்தாரென்க. ஆதலால், சிவஞானத்தைக்குறித்துக் கிரியைகள் கீழ்ப்பட்டன என உணர்த்துதலே அவர்களுக்குக் கருத்தாம். அஃதன்றி, அச்சிவஞானத்துக்கு இன்றியமையாக் கருவியாகிய அக்கிரியைகளைச் செய்யற்க என்பது கருத்தன்றாம். இவ்விரு சமாதானமும் எற்குமிடமறிந்து கொள்ளப்படும்.

தீர்த்தமாடுதல் முதலிய புண்ணியங்களினாலே பாவந் தேயுமெனில்; அப்புண்ணியங்களைச் செய்தவர்களிடத்திலே கோபம் முதலிய துர்க்குணங்கள் மாறாதிருக்கக் காண்கின்றேனே; அவர்கள் மீளவும் பாவம் செய்கின்றார்களே என்பாயாகில், எங்கள் சமயநூலிலே விதித்த விதி தவறாமல் சிவன்மேல்வைத்த அன்பினுடனே அப்புண்ணியங்களைச் செய்பவர்கள் அனேகர் ஒரு வருஷத்தினுள்ளே உலகப் பற்றுக்களை முற்றவெறுத்து வனவாசம்பண்ணித் தவம்செய்யக்காண்கின்றோம். இந்தப்புண்ணியம் செய்பவர்களெல்லாரும் இப்படி என் ஆகவில்லை? என்பாயாகில், எங்கள் உள்ளத்திலே பரிசுத்தாவி புகுந்துவிட்டது என்று சொல்லி, உன்சமயவிதிப்படி ஸ்நானம்பெற்று இராப்போசனங் கையேற்பவர்கள் அனேகர் கொலை களவு பிறர்மனைநயத்தல் முதலிய பல பெரும்பாவங்களைச் செய்யக் காண்கின்றோமே; கோபம் முதலிய துர்க்குணங்களெல்லாம் அவர்களிடத்திலே மேன்மேலும் பெருகி வளர்கின்றனவே. அதுவுமன்றி, உன் சமயாசாரியர்கள், நாம் பரிசுத்தாவியினாலே லௌகிக ஆசைகளையும் சகலபாவங்களையும் வெறுத்துத்தள்ளி நவீனசிருட்டியாய்த் தெய்வத்தன்மையோடு கூடியிருந்து நாள்விடுகின்றோம் என்று கள்ளஞானம் பேசுகின்றார்களே. இவர்களுள், எவன் கிறிஸ்துநாதர் கூறியவாறே முத்திவிக்கினமாகிய மண்ணாசை பொன்னாசை பெண்ணாசையென்னும் லௌகிக ஆசைகளைச் சிறிதாயினும் வெறுத்துவிட்டவன்? இவர்களுள் எவன் ஒரு

நாசமேனும் ஒருநாளேனும் ஒருநாழிகையேனும் மனம் வாக்குக் காயங்களினாலே பாவஞ்செய்யாது ஒழிந்தவன்? இப்படியே நீங்கள் உங்களுள்ளேதானே பெருங்குற்றங்களை வைத்துக்கொண்டு, பிறரை வேண்டியவாறே தூஷிப்பது என்னை? மத். எ. க-ரு, "நீங்கள் குற்றஞ் சுமத்தப்படாமலிருக்கவேண்டில், பிறர்மேல் குற்றஞ் சுமத்தவேண்டாம்; நீங்கள் குற்றஞ் சுமத்துவதுபோலக் குற்றஞ் சுமத்தப்படுவீர்கள்; நீங்கள் அளக்கும் அளவினால் உங்களுக்கும் அளப்பார்கள்; உன் கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல் உன் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற சிராயைப்பார்க்கிறது என்ன? உத்திரம் உன் கண்ணிலிருக்க, நீ உன் சகோதரனை நோக்கி, உன் கண்ணிலுள்ள சிராயைஎடுத்துவிடுகிறேன், இடங்கொடுஎன்று சொல்லுவதென்ன? கபடியே! முன்பு உன் கண்ணிலுள்ள உத்திரத்தை நீக்கிவிடு; அப்பொழுது உன் கண்தெளிய, நீ உன் சகோதரனுடைய கண்ணிலுள்ள சிராயை எடுத்துவிடுவாய்." இவ்வசனங்களை அறிந்தும் மறந்தனிர்போலும். இன்னும், உலகப்பொருள்களெல்லாம் அநித்தியமென்றும், அவற்றின்மேல் ஆசையை ஒழித்தல்வேண்டும் என்றும், சனங்களுக்குப் புத்திசொல்லித் திரிகின்றவர்கள் தாங்கள் அவ்வாறு நடவாததுஎன்னை? இஃதெல்லாம் பணத்தைச்சம்பாதித்துப் பெண்டிர் பிள்ளைகளுடனே உண்டுடுத்து வாழ்ந்திருத்தல் வேண்டும் என்னும் அபேட்சையினாலே எடுத்த வேஷமென்று காண்கின்றது.

ஆன்மாக்கள் தாம்தாம் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்பச் சுவர்க்க நரகங்களிலே சுகதுக்கங்களை ஒருவர் கூடவும் ஒருவர் குறையவும் அனுபவிப்பார்களென்றுசொல்லலாமா? என்பாயாகில், ஒருவன் ஒரு பணத்துக்காகச் சொல்லிய பொய்யும், ஒருவன் ஒருவனைக் கொன்ற கொலையும், ஒருவன் ஒரு பெண்ணுடன் செய்த வியபிசாரமும், ஒருவன் ஓரிளநீரைத் திருடிய களவும், ஒருவன் ஒருவனைக் கழுதை என்று சொல்லிய நிந்தையும், ஆகிய பலபல வருக்கமான பாவங்களெல்லாம் சமமாகிய பாவங்களென்றும், அப்பாவங்களைச் செய்தவர்களெல்லாருக்கும் சமமாகிய தண்டம் கிடைக்குமென்றும் சொல்லுவது தகாது. இன்னும், ஒருவன் ஒரு வேசையுடன் செய்த வியபிசாரமும், ஒருவன் ஒரு கன்னிகையுடன் செய்த வியபிசாரமும், ஒருவன்பரதாரத்துடன் செய்த வியபிசாரமும், ஒருவன் குருபத்தினியுடன் செய்த வியபிசார

மும், ஒருவன் சகோதரியுடன்செய்த வியபிசாரமும், ஒருவன் மாதாவுடன் செய்த வியபிசாரமும், ஒரேவருக்கமா யிருப்பினும், அவைகளெல்லாம் சமமாகிய பாவங்கள் என்றும், அப்பாவங்களைச் செய்த ஆடவர்கள் எல்லாருக்கும் சமமாகிய தண்டம் கிடைக்குமென்றும், சொல்வது தகாது. இப்படியே பாவங்களிலே பலவேற்றுமை உண்டு; புண்ணியங்களையும் அவ்வாறே பகுத்துணர்தல் வேண்டும். நீ இதனைச் சற்றாயினும் ஆராய்ந்தறியாமல், ஒரு அற்பபாவத்தைச் செய்தவனும் அனேகம் பெரும்பாவங்களைச் செய்தவனுமாகிய இருவரும் சமமாகிய தண்டத்தை அடைவார்கள் என்று சொல்வது தப்பு. சிற்றறிவினையுடைய அரசர்களும் குற்றம் செய்தவர்களை அவரவர்செய்த குற்றத்துக்கு ஏற்பத் தண்டிக்கின்றார்கள். குற்றஞ்செய்தவர்கள் எல்லாருக்கும் சமமாகிய தண்டத்தை விதிக்கும் அரசனைக் கண்டுமிரோம், கேட்டுமிரோம். எங்காயினும் ஓரரசன் அவ்வாறு தண்டம் விதிக்கில், அவனை நீதியீனனென்றும் கொடுங்கோலரசனென்றும் உலகத்தார் யாவரும் பேசுவார்களே. சிற்றறிவினையுடையவர்களும் நீதியில் வழுவக் கூடியவர்களும் ஆகிய பசுக்கள்தாமும் பகுத்தறிந்து அவரவர்செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டம் விதிப்பார்களாயில், முற்றறிவினையுடையவரும், நீதிவழுவாதவரும், சர்வசிவதயாபரருமாகிய கடவுள் அவரவர்செய்த குற்றங்களைப் பகுத்தறியாமல், இரக்கமின்றி எல்லாரையும் சமமாகத் தண்டிப்பாரா? தண்டியாரே.

மத்: கஉ. ௩க, "மனுஷர்செய்யும் எந்தப்பாவமும், தூஷணமும், மனுஷருக்கு மன்னிக்கப்படும்; பரிசுத்தாவிக்கு விரோதமான பாவமோ மன்னிக்கப்படுவதில்லை யென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" இதனால், பாவங்களில் வேற்றுமை யுண்டென்பதே உன்சமயநூல் கருத்தென்று தோன்றுகின்றது. புண்ணியங்களிலும் அவ்வாறே வேற்றுமை உண்டென்பதை உன்சமயநூலில் வந்தவழி கண்டு கொள்க.

யோசு: ரு. கச, "நான் யெகோவாவின் சேனைக்கதிபதியாய் வந்திருக்கிறேன் என்றார்.' மத்: க. உ0, "கர்த்தருடைய தூதன்." இவைகளினாலே, மோட்சவாசிகள் ஒருவரினுமொருவர் அதிக மகத்துவமும் அதிகாரமும் உடையர்களென்று தோன்றுகின்றது. மத்: கக. உஅ, "யேசு அவர்களை நோக்கி, புதுச்சிருஷ்டி தோன்றுங் காலத்தில் மனுபுத்திரன்

தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கும்பொழுது, என்னைப் பின்சென்று வந்த நீங்களும், இஸ்ரவேலாகிய பன்னிரண்டு வமிசத்தாருக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி, பன்னிரண்டு சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்களென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்." இதனால், மோட்சத்திலே மற்றவர்களுக்கு நியாயந்தீர்க்கு மதிகாரமும் மகத்துவமும் இவர்களுக்கு உண்டென்று காண்கின்றது. வெளி: ௧௪. ௧—௪. "பின்பு நான் பார்க்கையில், சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரும், அவரோடே அவருடைய பிதாவின் நாமந் தங்கள் தங்கள் நெற்றிகளில் எழுதப்பெற்ற இலட்சத்து நாற்பத்தினாலாயிரம் பேரும் நிற்கக்கண்டேன். அன்றியும், சலராசியின் இரைச்சல்போலவும், மகா இடியின் முழக்கம்போலவும், பரமண்டலத்திருந்துண்டாகிய ஒரு சத்தத்தைக் கேட்டேன்; நான் கேட்ட சத்தம், தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற சுரமண்டலக்காருடைய ஓசையைப்போலிருந்தது; அவர்கள் அந்தச் சிங்காசனத்துக்கு முன்பாகவும், நாலு பிராணிகளுக்கும் முதியோருக்கும் முன்பாகவும் ஒரு புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு, உலகத்திலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட அந்த இலட்சத்து நாற்பத்தினாலாயிரவரேயன்றி வேறொருவருங் கற்றுக்கொள்ளக் கூடாததாயிருந்தது. இவர்களே ஸ்திரிகளால் தங்களை அசுசிப்படுத்தாத நிறையுடையவர்கள். இவர்களே ஆட்டுக்குட்டி எங்கே போனாலும் அதைப்பின்பற்றுகிறவர்கள். இவர்களே மனுஷரிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டு தேவனுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முதற்பலனானவர்கள். இவ்வசனங்களிலே, "இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்" என விசேடித்துத் தொகை குறித்ததினாலும், "அவர்கள் ஒரு புதுப்பாட்டைப் பாடினார்கள். அந்தப்பாட்டு அந்த இலட்சத்து நாற்பத்தினாலாயிரவரேயன்றி வேறொருவருங் கற்றுக்கொள்ளக் கூடாததாயிருந்தது" என்று மோட்சத்திலிருந்த மற்றவர்களை விலக்கி, இவர்களை விதந்து கூறினமையாலும், "தேவனுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முதற்பலனானவர்கள்" எனவே மோட்சத்தில் இரண்டாம் பலமானவர்களும் உண்டென்பது பெறப்படுதலாலும், மோட்சவாசிகளுள் வேற்றுமை உண்டென்று காண்கின்றது. லூக்: ௧௯-ம் அதிகாரத்திலே ஒரு இராத்தல் திரவியத்தைக் கொண்டு பத்து இராத்தல் ஆதாயம் பண்ணினவன் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியானான் என்றும், ஐந்து இராத்தல் ஆதாயம பண்ணினவன் ஐந்துபட்டணங்களுக்கு அதிகாரியானான் என்றும், சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால்,

ஆன்மாக்கள் மோட்சத்திலே தாம்தாம் செய்த புண்ணியங்களுக்குத் தக்கமேன்மையும் இன்பமும் பெறுவார்களென்று தோன்றுகின்றது.

மத்: ௧௧. ௨௪, "நியாயத்தீர்ப்புநாளில் உன் நிலைமையிலும், சோதோம்தேசத்து நிலைமை சகாயமாயிருக்குமென்று நானுனக்குச் சொல்லுகிறேன்" என்றார். லூக்: ௧௨. ௪௭-௪௮, "தன் எசமானனுடைய சித்தத்தை அறிந்தும், ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருக்கிற பணிவிடைக்காரன் பல அடிகள் அடிக்கப்படுவான். அறியாமலிருந்து, அடிகளுக்கு ஏற்றவைகளைச் செய்கிறவனோ சில அடிகள் அடிக்கப்படுவான்." உபா: ௧௯. ௨௧, "கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும், கைக்குக் கையும், காலுக்குக் காலும், பிரதியாகவேண்டும்." இவைகளினாலே, அவரவர் பாவத்துக்குத் தக்க தண்டம் விதிக்கப்படுமென்று தோன்றுகின்றது.

ஆன்மாக்கள் தாம் தாம் செய்த பாவத்துக்கு ஏற்ப நரகத்திலே துன்பம் அனுபவிப்பினும், அதனை நித்தியமும் அனுபவிப்பதேயன்றி, இடையிலே அந்நரகத்தினின்றும் மீளுவார்களென்பது நியாயமா?. என்பாயாகில், தந்தைதாயர்கள் தங்கள் பிள்ளைகளையும், அரசர்கள் தங்கள் பிரஜைகளையும், தாங்கள்கூறிய நீதிமார்க்கத்திலே நடவாமை கண்டு தண்டித்தல், அவர்கள்மேலே வைத்த அன்பினாலேயாம். அதுபோல, கடவுள் தாம் அருளிய வேதாகமங்களிலே விலக்கப்பட்ட பாவங்களைச்செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல், அவர்கள் மேல் வைத்த கிருபையினாலேயாம். ஆதலால், அத்தந்தைதாயர்களும் அரசர்களும், பிள்ளைகளையும், பிரஜைகளையும், அவரவர்செய்த குற்றத்துக்குத்தக்க கால எல்லை குறித்து, தண்டித்துப் பயப்படுத்தி, முன்பு செய்த குற்றங்களை அந்தத் தண்டனையினாலே ஒழித்து, நீங்கள் முன்போலக் கெட்டுப்போகாமல் இனி நீதிமார்க்கத்திலே நடவுங்களென்று புத்திசொல்வதுபோல, கடவுளும் அவ்வான்மாக்களை அவரவர்செய்த பாவத்துக்குத்தக்க கால எல்லை குறித்துத் தண்டித்துப் பயப்படுத்தி, முன்பு செய்த பாவங்களை அந்தத் தண்டனையினாலே ஒழித்து, நீங்கள் உய்யுங்களென்று அருளுவார்; ஆகையால், நரகத்திலே விழுந்த ஆன்மாக்கள் தத்தம் பாவங்களுக்கேற்பக் குறித்த காலவெல்லை வரைக்குமே துக்கத்தை அநுபவிப்பார்கள் என்பதற்கும், அதன்பின்னர் அந்நரகத்தினின்றும் மீளுவார்கள் என்பதற்கும் சந்தேகமில்லை. ஒருவன் தான்

செய்த குற்றத்தினிமித்தம் அரசனாலே விதிக்கப்பட்ட தண்டத்தைக் குறித்தகாலம் வரைக்கும் சிறைச்சாலையிலிருந்து அநுபவித்துத் தீர்ந்தால், அச்சிறைச்சாலையினின்றும் நீங்கப்படவேண்டுவதன்றி, பின்னும் அத்தண்டத்தை அநுபவிக்க வேண்டுவதில்லை; அதுபோல ஆன்மாக்கள் தாம் செய்த பாவத்தினிமித்தம் கடவுளால் விதிக்கப்பட்ட தண்டத்தைக் குறித்த காலம் வரைக்கும் நரகத்திலே கிடந்து அநுபவித்துத் தீர்ந்தால், அந்நரகத்தினின்று நீக்கப்படவேண்டுவதன்றி, பின்னுமத்தண்டத்தை அநுபவிக்க வேண்டுவதில்லை.

நாம்செய்த பாவம் அளவற்ற மகிமையுடைய கடவுளுக்கு விரோதமாகையால், நாம் நித்தியமும் நரகத்திலே கிடத்தல் வேண்டும் என்பாயாகில், நாம் செய்யும் புண்ணிய பாவங்களினாலே வரும் பலங்களாகிய சுகதுக்கங்கள் நமக்கேயன்றிக் கடவுளுக்கல்ல; ஆகையால், நாம் பாவஞ்செய்தல் நமக்கு விரோதமேயன்றிக் கடவுளுக்கு விரோதமன்று; அன்றியும், புண்ணியபாவம் இரண்டையுஞ் செய்த ஒருவன் தான்செய்த பாவத்தினிமித்தம் நித்திய நரகயாதனைப்படில், தான்செய்த புண்ணியபலத்தை இழந்து போவானே! அளவற்ற மகிமையையுடைய கடவுளது விதிப்படி புண்ணியத்தையும் செய்தான் ஆகையால், அவன் அந்தப் புண்ணியபலத்தை இழப்பதற்கு நியாயமில்லையே! அப்படி இழக்கப்பண்ணுதல் கடவுளுக்கு நீதியன்றே! அரசனானவன் இன்ன நன்மை செய்தவனுக்கு இத்தனை பொன் கொடுக்கப்படுமென்றும், இன்ன தீமைசெய்தவனுக்கு இத்துணைக்காலம் இன்னதண்டம் செய்யப்படும் என்றும் விதித்திருக்கும்பொழுது, ஒருவன்தானே அவ்விரண்டையும் செய்தானாகில், அவன் அவ்வரசனாலே குறிக்கப்பட்ட பொன்னையும் தண்டத்தையும் ஒருங்கே அடைவான்; அங்ஙனமன்றி, அவ்வரசன் ஒன்றைவிட்டொன்றைச் செய்தால், அவனை நீதியீனனென்றும் பொய்யனென்றும் இரக்கமில்லாதவனென்றும் உலகத்தார் யாவரும் இகழ்வார்களன்றோ? இப்படியே ஒருமனிதன்றானும் தான் சொல்லிய சொற்படியே நடத்தல் வேண்டுமாகில், நீதியும் வாய்மையும் இரக்கமும் உள்ள கடவுளானவர் தமது விதிப்படி ஒருவன் செய்த புண்ணியங்களை மறந்து அதற்குப்பயன் கொடாதொழிந்து, அவன் செய்த பாவத்தைமாத்திரம் உட்கொண்டு அவனை நித்தியமும் நரகத்திலே வீழ்த்தித் தண்டிப்பாரா? தண்டிப்பாராகில், அவரிடத்திலே நீதி எங்கே? வாய்மை எங்கே? இரக்கமெங்கே?

கடவுளுடைய விதிப்படியே நாம் எப்பொழுதும் நன்மை செய்யும்படி அவருக்குக் கடன்பட்டோம்; ஆதலால், நாம் ஒரு அற்ப பாவத்தைச் செய்யினும் நித்திய நரகத்தை அடைதல் வேண்டும் என்பாயாகில். நாம் நன்மை செய்தலினால் வரும் பயன் நமக்கேயாம்; அதினாலே கடவுளுக்கு ஒருபயனுமில்லை; உண்டெனில், அவரை நித்தியானந்தரென்றல் கூடாது; ஆகையால், எப்பொழுதும் நன்மைசெய்யும்படி கடவுளுக்குக் கடன்பட்டோமென்று நீ கூறுவது சற்றும் பொருந்தாது. இதுகாறும் கூறியவாற்றால், ஆன்மாக்கள் தங்கள் தங்கள் பாவத்துக்குத் தக்ககாலம் வரைக்கும் நரகத்திலே யாதனை அனுபவித்து, மீளவும் பூமியிலே பிறப்பார்களென்பது நிச்சயம்.

இறந்த ஆன்மாக்கள் மீளவும் பிறப்பார்கள் என்பதற்கு யாதொரு பிரமாணமும் இல்லையே என்பாயாகில், ஆன்மாக்கள் இறந்ததன் பின்பு சுவர்க்க நரகங்களிலே புண்ணிய பாவ பலங்களாகிய சுகதுக்கங்களை அனுபவித்து, பின்னும் சுவர்க்கநரக சேஷத்தினாலே பூமியின்கண்ணே பலயோனிபேதங்களிலே பிறந்து, அந்தச் சேடபலமாகிய சுகதுக்கங்களையும் அநுபவிப்பார்களென்று சைவாகமங்கள் சாற்றுகின்றன. ஆன்மாக்களெல்லாம் முன்னே பிறந்து புண்ணிய பாவங்களாகிய கர்மங்களைச்செய்யாதிருந்தால்,சிலர் குருடர் செவிடர் ஊமைகள் முடவர்களாயும், சிலர் அக்குறறங்களொன்றுமின்றி அழகுடையவர்களாயும், சிலர் நித்திய வியாதியாளர்களாயும், சிலர் நித்தியாரோக்கிய முடையவர்களாயும், சிலர் வறியவர்களாயும், சிலர் செல்வர்களாயும், சிலர் அவிவேகிகளாயும், சிலர் விவேகிகளாயும், சிலர் துர்க்குண முடையவர்களாயும், சிலர் சற்குண முடையவர்களாயும், சிலர் அற்பாயுசுடையவர்களாயும், சிலர் தீர்க்காயுசு உடையவர்களாயும், பிறத்தற்குக் காரணம் என்னை? பிறக்கும்பொழுதே இப்படிப்பட்ட வேற்றுமைகளுடன் பிறக்கின்றார்களே. பூர்வ சென்மமும் அதிற் செய்யப்பட்ட கர்மங்களு மில்லையாகில், சமஸ்த ஆன்மாக்களும் சமமாகப் பிறத்தல் வேண்டுமே! அங்ஙனமின்மையால், நாம இம்மையிலே அநுபவிக்கும் சுகதுக்கங்கள் பூர்வசென்மங்களிலே செய்த புண்ணிய பாவங்களினாலே வந்தன என்பதற்குச் சந்தேகமில்லை.

இவ்வேற்றுமைகளெல்லாம் நாம் முன்செய்த கர்மங்களினாலல்ல,கடவுளுடைய சித்தத்தின்படி ஆயின என்பாயாகில்;

கடவுளானவர் எங்களுக்குத் தம்முடைய சித்தத்தின்படியே யன்றி, எங்கள் கர்மங்களின்படி சுகதுக்கங்களை அளிப்பவர் அல்லவென்றாயிற்று. ஆங்ஙனமாயில், நாம் புண்ணியம் செய்தாலும்சரி, பாவஞ்செய்தாலும் சரி, அதினால் நமக்கு இன்பமுமில்லை, இதினால் நமக்குத் துன்பமுமில்லை என்று முடியும். அன்றியும், யாதொரு காரணமுமின்றித் தமது சித்தத்தின்படியே பிறக்கும்பொழுதே சிலரை அப்படியும் சிலரை இப்படியும் படைத்தார் எனில், சருவசீவதயாபரர் என்னும் பெயர் இழந்து பக்ஷபாத முடைவராவர்; ஆதலால், அது பொருந்தாது.

குயவனால் வனையப்பட்ட பாண்டங்களுட்சில, எங்களை என் இப்படி வனைந்தாய்? என்று அவனுடன் வழக்காடுவது நீதியன்றே; அதுபோல, கடவுளாலே சிருட்டிக்கப்பட்ட நாங்கள், எங்களை என் இப்படிப் படைத்தீர்? என்று அவருடன் வழக்காடுவது நீதியன்று என்பாயாகில்; அவைகள் சடப் பொருளாகையால், அந்தத் திருஷ்டாந்தம்பொருந்தாது; அவைகளும் எங்களைப்போலச் சித்துப்பொருளாகில், ஒருவன் தன் பிள்ளைகளைச் சமமாகக் காப்பாற்றாதபொழுது, பிள்ளையானது தன் பிதாவை நோக்கி, "என் பிதாவே, நீர் என் சகோதரனுக்கு இந்தப் போக்கியப்பொருள்களெல்லாவற்றையுங் கொடுத்தீர்; எனக்கு ஒன்றுந் தந்தீரில்லையே! உமக்கு நான் செய்த அபகாரம் யாது? அவன்செய்த உபகாரம்யாது?" என்று வழக்காடுவதுபோல, வழக்காடுமே.

குயவன் வனையும்பொழுது, சில பாண்டங்கள் கோணலாய் வனையப்படவில்லையா? சிலபாண்டங்கள் வெடித்துப் போகவில்லையா? என்பாயாகில், குயவன் பாண்டங்களை வனையும்பொழுது, எல்லாப்பாண்டங்களும் யாதொரு குற்றமுமின்றிச் சிறந்தனவாகவே வனையப்படல்வேண்டுமென்று விரும்புகின்றான். விரும்பினும், அவன் சிற்றறிவு சிறுதொழிலுடையனாகையால், அவனுடைய விருப்பத்துக்குமாறாகச் சிலபாண்டங்கள் எவ்வாறாகின்றன. கடவுள் எல்லாரையும் சமமாகவே படைத்தல் வேண்டுமென்று விரும்பி, படைக்கும்பொழுது அவருடைய விருப்பத்துக்கு மாறாகப் பலர் குருடு முதலிய குற்றமுடையவர்களாய்ப் பிறந்தாரெனில், அவரை முற்றறிவு முற்றுந்தொழில் உடையரெனல் கூடாது. ஆதலால், பலரைக் குற்றமுடையராகப் படைத்தல் வேண்டுமென்று நினைந்து படைத்தாரா் என்பது சிறிதும் பொருந்தாது.

பெருமை சிறுமை இல்லையாகில் உலகம் நடவாதாகலால், அவ்வாறு படைத்தார் என்பாயாகில், அவர் சர்வசாமர்த்திய முடையவராகையால், பெருமை சிறுமை இல்லாதிருப்பினும், உலகத்தை நடத்துவாரே; ஆகையால், அதுவும் பொருந்தாது.

இவ்வேற்றுமைகளெல்லாம் பிதா மாதா செய்தபாவங்களினாலே பிள்ளைகளுக்கு உண்டாகின்றன. பிரமியம் வெட்டை கிரந்தி ஈளை பாண்டு முதலிய வியாதிகளிலே அழுந்தும் பிதா மாதாக்களிடத்திலே பிறக்கும் பிள்ளைகளும் அவ்வவ் வியாதிகளை உடையவைகளாய்ப் பிறக்கின்றன என்பாயாகில், மேற்கூறிய வியாதி உள்ளவர்களுக்கு அவ்வியாதியில்லாத பிள்ளைகளும் வியாதியில்லாதவர்களுக்கு வியாதியுள்ள பிள்ளைகளும் பிறக்கக்காண்கின்றோமே! ஆதலால், ஒரோவழி வியாதியுள்ள பிதா மாதாக்களிடத்திலே வியாதியுள்ள பிள்ளைகள் பிறப்பினும், அப்பிள்ளைகள் பூர்வசென்மத்திலே செய்த வினையினாலேயே அவைகளுக்கு அவ்வியாதிகள் வந்தனவென்று கொள்ளவேண்டும்; இன்னும், பிதா மாதாக்கள்செய்த கர்மத்தினாலே பிள்ளைகளைத் தண்டித்தல் நீதியன்று. அரசர்கள், ஒருவனை ஒருவன் கொலைபண்ணினால், அவனைக் கொல்வதேயன்றி அவன் பிள்ளையைக் கொல்லக் கண்டுமிரோம், கேட்டுமிரோம். இப்படியே சிற்றறிவினை யுடையவர்களும் நீதியில் வழுவக்கூடியவர்களும் ஆகிய மனிதர்தாமும் ஆராய்ந்து அவரவர்செய்தகுற்றத்துக்குஅவரவரையேதண்டிப்பார்களெனில், முற்றறிவுடையவரும் நீதியில் வழுவாதவருமாகிய கடவுள் ஆராயாது ஒருவன்செய்த குற்றத்துக்கு வேறொருவனைத் தண்டிப்பாரா! தண்டியாரே. உபா: உச. கசு, "பிள்ளைகளினிமித்தம் பிதாக்களும், பிதாக்களினிமித்தம் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம். அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவனே கொலைசெய்யப்படவேண்டும்." எசே: கஅ. உ, "இஸ்ரவேல் தேசத்தைக் குறித்து, பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசுகின்றன என்னும் இந்தப் பழமொழியைச் சொல்லுகிறதென்ன?" இவ்வசனங்களினாலே ஒருவன் செய்தகுற்றம்மற்றொருவனைச் சாராதென்பதே உன்சமயநூற்றுணிபென்று தோன்றுகின்றது.

நாங்கள் முன்னும்பிறந்து கர்மஞ்செய்தோமெனில், நாம் முன்னே இன்னபிறப்பாய்ப் பிறந்தோமென்றும், இன்ன

இன்ன கர்மங்கள் செய்தோமென்றும், நமக்கு விளங்காதிருக்கவேண்டுவது என்னை? என்பாயாகில், அறிவுடனே இருப்பவனொருவன் தன்கையிலிருக்கும் ஒருபொருளைத் தன்வீட்டிலே ஓரிடத்தில் வைத்துவிட்டு, உடனே எங்கேவைத்தேனோ தெரியவில்லையே! என்று தடுமாறுகின்றான். இப்படியாமாகில், கருப்பாசயப்பை உறுத்தலினாலும், அதிற் சலம் பூரித்தலினாலும், உதராக்கினி சுடுதலினாலும், பிரசூதவாயு முரித்துத் தள்ளுதலினாலும், மலையிருத்திக் கொண்டதுபோலவும், கடலின்கண்வீழ்த்தி அமிழ்த்தல்போலவும், இருப்புக் கடத்திலடைத்து நெருப்பாற் சுடுதல்போலவும், மலைமேல்நின்றானைத் தலைகீழாகத் தள்ளுதல்போலவும், வரும் பெருங்கொடுந்துன்பங்களினாலே பெலங்கெட்டு மிகுந்தமயக்கத்தைப் பொருந்தி, ஆலையிலிட்ட கரும்புபோல மாதாவின் யோனித்துவாரத்தினாலே நெருக்கப்பட்டுப் பிறந்த எங்களுக்கு, பூர்வசென்மம் இதுவென்றும், அதிலே செய்யப்பட்ட கர்மங்களிவையென்றும், எப்படித்தெரியும்? தெரியாமையால், பூர்வசென்மம் இல்லையென்று சொல்லுதல்கூடாது. கடவுளானவர் ஆன்மாக்கள் செய்த புண்ணியபாவகர்மங்களைத் திருவுளத்தடைத்து அவைகளை அநுபவித்துத் தொலைப்பித்து முத்தியடைவிக்கும்பொருட்டு அவ்வக் கர்மங்களுக்கேற்ற சுகதுக்கங்களை ஊட்டுவார் என்று சைவாகமங்கள் சாற்றுகின்றன. ஆதலால், நாம் இம்மையிலநுபவிக்கும் சுகதுக்கங்களிரண்டையும் நாம் முன்செய்த புண்ணிய பாவங்களினாலே பெருங் கருணாநிதியாகிய கடவுள் நமக்கு ஊட்டுகின்றாரென்பது சத்தியம்.

அப்படியாமாகில், அரசனானவன் குற்றஞ்செய்தவனொருவனைத் தண்டிக்கும்பொழுது, “நீ இன்னகுற்றம் செய்தமையால் இன்ன தண்டம் பெறுவாய்” என்று அவனுக்கு அக்குற்றத்தை உணர்த்தியன்றோ அவனைத் தண்டிப்பான். அதுபோல, நாம் பூர்வசென்மத்திலே பாவம் செய்தோமாகில், கடவுள் நீங்கள் இன்ன பாவஞ்செய்தமையால் இன்ன தண்டம் பெறுவீர்களென்று நமக்கு உணர்த்தியன்றோ நம்மைத் தண்டிப்பார். அங்ஙனம் உணர்த்தாது தண்டித்தல் நீதியன்றே யென்பாயாகில், அக்கடவுள் இன்ன இன்ன பாவஞ்செய்தவர்கள் இன்ன இன்ன துன்பங்களை அடைவார்களென்று சைவாகமங்களால் நமக்கு உணர்த்துகின்றாரே. இதுகாறும் கூறியவாற்றால், நாம் செய்த கர்மங்களினாலேயே மென்மேலும் பிறந்திறந்து சுகதுக்கங்களை அநுபவிக்கின்றோம் என்பது காட்டப்பட்டது.

ஆன்மாக்கள் தாம் தாம் செய்த புண்ணிய பாவ கர்மங்களினாலேயே பிறந்திறந்து சுகதுக்கங்களை அனுபவிக்கின்றார்களெனில், அவர்கள் ஆதியிலே கடவுளால் படைக்கப்பட்டுச் சுகதுக்கங்களை அனுபவித்தற்கு முன்னே என்னகர்மஞ்செய்திருந்தார்கள்? என்பாயாகில்,பசுக்களும் அப்பசுக்களைப் பந்தித்தபாசமும், அப்பாசத்தை ஒழித்து அப்பசுகளுக்குப் பேரின்பத்தைக் கொடுக்கும்பொருட்டுப் பதியினாலே செய்யப்படும் பஞ்சகிர்த்தியமும் ஆதியல்ல, அநாதியேயாம். பதியைப்போல பசுக்களையும் அநாதியெனில், பதியை ஒப்பில்லாதவரென்றல் கூடாதே என்பாயாகில், நீ ஆன்மாவுக்கு உற்பத்தியுண்டு நாசம் இல்லையெனக் கூறுகின்றாயே; அவ்வழியும், பதியைப்போலப் பசுவை நாசமில்லாததென்கையால், பதியை ஒப்பில்லாதவரென்றல் பொருந்தாதென்று பேசல்வேண்டுமே! பதியும் பசுவும் அநாதிசித்தாயினும், பதி அநாதிமலமுத்தசித்தும், பசு அநாதிமலபெத்தசித்தும்,பதி பசுவுக்குப் பரமுத்தி வியத்திக்குறி அனுக்கிரகம்பண்ணும் சித்தும், பசு அவ்வனுக்கிரகத்தைப் பதியினிடத்தினின்றும் பெறும சித்தும், பதி சிருட்டி சங்கார திதி திரோபாவ பத முத்தி அனுக்கிரகங்களைப் பண்ணுஞ்சித்தும், பசு அந்தப் பஞ்சகிருத்திய பாதந்திரதில் அகப்பட்டுக் கட்டுண்ணுஞ்சித்தும், பதி ஒருவரா லறிவிக்கப்படாது தானே அறியுஞ்சித்தும், பசு சிற்றறிவு போதிவுகளினால் உணர்த்துவிக்க யோக்கியமாகுஞ் சித்துமாயிருத்தலால், பதியை ஒப்பில்லாதவர் என்றல் கூடாதெனபது கூடாது.

பஞ்சகிருத்தியங்களை அநாதி என்றல் எவ்வாறு? என்பாயாகில்; பஞ்சகிருத்தியஞ் செய்யும்பதியும், அப்பஞ்சகிருத்தியங்களில் அகப்படும் பசுவும், அநாதியாமாதலானும் அநாதியாகிய பதி சிலகாலம் வாளாவிருந்து பின்னர்ப் பஞ்சகிருத்தியஞ் செயயத் தொடங்கினரெனில் அவரை நிருவிகாரியென்றல் கூடாமையானும், ஒருவனிடத்தினின்றும் உயிர்ப்புண்டாயொடுங்குதல் சிலகாலஞ் சென்றபின்னர்த் தோன்றுதலின்றி ஓயாது எக்காலத்தும வருதல்போல, பதியினின்றும் உண்டாகும் பஞ்சகிருத்தியங்களும் சிலகாலத்துக்குப் பின்னர்த் தோன்றுதலின்றி ஓயாது எக்காலத்தும் வருமாதலானும், பதி பஞ்சகிருத்தியம் அநாதியென்பதே சித்தம்.

இப்படிப் பிறந்திறந்துழலும் ஆன்மாக்கள் எப்பொழுது முத்தியடையும்என்பாயாகில், பலசென்மங்களிலே நிஷ்காமியமாகச்செய்த புண்ணியங்களினாலே, மந்தம் மந்ததரம் தீவிரம

தீவிரதரம் என்னும் நான்கு சத்திநிபாதங்களும் கிரமமாக வரும். அப்பொழுது கருணாநிதியாகிய சிவன் ஆசாரியமூர்த்தியை அதிட்டித்து, சிவதீக்ஷைசெய்து, முறையே சரியை கிரியை யோகம் ஞானங்களிலே நிறுத்துவர். இந்நான்குபாதங்களின் வழிநின்றவர்கள் முறையே சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுவார்கள். இவைகளெல்லாம், சைவாகமங்களைக் குருமுகமாக வாசிக்கில், தெளிவாக விளங்கும்.

சைவாகமங்களை எனக்கு உணர்த்தல்வேண்டும் என்பாயாகில், அவைகளைச் சிவநிந்தை பண்ணும் புறச்சமயிகளுக்குச்சொல்ல எங்களுக்குச் சிவனுடைய அனுமதியில்லை. ஆதலால், உனக்குச் சொல்வது கூடாது. மத். எ. சு. "நீங்கள் நாய்களுக்குப் பரிசுத்தமானதை இடாதிருங்கள்; பன்றிகளுக்குமுன் உங்கள் முத்துக்களைப் போடாதிருங்கள்; இவைகள் அந்தமுத்துக்களைக் கால்களால் உழக்கி, திரும்பி உங்களைப் பீறும்." என்னும் வசனத்தை நீ மறந்தனைபோலும். அது நிற்க, சைவர்களுள்ளும் எல்லாரும் சைவாகமங்களை வாசித்தற்கு அதிகாரிகளல்லர். சைவாகமங்களில் கிரியாகாண்டத்திற்குச் சமய தீக்ஷையோடு விசேஷ தீக்ஷையும் பெற்றவர்கள் அதிகாரிகளாவர்கள். மற்றை ஞானகாண்டத்திற்கு அவ்விரண்டோடு நிர்வாண தீக்ஷையையும் பெற்றவர்களே அதிகாரிகளாவார்கள். அதிகாரமுள்ளவர்களும் குருவின்றித் தாமே வாசிக்கப்புகுதல், ஆயுத பரீக்ஷை இல்லாதவர்கள் குருவின்றி ஆயுதங்களைப் பரீக்ஷிக்கப் புகுதல் தம்மைத் தாமே சேதித்தற்கு ஏதுவாமாறுபோல தம்மைத்தாமே கெடுத்தற்கு ஏதுவாகும். ஆதலால், அவர்கள் சைவாசாரியரை அடைந்து வழிபட்டு, அவ்வாகமங்களைப் பூசித்து வாசித்தல் வேண்டும். அவர்களல்லாத சமயிகள், தாம் செய்ய வேண்டுவனவற்றையும் விலக்கவேண்டுவன வற்றையும் அறியாது கெட்டுப் போகலாமா? என்பாயாகில், அவர்கள் சைவாசாரியர்களை அடைந்து வழிபட்டு, தங்கள் தங்கள் பக்குவத்துக்கேற்ப அவர்கள் போதிப்பனவற்றை அறிந்து, அவ்வாறே நடக்கில் ஈடேறுவார்கள். யூதர்களெல்லாரும், தங்கள் சமய சாத்திரத்தை ஆசாரியர் ஆலயத்திலே வைத்துப் பூசித்து இன்னது இன்னது செய்யல் வேண்டுமென்று தங்களுக்குப் போதிக்க, அறிந்து அவ்வாறே நடந்தார்களென்று அந்தச் சாத்திரத்திலே சொல்லப் படுகின்றது. அங்ஙனமன்றி, அவர்களெல்லாரும் அதை எழுதிவைத்து வாசித்தார்களென்று தோன்றவில்லை. இன்னும், யேசுவுடைய சீடர்களுஞ் சனங்களும் இன்

ணது இன்னது செய்யல்வேண்டும் என்று வாய்மொழியாக உபதேசித்தார்கள். தூரதேசத்தாருக்கு நிருபங்களை எழுதியனுப்பினார்கள். அங்ஙனமன்றி, தங்கள் சமய சாத்திரத்தைச் சகல சனங்களுக்குங் கொடுத்தனுப்பினார்களென்றும், அவர்கள் வாசித்தார்களென்றுங் காணப்படவில்லை.

பாதிரியே! நீ இவைகளைப் பக்ஷபாதம் இன்றி ஆராய்ந்தறிந்து, எங்கள் சைவத்தைத் தூஷியாமல் அடங்கியிருக்கக் கடவாய்.

---

5233
(6466)

# சூசனம்.

சனங்களே!

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூலமலகாரணத்தினாலே கன்மானுசாரமாக உண்டாகும் பிறப்பு, அண்டசம் சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என நால்வகைப்படும். அவைகளின் விரி எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதமாம். இவ்வாறுள்ள யோனிகளுள், இதரயோனிக ளெல்லாவற்றையும் போகத்தினாலும் பிராயச்சித்தாதிகளினாலும் நீக்கி, மனுஷிய ஜன்மத்திலே வருதல் மிகுந்த அருமையாம். அவ்வருமை, ஆராயுங்காலத்து, சமுத்திரத்தைக் கையினாலே நீந்திக்கரை பெறுதல்போலாம். இப்படிப்பட்ட மனுஷியஜன்மத்தை எடுப்பினும், சாத்திரமணமும் வீசாத மலைகளிலும் வனங்களிலும் குறவர் மறவர் முதலியோர்களாய்ப் பிறவாது சாஸ்திரங்கள் வழங்குந் தேசங்களிலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அதினும், சிவப்பிரணீதமாகிய வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தைவிட்டு, அவை வழங்கும் ஆரியதேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம். அதினும், வேதாகமவாகிய பரசமயிகள் வயிற்றிலே பிறவாமல், சைவசமயிகள் வயிற்றிலே பிறப்பது மிகுந்தபுண்ணியம். இப்படி மிக அருமையாகப் பெற்ற மனுஷிய ஜன்மத்தினால் வரும்பயன் சற்குருலக்ஷணம் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து, சிவதீக்ஷைபெற்று சைவாகமவிதிவழியொழுகி, சிவனை வழிபட்டு, பரமபுருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலேயாம்.

இந்த அவசிய கர்த்தவ்விய சிவபுண்ணியத்துக்கு இன்றியமையாக் கருவியாகிய இம்மானுட ஜன்மத்தைப் பெற்றும், அப்பெரும் பயனை அடைதற்குச் சிறிதும் முயலாதுவிட்டு சிவசாஸ்திரப் பொருள்களைக் குருவருளினாலே யதார்த்தமாக அறியாது விபரீதமாக அறிதலாகிய பிராந்தியினாலும், அச்சிவ சாஸ்திரங்களைச் சிறிதும் அறியாமையாகிய மோகத்தினாலும், பரசமயாபிமானிகளைப் பிரீதிப்படுத்தி, வயிறுவளர்க்க விரும்புதலாகிய லோபத்தினாலும், முன்னே சுவீகரிக்கப்பட்ட குற்சிதசமயத்தின் மேற்கொண்ட துராக்கிரகமாகிய மதாபிமானத்தினாலும், இளமையிலே புறச்சமயிகளோடு பரிசயஞ் செய்தமையால் வந்த துர்வாசனையின் அனுவிருத்தியினாலும், உங்கள் வாணாளை வீணாளாகப் போக்கி, நரகத்தில் விழுந்து அதிதீவிரவேதனைப் பட்டு உழல்வதற்கு உபாயம் தேடுகின்றீர்களே!

இவ்வாறே நாங்கள்கூறிய பரம புருஷார்த்த மாகிய பேரின்பத்தைப் பெறுதற்கு முயலாது, வியர்த்தமாகிய இம்

மைச் சிற்றின்பத்தை நுகர்தற்குக் கருவியாகிய செல்வமே பொருளென்று மயங்கி உலைகின்றீர்களே! நீங்கள் பெறக்கருதிய சிற்றின்பத்தினிழிவு இப்படிப்பட்டதென்பதை ஈண்டுத் தெளிவீராக.

"அடுகரி தொடரவீழ வைந்தலை நாகங் காண
விடுகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடவவ்வேரைக்
கடுகவோ ரெலியும்வந்து கறித்திட வதனின் மேற்றேனுக்
கிடைதுளி நேனக் கின்பம் போலுமிப் பிறவியின்பம்"

என்று முன்னோர் கூறிய செய்யுளைக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள்; இவ்வகை இழிவுடைத்தாகிய சிற்றின்பத்தை அநுபவிக்கும் வழியும், சிவனை வழிபட்டு முத்தியடைதற்குக் கருவியாகிய இத்தேகம் இன்னும் வழிபடுதற்கு ஆரோக்கியமாய் நிற்கும்பொருட்டு எனக்கொண்டு அனுபவித்தல் வேண்டும்; அச்சிற்றின்பத்துக்கு நிமித்தமாகிய செல்வத்தைத் தேடும் வழியும், சமயத்துரோகம் கொலை களவு பொய்ச்சான்றுரைத்தல் விசுவாசகாதம்முதலிய பாதகங்களின்றித் தேடல்வேண்டும். நீங்கள் இங்ஙனம் செய்யாது, சற்சமயமாகிய சைவத்தை விட்டு,சிவதூஷணம் சிவசாஸ்திரதூஷணம் முதலியஅதிபாதகங்களைசெய்யும்பாதிரிகளால் மருட்டப்பட்டு,அவர்களுடைய துர்ச்சமயமாகிய கிறிஸ்து சமயப் படுகுழியில் வீழ்ந்து, அதன் வழியாகப் பொருளும்புகழும் தேடமுயன்று,அவர்களோடொத்த அதிபாதகிக ளாகின்றீர்களே! இம்மையில் எளிதிற்பெறப்படுவன வாகிய மிகச்சிறிய பொருளையும் போலிப்புகழையும் குறித்தும், சைவத்தின்மேலே பாதிரிகளேற்றும் தூஷணத்தினாலே மதிமயங்கியும், எம்மையினும் பெறுதற்கரிய பெருஞ்சிறப்பினதாகிய ஆன்மலாபத்தை இழந்துவிடாது உய்யும்பொருட்டு, சைவதூஷணபரிகாரம் என்னும் இந்நூலைப் பக்ஷபாதமின்றிச் சித்தசமாதானத்துடனே பல்முறை வாசித்து ஆராய்ந்து பார்த்து, அப்பாதிரிகள் ஏற்றிய தூஷணங்களெல்லாம் பொய்யென்பதைத் தெரிந்து, வேளாண்மை வாணிகம் இராசசேவை முதலிய தொழில்களாலும், அவை கூடாக்கால் யாசனத்தினாலும் சீவித்துக்கொண்டு அநிருதம் பூர்வாபரவிரோதம் முதலிய தோஷங்கள் ஒன்றுமின்றி, யதார்த்தமாய் விளங்கும் சைவத்தின் வழிநின்று, நித்தியானந்த முத்தியைப்பெற முயலக்கடவீர்கள். அதனை இன்னுமொரு பிறப்பிலே அடைகுவமெனின், ஐயையோ, இப்பிறவி தப்பினாலெப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ! தெரியாதே! இப்பிறப்பிற்றானே இன்னுஞ் சிலநாட் சென்றபின் அடைகுவ

மெனின், இப்பிறவிநீங்கும் எல்லை இதுவென்று தெரியாதே; இங்ஙனமே;

> "உலகத் தீரே யுலகத் தீரே
> நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
> சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்
> மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை
> ஐம்பதி ரவி லகலுந் துயிலினால்
> ஒட்டிய விளமையா லோரைந்து நீங்கும்
> ஆக்கை யிளமையி லைம்மூன்று நீங்கும்
> எழுபது போகநீக் கிருப்பன முப்பதே"

அவற்றுள்,

> "இன்புறு நாளுஞ் சிலவே யதாஅன்று
> துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்
> பெருக்காறொத்தது செல்வம் பெருங்காற்
> றிடிகரை யொத்த திளமை யிடிகரை
> வீழ்மர மொத்தது வாழ்நா ளாதலால்
> ஒன்றே செய்யவும் வேண்டு மொன்றும்
> நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்
> இன்றே செய்யவும் வேண்டு மின்றும்
> இன்னே செய்யவும் வேண்டு மின்னும்
> நாளை நாளை யென்பீ ராகில்
> நம்முடை முறைநா ளாவது மறியீர்
> நம்முடை முறைநா ளாவது மறியீர்
> எப்போ தாயினுங் கூற்றுவன் வருவான்
> அப்போ தந்தக் கூற்றுவன் றன்னைப்
> போற்றவும் போகான் பொருளொடும் போகான்
> சாற்றவும் போகான் றமரொடும் போகான்
> நல்லா ரென்று நல்குர வறியான்
> தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
> தரியா னொருகணந் தறுக ணாளன்."

எனப் பெரியோர் கூறினர். ஆதலால், இச்சரீரமுள்ள பொழுதே, மேற்கூறியவாறே முத்தியடைய முயலக்கடவீர்கள்.

## சைவதூஷண பரிகாரம்

முற்றுப்பெற்றது.